ரிஜிஸ்டர் நெ. 2041

குடி அரசு

தனிப்பிரதி விலை ஒரு அணா

வருட சந்தா முன்பணம்	— ரூ.	3—0
6-மாத சந்தா ,,	— ,,	1-12
வேளி நாட்டிற்கு ,,	— ,,	4—0

ஞாயிறுதோறும் வெளிவருவது.

ஆசிரியர், ஈ. வெ. இராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு தனி விசித்தம்

மாலை 7 | ஈரோடு, பிரஜோத்பத்தி ஆவணி 21உ (6—9—1931) | மலர் 19

கவனியுங்கள்!

கவனியுங்கள்!!

ஆயிரக்கணக்கான நற்சாட்சி பத்திரங்களும், தங்க மெடல்களும் பரிசுபெற்றது,

டாக்டர் சிங்காரம் அவர்களின்

உலகப்பிரசித்திபெற்ற உண்மையான மருந்துகள்.

காமகேசரி குளிகை.

(தங்கபஸ்பம் சேர்ந்தது)

தாதுபுஷ்டிக்கு கைகண்ட மருந்து.

இம்மாத்திரைகள் தாதுபுஷ்டியையும் தளர்ந்த நரம்புகளைக் கெட்டிபடுத்துவதிலும் பிரசித்தி பெற்ற பலவித யூனானி சரகருகளும் அசல் தங்க பஸ்பமும் சேர்த்து சாஸ்திர முறைப்படி தயார் செய்யப் பட்டது.

வயது சென்றதாலும், மிதமிஞ்சிய சம்போகத்தாலும், பலவித துர் அப்பியாசங்களாலும் இழந்து போன ஆண் தன்மையானது இம்மாத்திரைகளை சாப்பிட ஆரம்பித்தவுடன், மீண்டும் அதிகரிக்கச் செய்கிறது. பலக்குறைவு, கைகால்அசதி, சோம்பல், இடுப்புவலி, சம்போக காலத்தில் ஏற்படும் நரம்புத்தளர்ச்சி, துரிதஸ்கலிதம், சொற்பனஸ் கலிதம் முதலிய கொடிய வியாதிகளைப்போக்கும். சரீர புஷ்டியும், திரேககாந்தியும், வீரிய விருத்தியும், மிகுந்த ஆண் தன்மையும் உண்டாகும். தளர்ந்த நரம்புகளைக் கெட்டிப்படுத்தி இல்லர இன்பத்தை முற்றிலும் அனுபவிக்கச் செய்யும். யாதொரு பத்தியமில்லை.

80 மாத்திரைகள் விலை ரூ. 10—0—0
40 மாத்திரைகள் விலை ரூ. 5—8—0

மஹா சந்தனாதித் தைலம்.

(ஓர் யோகீஸ்வரரின் அனுபவ முறை)

இத் தைலத்தில் அநேகவித பச்சிலை மூலிகைகள் சேர்ந்திருப்பதால் சரீரத்திலுள்ள உஷ்ணத்தையும் நீக்கிக் குளிர்ச்சியைக் கொடுப்பதுடன் கண்களில் உண்டாகும் பலவித வியாதிகளையும் ஆச்சரியமாய் குணம் செய்கிறது. கண் பார்வை குறைவாயிருந்த அநேகருக்கு இந்த தைலத்தின் உபயோகத்தினால் நல்ல பார்வை ஏற்பட்டிருக்கிறது.

கண் எரிச்சல், கண்ணில் நீர்வடிதல், கண் கூச்சம், கண்குத்தல் சதைவளர்தல், மேகநீர் வெள்ளெழுத்து, மண்டையிடி, ஒருத்தலை நோய், பீனிசம், காதுநோய், காதுமந்தம், சரீரத்தில் அதிக உஷ்ணத்தினால் உண்டாகும் திரேக காந்தல், கிருகிருப்பு, மயக்கம், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல், மூளைகொதிப்பு, நித்திரை யின்மை, தலைமயிர் உதிர்தல் முதலிய சகலவித நோய்களையும் குணம் செய்வதுடன் சரீரத்திலுள்ள எவ்வித உஷ்ணத்தையும் நீக்கி கண்களுக்கும், மூளைக்கும் குளிர்ச்சியைக் கொடுக்கும்.

இத்தைலத்தை ஆண், பெண் யாவரும் ஸ்நானம் செய்யலாம். இத்தைலத்தை உபயோகித்தவர்கள் புகழ்ந்து எழுதும் கடிதங்கள் நாள்தோறும் வந்து குவிகிறது. ஒரு முறை இத்தைலத்தை உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும்.

24 அவுன்ஸ் டின் விலை ரூ. 4—0—0
12 அவுன்ஸ் டின் விலை ரூ. 2—2—0

வி. பி. தபால் சிலவு பிரத்தியேகம். முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்குக் கேட்லாக் இலவசமாய் அனுப்பப்படும். மலாய் நாட்டு வாசிகள் ஆர்டருடன் 5 ரூபாய் அனுப்பவும்.

டி. சி. சிங்காரம் அண்டு கோ,

சித்த ஆயுர்வேத வைத்தியசாலை, தெப்பக்குளம் போஸ்டு, திருச்சினாப்பள்ளி.

அரசாங்க இஞ்சினீயர்களில் 14 பேர்களாலும், மற்ற பிறபலர்களாலும் மதிக்கப்பெற்ற

"மோட்டார்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சி முறையும்".

50 படங்களுடன் 200 பக்கங்களடங்கிய புஸ்தகம் விலை ரூ. 2. தபால் செலவு வேறு. வெளிநாட்டு ஆடர்களுக்கு முன்பணம் அனுப்ப வேண்டும். ஏஜண்டுகள் தேவை.

மோட்டார் ஸ்கூல் 1916ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது. இதில் 3 மாதத்தில் மோட்டார் டிரைவிங் அண்டு மெக்கானிசம் கற்றுக்கொடுத்து கவர்ன்மெண்ட் லைசென்ஸும், பாட்சாலை சர்டிபிகேட்டும் கொடுக்கப்படும்.

தென் இந்தியா மோட்டார் இஞ்ஜினீரிங் ஒர்க்ஸ்,
மைலாப்பூர், சென்னை

வேளிவந்து விட்டது! வாங்கத்தவராதீர்கள்!!

முந்துங்கள்!!!

நாளது ஆகஸ்டுமீ 15க்குள் நடக்கும் பொது எலெக்ஷனுக்கு முன் வாங்குங்கள்!

புதிய பஞ்சாயத்துகளுக்கும், தாலூகா போர்டுகளுக்கும், டிஸ்டிரிக்ட்டு போர்டுகளுக்கும், இவைகளின் மெம்பர்களுக்கும், ஆங்கிலமறியாத பொது ஜனங்களுக்கும் வெகு முக்கியமான

சென்னை லோக்கல் போர்டு ஆக்டு.

(1930ம்வரு வரையிலுமுள்ள சீர்திருத்தங்களுடன் கூடியது)

மிகவும் துல்லியமானதும் எளிதில் புரியும் படியான அழகிய தமிழில்

M, S. பார்த்தசாரதி அய்யங்கார், B. A., B. L.,

(வக்கீல், அகில இந்தியா லா ஜர்னல் பத்திராசிரியர் திருவள்ளூர்) அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. சொற்ப காப்பிகளே எம்மிடம் உள்ளன.

விலை ரூபா 2—0—0. வி.-பி. செலவு ரூ. 0—6—0

மானேஜர்,

குடி அரசு புத்தகசாலை, ஈரோடு

இனம்! இனம்!! இனம்!!!

முந்துங்கள்! 1000 முந்துங்கள்!!

மக்களால் வாசிக்கப்பட்ட

ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்கவிளா

படித்து எளிதில் பேச, எழுத, வாசிக்க கற்றுக்கொள்ளுங்கள். (முதல்பதிப்பில் சொற்ப கோர்ஸ்கள் தான் கைவசம்)

தமிழ் வாசிக்க தெரிந்த யாவரும் 1-7 கோர்ஸ்களடங்கிய பாடங்களை தபால் மூலம் 30 நாட்களில் வாசித்துக் கொள்ளலாம். வியாபாரிகள், தொழிலாளிகள், ஆபீஸ் சிப்பந்திகள், கிராம உபாத்திமார்கள், பாடசாலை மாணவர்களுக்கு அதிக பிரயோஜமானது. ஏழை மக்களுக்கென்றே எழுதப்பட்டது. பீஸ் ரூ. 5—0—0 புதுவாழ்க்கை திவ்வியரஹஸ்ய புஸ்தகங்கள் சொற்ப காலம்வரை இனம்.

அட்மிஷன் பாரம்

டைரக்டர்,

அன்பையன்ஸ் கேம்பிரிட்ஜ்

இன்ஸ்டிடியூட் ஆறுமுகநேரி S. I. R.

ஐயா,

இத்துடன் ரூ. 5. அனுப்புகிறேன். என்னை ஓர் மாணவராகச் சேர்த்து ஸ்பெஷல் இங்லீஷ் கோர்ஸ்கள் பூராவையும், இனம் புஸ்தகங்களோடு அனுப்பவும் எனக்கு அனுப்பப்படும் பாடங்களை பிரயாசைப்பட்டு வாசித்து வருவேனாகவும்.

தெளிவான விலாசம்.....

கையெழுத்து

N. B. அயல்நாட்டு மக்கள் காலதாமதமாகாதபடி ரிஜிஸ்டர் மூலம் தொகை அனுப்பவும்.

பி. எம். சி. லிங்கத்தின்

சுவாச காச நிவாரணி.

48-வேளை, மருந்தின் விலை 1—4—0

விபரங்களுக்கு எழுதவும்.

மருந்து கிடைக்குமிடம்:—

திருநாவுக்கரசு மெடிகல் ஹால்,
சேவ்வாய்பேட்டை, சேலம். தென்னிந்தியா.

மதராஸ், சோல் ஏஜண்டு:—

தாதா & Co., 52 நைனியப்ப நாயகன் தெருவு மதராஸ்.

சுயமரியாதைச் சமத்துவப் பாடல்கள்.

சுயமரியாதைக் கொள்கைகளை நன்கு விளக்கி அவைகளின் முன்னேற்றத்திலேயே சுயராஜ்யத்தையுமடைய முடியும் என்ற விவரத்தைப்பல பாடல்களாலும் வசனங்களாலும் விளக்குவதிது. விலை அணா 0—2—6 ஒரு பிரதி வேண்டுவோர் 3 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

குடிகாரர் மகாநாடு.

ஹாஸ்யமுறையில் மதுவிலக்கின் அவஸ்யத்தை வற்புறுத்துவதிது. விலை அணா 1½ ஒரு பிரதி வேண்டுவோர் 2 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

ஜே. எம். கிருஷ்ணமாச்சாரி.
சமத்துவப் பிரசுர நிலையம், தெற்குமாசிவீதி, மதுரை.

"சன்மார்க்கன்"

உயரிய தமிழ்
மாதப்பத்திரிகை.
ஆண்டுசந்தா.
உள்நாடு ரூ. 1—0—0.
வெளிநாடு ரூ. 1—4—0.
ஆசிரியர் (காவலூற்று)
சி. சுவாமி சிவதேசம்,
"சன்மார்க்கன்" பழனி.

சித்த ரசம்.

சகலவியாதிகளுக்கும் ஏற்றது
ஒரு முறை பரீட்சியுங்கள்.
புட்டி 1க்கு ரூ. 1—0—0
டஜன் 1க்கு ரூ. 10—0—0
ஏஜண்டுகள் தேவை
அன்னிய நாட்டார் முன்பணம்
அனுப்புக
சி.பி. சாமி, சித்தமருந்து
செய்சாலை பழனி S.I.

நீதிக்கும் நியாயத்திற்கும் அர்த்தமற்ற சாஸ்திரங்களே ஆதாரமாக விருக்கின்றன.

(கைவல்யம்)

சாஸ்திரமென்று சொல்லப் படுவதாலேயே எல்லா விஷயங்களும் முடிவடைந்து விட்ட தென்று நினைக்கிறோம். 'வேதம் கடவுளால் சொல்லப்பட்டது போல வே சாஸ்திரங்களும் கடவுளைத்தெரிந்த ரிஷிகளால் எழுதப்பட்டதால் அவைகளும் முடிவடைந்தவைக ளாகவே நினைக்கவேண்டும். இல்லை யேல் அவன் நாஸ்திகனவான்' என்று அந்த சாஸ்திரங்களிலேயே எழுதி முடித்திருப்பதைக்கண்டு பயந்து அங் கேயே தங்கிவிட்டோம். அதற்கு மேல் செல்ல நமக்கு உரிமையில்லை என்று கருதிக்கொண்டு அவற்றைப் பற்றி சிறிதும் ஆலோசித்துப் பார்க் காமல் அதிலையும் தலைப்படுத்திக் கொண்டோம்.

இவ்விதமான தடையாலும், அறி வின்மையாலும் வற்றிப்போன உயி ரினங்கள் ஜனசமூகம் இயற்கை யின் தன்மையாலும் இப்பொழுதிருக் பட்டிருக்கும் சௌகரியங்களாலும் வளர்ச்சியடைந்து இப்போது உலக சமத்துவத்தையும் வளர்ச்சியையும் நாடுகிறது. இதன் பயனாய் அவற் றிற்கு எதிரிடையாக இருக்கும் ஜாதி கட்டுப்பாடுகளையும் அதற்கு ஆதார மாக விருக்கும் சாஸ்திரங்களையும் புத்தி விசாரித்துப் பார்க்கிறது அப்பொழுது அதற்குள் புதைந்து கிடக்கும் தன்னலங்கொண்ட எத் தாடுகள் புலப்படுகின்றன. அதனால் இதுவரை நாம் நம்பிக்கொண்டிருந்த சாஸ்திரத்தினால் கற்பிக்கப்பட்ட வைகள் அசம்பாவிதமும் அறியாமை யுமென்று நமது புத்தியே நமக்குத் தெரிவிக்கின்றன. அது எப்படி என்பதற்குக் கீழே ஒரு திருஷ்டாந் தத்தைச் சொல்லுகிறேன்.

நமது தென்தேசத்தில் உள்ள ஒரு சில கோவில்களில் வாணியர்கள் என்னும் சமூகத்தாரை விடுவதில்லை. அந்தக் கோவிலகளில் எல்லாரைப் போல தங்களுக்கும் உரிமை உண் டென்று வாணியர்கள் நடத்தின விவகாரங்கள் தோல்வியுமடைந்தன. தோல்விக்கு ஆதாரமாக 'எள்ளைக் கசக்கி எண்ணெய் எடுக்கும் தொழி லே சாஸ்திரம் கண்டித்து ஒதுக்கியி ருக்கிறது. அதனால் எள்ளைக்கசக்கி எண்ணெய் எடுக்கும் வாணியர்கள் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் என்று மனு ஸ்மிருதியும் சொல்லியிருக்கிறது. அதனால் வாணியர்களுக்குக் கோவில் பிரவேச உரிமையில்லை' என்று தீர் ப்பில் நியாயாதிபதியும் சொல்லிவிட் டார்.

ஐயா தெய்வபக்தியுடையவர்களே! பண்டிதர்களே!! சாஸ்திரிகளே!!! ஆங்கில பட்டதாரிகளே!!!! கோவில் கும்பாபிஷேக அதிகாரப் பிர க் களே!!!!! இந்த நியாயத்தையும் இத ற்கு ஆதாரமாக விருக்கும் சாஸ்திரங் களையும் சற்று ஆலோசித்துப் பாருங் கள். சைவ வைணவ மதக்கொள்கை யின்படி நடந்து மூற்று பெறும் ஆத் ம தத்துவத்தை உணர்த்தும் பார மார்த்திக அனுஷ்டான ஆகம சாஸ் திர சித்தாந்த சாஸ்திர விதிச்சும் தேக போஷணை தன் மேன்மை முத லிய உலக விஷயத்தில் தன் சௌ கரியத்திற்காக சிறுவன் சிறுமி முத ல் தன்னையுயர்த்திக்கொண்டும் மற் றைய ஜாதிகளில் உயர்ந்த கல்வியை போ பாரமார்த்திக முடிவையோ அ டைந்திருந்தாலும் ஜாதியென்ற கொ ள்கையால் யாவராயினும் அவர்களைத் தாழ்த்தி வைக்கும் வைதீகஸ்மார்த்த மதத்தின் மனுஸ்மிருதிதான் பிர மாணமா? தென்தேசத்தில் கட்டப பட்டிருக்கும் சைவ வைணவ ஆகம விதிப்பிரகாரம் எற்பட்ட கோவில் களுக்கு கோவிலேப்பற்றி ஒன்றுமே யில்லாத மனுஸ்மிருதி மேற்கோளாக விருந்தால் கோவில்களிலுள்ள ஆகம விதிகளுக்கு நியாயமுண்டா என்ப தை ஆலோசித்துப்பாருங்கள். சைவ வைணவ ஆகமக்கொள்கையையும் ஸ்மார்த்த தரும சாஸ்திரத்தையும் ஒன்றுய்க் குழப்பித் தாங்களும் ஒரு சமயத்தின் கொள்கைப்படி முடிவ டையாமல் உலக சம்மதமாய் சமய உண்மையின் நோக்கச் சீர்திருத்தத் தில் குறுக்கிட்டு ஜாதிமதம்கொண்டு கர்வித்து நிற்கும் ஆஸ்திகர்களே நாமும் நமது 'தெய்வங்களும்' என் ணெய் பில்லாதபடி எப்படி வாழ முடியும் என்பதை ஆலோசித்துப் பார்த்தீர்களேயானுல் நமது சாஸ்தி ரங்களின் விதியின் ஆபாசமும், அச ம்பாவிதமும் விளங்குவதோடு நம்மு டைய புத்தியில்லாத் தன்மையும் விளங்கி நாம் சாஸ்திரத்தின் பேரால் செயதுவரும் கொடுமையும விளங்கி நாம் என் 1000க்கணக்கான வருஷ ங்களாய் அடிமைகளாய் இருந்த வரு கிறோம் என்பதும் விளகிவிடும்.

எள்ளைக்கசக்கி எண்ணெய் எடுப் பவன் பிரஷ்டன், தாழ்ந்த ஜாதியான் எனகின்றோம். ஆனுல் உயர்ந்த ஜாதிக்காரராகிய நமக்கும் நமது தெ ய்வங்களுக்கும் எண்ணெய் அவசியம் வேண்டியவை என்பதில் யாரும் ஆ க்ஷேபம் சொல்ல முடியாது. நெல்லு தவரை கடலையும் உண்டான பொ ழுதே எள்ளுமுண்டாயிருக்கவேண் டும். இவையெல்லாம் நவ தானியங் களில் சேர்ந்தவை. ஆகவே நவ தானி யங்களினுல் தவரை கடலைகளைக் கசக்கி அரிசி பருப்பாக்கினவன் 'பிரஷ்டனல்ல' எனலுக்கு மனுதரும சாஸ்திரம் ஒரு ஜீவனைக் கற்பத்தால் நெல்லுக்கும் தவரைக்கும் ஜீவனைக் கற்பிக்கவேண்டும். அப்படியுமில்லை. அரிசிபருப்பு நமக்கும் நமது தெய்வத் திற்கும் முக்கியமாக விருப்பதுபோல் எண்ணெயும் முக்கியமானதாகவே யிருக்கிறது. அரிசியும் பருப்புமில் லாமல் நமது தெய்வங்கள் வாழ்ந் தாலும் வாழலாம். எண்ணெய்யில்லா விட்டால் நமது கோவில்களும் அதி லுள்ள நமது தெய்வங்களும் வாழவே முடியாது. எண்ணெய்க்கொத்தில் லாவிட்டால் கோவில் சித்திரப்பணி கள் செம்மைப்படா, எண் ணெ ய்க்காப்பில்லாவிட்டால் விக்கிரகங்கள் உருக்குலைந்துவிடும். விளக்கிற்கு எண்ணெய்யில்லாவிட்டாக்கோவிலே இருளடைந்துவிடும். ஆகவே எண் ணெய்யில்லையானுல் நமது கோவில், அதிலுள்ள விசேடத்திருப்பணிகள் தெய்வவிக்கிரகங்கள் முதலிடை களெல்லாவிசேடத்தோடிருக்க முடி யாது. ஆகையால் எண்ணெயை உண்டுபண்ணின வாணியர்கள் நமது கோவில் சித்திரம் தெய்வம் முதலிய வைகளுக்குப்பெரும் உதவி புரிந்து அவைகள் கெடாதபடி உதவிபுரிந்த வர்களாகவிருக்கிறார்கள் என்பது பிரத்தியட்சமாகும். அப்படியிருக்க எள்ளைக்கசக்கி எண்ணெய் எடுப் பவர்கள் பிரஷ்டர்கள் என்றும் அவர் களால் உண்டாக்கப்படும் எண்ணெய் யாலே காப்பாற்றப்படும் கோவிலுக் குள் போகப்படாதென்றும் சொல்லு வது நியாயமா என்பதையும் ஆலோ சித்துப்பாருங்கள். எண்ணெய்யை யும் எண்ணெய்யைப் பயன்படுத்திக் கொள்ளுகிறவர்களையும் எண்ணெ ய்யை எடுப்பவனைப்போல பிரஷ்டம் கற்பித்து கோவிலுக்குள் விடாம விருத்தால் நியாயமான யோக்கியச் செய்கையாகும். அப்படிக்கில்லாமல் எண்ணெய் அவசியம் வேண்டும். அதை உண்டு பண்ணுவதால் அவன் தாழ்ந்த ஜாதியான் என்று சாஸ்திரம் சொல்லுமானுல் இது என்ன சாஸ் திரம். 'நியாயமில்லாததை சாஸ்திரம் சொல்லுமா? சாஸ்திரம் சொன்னவர் கள் ரிஷிகளாயிற்றே' என்று சொல் லும் வார்த்தைகள் அறிவுக்குப்பொரு ந்துமா?

சாஸ்திரங்கள் என்று சொல்லப் பட்டவைகளில் பல தன்கொள்கை களுக்கும் தங்கள் மேன்மைக்கும் தனிப்பட்ட பாத்திரைகளுக்கும் எழு தப்பட்டபாகங்கள் போக மற்ற பல ரிஷிகளால் எழுதப்பட்டவைகளல்ல வென்று ஸ்தாபிக்க சான் வக்தவ னன்று. சாஸ்திரங்களென்று சொல் லப்பட்டவைகளின் நியாயங்களையும், தன்மைகளையும் ஆலோசித்துப்பார் த்து உண்மையான வற்றை உறுதிப் படுத்த வேண்டுமென்றே கேட்டுக் கொள்ளுகிறேன்.

சாஸ்திரம் செய்தவர்கள் ரிஷிகள். அவர்கள் ஆரண்யத்திலிருந்தார்கள். ஆரண்யத்திலிருந்து சாஸ்திரங்கள் செய்தமையால் வேதத்தின் முக்கிய பாகத்திற்கு ஆரண்யமென்கிற பெயர் உண்டாயிற்று. ரிஷிகளின் ஆகா ரம் கந்தமூலங்கள். தெய்வம் ரூப மில்லாத பிரம்மம். உபாசனை, மூர்த் தியோ சூரியன், அக்கினி, தண்ணீர், கோவிலோ மலைச்சாரல் ஆற்றோரம். இயற்கை ஆதாரமாக உடையவர் களுக்கும் அதைப்பின்பற்றுகிறவர் களுக்கும் எண்ணெய் எதற்கு? சடை முடியுடையவர்களுக்கு எண்ணெய் காப்பிடுவதும் கஷ்டம். தலைதாம்பு கிழங்கு பழம் சாப்பிடும் ரிஷிகளுக்கு வருவல், பொரியல், தாளித முதலி யனவைகள் வேண்டியதில்லை. சூரி யன், தண்ணீர், நெருப்பு முதலிய அவர்களது தெய்வங்களுக்கும் எண் ணெய் வேண்டியதில்லை. தர்ப்பணம் செய்ய எள்ளுவேண்டியிருக்கலாம். அந்த எள்ளு அப்பொழுது அவர்கட் குக் கிடைப்பதும் கஷ்டமாகயிருக்க லாம். எள்ளுக்குள் எண்ணெய்யிரு ப்பதைத் தெரிந்திருக்கலாம். எண் ணெய்யின் உபயோகத்தை அவர்கள் ஆலோசித்துப் பார்க்காமலிருக்கலாம். அந்த எள்ளைக்கசக்கி அவர்கள் தர்ப் பணத்திற்கு உபயோகப்படாமல் செ ய்திருக்கலாம். அல்லது எள்ளை ஆட்டி எண்ணெய் எடுப்பதைக்கேள் விப்பட்டு எள்ளுக்கே பஞ்சம் வந்து விடுமேயென்று பயந்திருக்கலாம். அப்பொழுது எள்ளைக் கசக்கி எண் ணெய் எடுக்கிறவன் பிரஷ்டனென் று எழுதியுமிருக்கலாம். அந்த சாஸ்திரம் வருவல், பொரியல், தாளி தம், வாரத்திற்கு இரண்டு தரம் ஸ்நானம் முதலியவற்றால் உலக சுக ங்களையும் தேக பாதுகாப்பையும் அனு பவித்து ஊரில் வாழும் மனிதர்களுக் கும் அவர்களைப்போலவே புளியோத ரை முதற்கொண்டு உண்டு தினமும் எண்ணெய் ஸ்நானம் செய்து ஊரி லேயே வாழும் நமது தெய்வங்களுக் கும் எண்ணெய்யில்லாமல் எப்படி முடியும்? சைவ வைணவக்கோவில் களுக்குத்தான் அதன் ஆகமப்படி எண்ணெய்யில்லாமல் வாழமுடியுமா? எண்ணெய்யில்லாத ரசாயனப்பொரு ளும் மின்சார விளக்கும் ரிஷிகள் தான் கண்டு பிடித்தார்களா? அதுவு மில்லை. நமக்கு வேண்டிய பொருள் கள் மூலப்பொருள்களைக் கசக்காம லுண்டாவதுமில்லை. அப்படியிருக்க எள்ளைக் கசக்குகிறவன் எப்படி தாழ் ந்த ஜாதியானுவான்? எள்ளைக் கச க்குகிறவன் பிரஷ்டனென்றுல் பிரஷ் டனென்று சொல்லக்கூடாத ஜாதி எதாவதுண்டா? கடவுளைக்கூட முதற் பிரஷ்டனென்றல்லவோ சொல்லவே ண்டும். தன்னைக்கசக்கி பஞ்சபூதத் தை உண்டாக்கி ஆகாயத்தைக்கசக்கி வாய்வும், அதைக்கசக்கி அக்கினியும், அதைக்கசக்கித் தண்ணீரையும், அ தைக்கசக்கி மண்ணும், மண்ணைக்கசக்கி மனிதனும், மற்றபொருளும் உண்டுபண்ணின கடவுள் தாழ்ந்த ஜாதிக்காரனுவல்லவோ ஆகிறன். மனிதர்களும் மனுஷிகளும் தங்களை

(தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க)

விவாஹ விடுதலை.

(K. M. பாலசுப்பிரமணியம் B. A., B. L.,)

[சென்ற வாரத்தொடர்ச்சி]

இனி இது ஒருபுறமிருக்க காந்தியடிகள் கூறியுள்ள மொழிகளில் சாதாரணமாக 'விவாஹரத்தை' எதிர்க்கும் மக்கள் வழக்கமாகக் கூறும்சில காரணங்கள் இருத்தலால் அவைகளைச் சற்று ஆராய்ந்து அவைகளில் எவ்வளவு உண்மைகள் கிடக்கின்றனவென்று நோக்குவோம்.

முதலாவது திரு காந்தியவர்கள் 'இந்து மதத்தில் மட்டுமேயன்றி உலகிலுள்ள எனைய மதங்களிலும் இத்தகைய கொடுமைகள் நடப்பதற்கு இடமுண்டு' என்று கூறுவதையொப்புக்கொள்ளுகின்றோம். ஆனால்நாம் மிகவும் உணக்கத்துடன் அவருக்குத் தெரிவித்துக் கொள்ளுவது என்னவென்றால் மற்ற மதத்தினருக்கும், நம்மதத்தினருக்கும் ஒரே ஒரு வித்தியாசம் உண்டு. அதாவது இவ்வாறு தம் மதத்தில் இத்தீமைகள் வினைய இடமுண்டு என்பதை யவர்கள் கண்குணாத்தான் அவர்கள் அத்தீமைகளினின்றும் தப்பியோட ஒருவழி (Safety Valve) கண்டு பிடித்துள்ளார்கள். அதுதான் 'விவாகவிடுதலைச்சட்டம்' என்பது. நமோவெனில் இத்தகையதீமை நம் சமூகத்தில் இருப்பதை நன்குணர்ந்த போதிலுங்கூட தீக்கோழியைப்போல் நம் கண்ணை மூடிக்கொண்டோ அல்லது மற்ற மதங்களில் இருப்பதால் நமிடத்தும் அது இருக்கட்டும் என்றே போலித்தனமாகப்பேசி வருகின்றோம். உலகத்திலுள்ள மதங்கள் எல்லாவற்றிலும் எறக்குறைய நம் இந்துமதம்போமன், கதோலிய மதம் இரண்டைத்தவிர மற்றவைகள் எல்லாம் விவாகரத்தையனுமதிக்கின்றன. அதுமட்டுமல்ல. இந்தக்களுக்குள்ளேயே ஒரு பிரிவினருமாகிய பிரம்ம சமாஜத்தினரும் அதைக்கையாண்டுவருகின்றனர். இவ்வாறு இருப்பினும் நாம் அக்குறையைத் தைரியமாகத் தீர்த்துகொள்ளாமல் இருப்பதற்காகவே நாம் இந்து மதத்தை, காந்தியவர்கள் அதை விருமபாவிடினும் குறைகூறவேண்டியதாயிருக்கின்றது.

இரண்டாவது "இத்தகைய தீமையை யனுபவிக்கும் பெண்களின் தொகை மிகக்குறைவு. ஆகையால் இதற்கு அடிப்படையான, தீவிரமான பரிகாரம் வேண்டியதில்லை" என்கின்றார் காந்தி. இது மிகவும் உண்மையை யுடையது போலத் தோன்றினும் சற்று உற்று நோக்கின் இதன் பொய்மை வெளியாகும். பொதுவாக நமது வாசகர்களையே இதைப்பற்றி யோசிக்க வேண்டுகின்றோம். நமது இந்திய தேசத்தை யெடுத்துக்கொண்டால், இக்கொடுமைகள் குறைந்த தொகையுடையவா? அல்லது மிகுந்தனவா? என்ற கான இரண்டு வழிகள் உண்டு. ஒன்று பத்திரிகைகளில் வெளியாவது. மற்றொன்று நாமே சமூகத்தில் காணுவது. இந்தியாவில் எத்தனைபோ எழுதப்படிகதத் தெரிந்தவர்கள்? இவற்றுள் எத்தனை பேருக்குப் பத்திரிகைவாசிக்கத் தெரியும்? இவர்களுக்குள்ளேயே எத்தனை பேருக்குத் நமக்குத் தெரிந்த விஷயங்களைப்பற்றிப் பத்திரிகைகளுக்கு எழுத சக்திபோ, பிரியமோ உண்டு? இதையெல்லாம் நாம் கவனிப்போமேயானால், 'யௌன இந்தியா'வில் 33 கோடி மக்களில் ஒருவன் தன் தங்கையின் கொடும் வாழ்வைக்குறித்து எழுதியதனுலும் எனையவர் எழுதாததினுலும் நம் சமூகத்திலேயே இத்தீமைகள் குறைவு என்று முடிவு கட்டும் காந்தி போன்றவர்களின் கூற்றில் எவ்வளவு உண்மை கிடக்கின்றது என்பது நன்கு தெரியும். மற்றபடி எத்தனைபேர் நம்மகருள் கணவன்களால் கொடூரமாக நடத்தப்பட்டு வருகின்றார்கள்? இல்லையா? என்று தம் அக்கம் பக்கத்தில் கவனித்து வந்திருக்கின்றனர். அப்படித் தமக்குத் தெரிந்து தம் அயல்வீடுகளில் ஏதேனும் இருப்பின் நகரனாயினால் 'நமக்கென்ன அந்தக்கேடு, அவன் தன் பெண்டாட்டியையடிக்கின்றான்' என்றும், நாட்டுப்புறத்தான் ஆகில், எங்கு, தான் பரிந்து கொண்டு சென்றால் 'நாளைக்குத்தன் மனைவியைத் தான் அடிக்க நேரிடாது போய்விடுமோ' என்பது போன்ற காரணங்களால் பேசாமலும் இருந்துவிடுவான். நம் நிலைமை யிவ்வாறிருக்க, இக்கொடுமைகள் நம் சமூகத்தில் மிக்க குறைந்தனவே யென்று கூறுதல் எவ்வளவு நம்பத்தகாததாயிருக்கின்றது. இதுபற்றியேதான் ஜான் ஸ்டூவர்ட் மில் என்னும் பேராசிரியர் கூறுகின்றார். 'ஒரு பெண்ணை ஒரு ஆண் உசம் ஒப்புவித்து அவன் ஆதிக்கத்திற்கு ஆளாக்குதலினால் விளையும் கஷ்டம், தீயொழுக்கம் முதலிய கொடுமைசெயல்கள் எண்ணிறந்தன. அவைகளை நாம் மறுப்பது தவறு. உண்மையற்றவர்களும், சித்தனையற்றவர்களுமேதான், தீவிரமானவைகளையும் அல்லது [பத்திரிகை மூலம்] வெளியாக்கப்படுகின்றவைகளையும் மட்டும் உண்டு இவைபோன்றவை மிகச் சில என்பார்கள். ஆனால் உண்மையாகவே இத்தீமை இருந்து வருவதன்றி மிகவும் கொடூர குணமுடையதாக விருப்பதையும் ஒருவரும் மறுக்க முடியவே முடியாது'

மற்றும் திரு. காந்தியவர்கள் சொல்லுவதைப்போல இந்து சமூகத்தில் எல்லா மனைவியரும் அரசியர் போன்ற செல்வாக்குடையவர்களாயிருப்பின் அதற்காக நாம் அனுதாபடைத்த சந்தோஷம் அடையக் கடமைப்பட்டிருக்கின்றோம். ஆனால் அவ்விதம் அனேகம் பேர் இல்லை யெனபதை எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். அல்லது அவ்வாறு பெரும்பாலோர் செல்வாக்குடன் இருந்தால் அது விவாஹரத்து வேண்டும் என்பவர்களுக்கு எதிர்பாராததோர் உதவிக்காரணம் ஆகும் எனென்றால் விவாஹரத்து என்பது இல்வாழ்வில் ஒரு சுகமும் பெறமுடியாதவிக்கும் பெண்களுக்குப் பரிகாரமேயொழிய செல்வாக்குடன் இருப்பவர்களுக்கல்ல. ஆகையால் விவாஹரத்துச் சட்டம் ஏற்பட்டால் செல்வாக்குடன் இருக்கும் பெண்களுக்கு அதைப்பற்றிய கவலை உண்டாக வேண்டிய அவசியம் இல்லை. எனெனில் எங்கேயாவது உடல் நலனும் வலிமையும் விருந்திருப்பதன் அல்பத்தினியொன்று பக்கத்தில் இருப்பதால் மருந்து சாப்பிடுதல் உண்டா? நோயாளிகள்தான் செல்லுவார்கள். அதேபோல செல்வாக்குடன் இல்லாத பெண்களைச் செல்வாக்குடன் உண்டாக்குவதைக் காந்தியடிகள் மறுப்பதற்கு இடமில்லை யென்று நம்புகின்றோம்.

கடைசியாகக் காந்தி இத்தீமைகளை விலக்கச் சட்டம் வேண்டியதில்லை. சமூகக் கட்டுப்பாடு அல்லது உலக அபிப்பிராயமே சாலும் எனகின்றார். இதற்கு மில் என்னும் ஆசிரியர் கூறுகின்றார். 'இத்தகைய தீதுதொழில் புரிபவர் சமூகக் கட்டுப்பாட்டிற்கே தான் அடங்குவர் என்னலாம். ஆனால் இவைகளை யடக்குவது இவர்கள் போன்றவரது அபிப்பிராயந்தான். ஆகையால் அது முடியாத காரியம். இவ்வாறு எப்பொழுது சட்டம் தன்னிடம் ஒரு உயிரை முழுதும் ஒப்படைத்து விட்டதோ அப்பொழுது ஒருவன் அதைக் கொடுமையுடன் நடத்த முயலாமல் இருக்கமுடியுமா? அவ்வாறு முடியுமானால் இப்போது நம் சமூகமானது சுவர்க்கமாயிருந்திருக்கவேண்டும்.' ஆகையால் சட்டம் தான் நாம் பேசும் குறையை யகற்ற சக்தியும் தகுதியும் உடையது என்பதற்கு இரண்டு காரணங்கள உண்டு. முதலாவதாக ஒரு உயிரையே அல்லது ஒருமனிதனையோ முதலில் அடக்கியதும் அல்லது மற்றொருவன் கைகொடுத்ததும் சட்டமேயாகுமானால், அப்பொருளையோ அவ்வுயிரையோ அதினின்றும்விடுவிப்பதும் அதற்றவதும் சட்டமாகதான் இருக்கமுடியும்; இருக்கவும் வேண்டும். ஹிந்துக்களில் ஒரு பெண்ணை ஒரு கணவன் தான் திருமணம் செய்து கொண்டபின்னர் அவன் எவ்விதம் நடத்தினாலும், அவன அத்திருமணக் கட்டினின்று தன்னை விலக்கிக்கொள்ள உரிமையிலலை என்றும், ஒருவன் தன் வாழ்வில் ஒரே முறைதான் மணந்துகொள்ள முடியும் என்றும் உண்டாக்கியது சட்டமா? சமூகக் கட்டுப்பாடா? நிச்சயமாக அது சட்டமே. அப்படியானால் அந்நிலைமையிலிருந்து மனைவியைக் காப்பாற்றுவதற்குமட்டுமேயன்றி கணவனையும் அத்தகையக்கொடுஞ்செயல்களினின்று தடுப்பதற்கும் சட்டமே அவசியமன்றிச் சமூக அபிப்பிராயம் ஆகவேயாகாது. சட்டம்தான் முன்வந்து, எல்லையிற் கொடுமைக்குத்தன் மனைவியை ஒரு கணவன் ஆளாக்குவானேல், அவன் அவனுடன் பிணைக்கப்பட்டிருக்கும் மணக்கயிற்றையறுத் தெறியத் தகுதியுடையவன் ஆவான் என்பது மனதிலுள் தான் விரும்பின் மற்றொருவனையும் மணந்து கொள்ள வுரிமையுடையவன் ஆவான் என்றும் கூறவேண்டும். அவ்வாறு இல்லாது சட்டம் இழைத்தத்தீமையைச் சமூகம் தீர்க்கும் என்பது பெரிய தவறாகும். இவ்வாறு, காந்தியும் ஒப்புக்கொள்ளுவதைபோல், ஒரு கணவன் தன் மனைவியைக் கொடுமையோடு நடத்துதல் நீது என்று ஒப்புக்கொண்டபின் அக்கொடுமைக்கு மூலகாரணமாயிருக்கும் சட்டத்தை நீக்குவதனியில் அதற்குப்பதிலாக மற்றொரு நன்மை பயக்கும் சட்டம் உண்டாக்காதிருப்பின் அது ஒரு பெரிய குற்றமாகும். எனெனில் திரு. எட்மண்ட் பர்க் (Edmund Burke) என்பவர் கூறுவதைப்போல "தீயசட்டங்களே கொடுங்கோன்மைகளுள் மிகக்கொடிய" தாகும்.

இரண்டாவதாக மில் கூறுவதைப்போல இத்தகையச் செயல்களைச் சமூக ஊயிலான் அகற்றுதல் மிகவும் முடியாத காரியம். 'உலக அபிப்பிராயம்" என்பது எவ்வளவு விரிவான பொருளையுடையதோ, அவ்வளவு உறுதியற்றதாயும் இருக்கின்றது. ஒரு தேசத்தில் எவ்வளவோ சமூகங்களும் ஒரு சமூகத்தில் எவ்வளவோ படிகளும் இருந்து வருகின்றன. ஆகையால் பொதுவாக உலக அபிப்பிராயம் எனறு கூறினும் ஒருவன் தன் சமூகத்தில அதிலும் தன அந்தஸ்து, கல்வி, அறிவு ஒழுக்கம் முதலியவுடையவர்களது அபிபிராயத்தில்தான் கட்டுப்படும் நிலைமையில் இருந்து வருகின்றான். ஒரு கூலி வேலை செயது தினம் எட்டணாவோ பன்னிரண்டணாவோ தினம் சம்பாதிக்கும் ஒரு வெளியூரான் எந்தச சமூகக்கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றான்? தான் போன்றே தொழில் புரிந்து வருபவரும் தன் போன்றே யறிவு, ஒழுக்கம் முதலியவற்றில் கீழ்ப்பட்டவர்களும் ஆனமக்களின் அபிப்பிராயத்திலுள்தானே. அவ்வாறாயின் அவனைக்கட்டிலும் அவனைச் சுற்றியிருப்பவர்கள் எவ்வாறு ஒழுக்கம் மிக்கவர்களாயிருக்க முடியும்? எப்படியவனை யடக்கமுடியும்? இந்தக்கஷ்டம் நகரங்களில் இன்னும் அதிகம். அண்டை வீட்டிற் குடியிருப்பவன் யாரென்று உடன்கள் நாலாகியும்தெரிந்து கொ

ரோஜா முத்தையா
ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

திறப்புவிழா ஆற்றிய கோவை ஜில்லா போர்டு உபதலைவர் திருவாளர் எஸ். என். பொன்னையா அவர்களின் சொற்பொழிவு.

சுயமரியாதை இன்றேல்,
சுதந்திரமில்லை.
சகோதரிகளே! சகோதரர்களே!!

இரண்டாவது மாகாண சுயமரியாதை தொண்டர் மகாநாட்டைத் திறந்து வைக்கும் பெருமையை எனக்களித்த வரவேற்புக்கழகத்தாருக்கு எனது மனமார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். கலவி, கேவி, அறிவு, ஒழுக்கங்களிற்றலை சிறந்த பெரியார் ஒருவரைக்கொண்டு இம்மகாநாட்டைதிறந்து வைக்கும்படி செயதிருப்பீர்களாயின் நானும் அளவிடற்கரிய மகிழ்ச்சியையடைந்திருப்பேன். எனினும், உங்கள் விருப்பத்தை மறுப்பது முறையாகாதெனமறணண்ய, இம்மகாநாட்டை திறந்து வைக்கும் பணியைப் பெருமையோடுஏற்றுக்கொணடேன்.

தோழர்களே! சுயமரியாதை இயக்கமானது மகாள் விடுதலைக்கும் தேச விடுதலைக்கும் ஊனறு கோலாயிருக்கிறது, இருந்து வரப்போகிறது எனச்சொல்லுவது மிகையாகாதென றெண்ணுகிறேன். ஒரு நாடோ, சமூகமோ, விடுதலையடைய வேண்டுமானால், அதைப்பிடித்துள்ள மூடநம்பிக்கைகளும், அநாவசிய மக்களிடத்திலுள்ள மூடபழக்க வழக்கங்களும் அறவே ஒழிந்தாலன்றி விடுதலை விடுதலை எனற கூக்குரல் கானல் நீரேயாகும். உலகமாறுதலைக் கணக்கூடாகக்காணடும, கேட்டும் பழைய பழக்க வழக்கங்களைக் குரமூப்பிடியாயபபற்றிக்கொணடிருப்பதானது தற்கொலைக்கு ஒப்பாகும். நேற்று நிலைதாயிருந்தது இனறு மாறிவிடுகிறது. நாளை அழுவ நாற்றமெடுத்து விடுகிறது. வாழ்க்கை மாறுதலடைய வேண்டியதெனபதும, நாமே எணணிறந்த மாறுதல்களுக்கு ஆளாக்கிக்கொணடு வருகிறோமெனபதும நீங்களறியாததலல. காலத்திற்கேறறவாறு தன் நடை முறைகளை மாற்றியமைத்துக்கொள்ளாத நாடு அழிவது திணணம். இதுவே இயறகை விதியெனபபல பெரியாகளசொனன பழமொழியையும உங்களுக்கு நினைவூடடுகிறேன். நமது இயக்கமானது ஒவ்வொரு மனிதனுள்ள அவாவும அநகாசமும் அற்ற வாழும்தனமையையுடைய நகரவாசிகள மலிந்த நகரங்களில சமூகக்கட்டுபபாட்டைப் பறறிப பேசுவது மடமையேயாகும. ஆகாலேயும, உறுதியும, பயனும அறற சமூகக்கடடையும உலக அபிபிராயதைப் பறறிப் பேசுவதும, சடடங்கள் செய்யும் வேலைய அவைசெய்யும தனமையென்னறு கூறுவதும கண முடிதனமெனறே நாம கூறுவோம.

(தொடரும்)

சென்னைமாகாண 2.வது சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு.

வரவேற்பு உபன்யாசம்.

திருவாரூர்.

டைய சுதந்திரத்தையும் சிலகாட்டவே தொண்டர்கள் மகாநாட்டின் வரவே தற்கு முயற்சிக்கின்றதே பொழிய ற்புக்கமிட்டியாரின்சார்பாக வரவேற் எந்த வகுப்பாருடைய தாட்சண்யத் கின்றேன். உங்கள் வரவு நல்வர தையும் ஏற்றுக்கொள்ளத்தயாராயி வாகுக.

ல்லை. அன்னியர்கள் நம்மைப்புகழ்ந் தாலும் சரி இகழ்ந்தாலும் சரி. அதை ப்பற்றி நமக்குக்கவலையில்லை. ஆனால் நமது சுயமரியாதைக்கு விரோதமாக எந்தப்பழக்க வழக்கங்கள் இருந்தபோ திலும் அவைகளையழிக்க ஒருநிமிஷமும் பின்வாங்காமல் தொண்டாற்றும்படி உண்மைச்சுயமரியாதைத்தோழர்களா கியஉங்களைக்கேட்டுக் கொள்கிறேன். சகோதரர்களே!

சுயமரியாதை என்ற சொல்லைக் கேட்டவுடனே நம்மில் பலர் அச்சமடையுவதைக் கண்டு நான் ஆச்சர்யமடைந்ததுண்டு. ஆனால், நமதுபக்கத்தின் உண்மைத் தத்துவத்தையும், கோ்மையான கொள்கைகளையும் அறிந்தயர்கள் அஞ்சுவதும் அச்சமடையவேண்டியதில்லை. சாதி மதம், சமயம் என்ற மூடப்பழக்க வழக்கமானது உடன் பிறந்தே கொல்லும் நோய்போல் நமது மக்கள் சமூகத்தைப் பற்றிக் கொண்டிருப்பதோடமல்லாமல் தீண்டாமை என்ற ஓர் தொற்று நோயையும் உண்டாக்கி மக்களே சமத்துவம் சகோதரத்துவத்துடன் வாழச்செய்யாது பெருங்கேட்டை விளைவித்துக் கொண்டிருக்கிறது. அத்தகைய மூடப் பழக்க வழக்கமென்ற கொடிய நோயைப் போக்கவல்லது சுயமரியாதை என்ற அருமருந்தேயாகும். நமதியக்கக் கொள்கைகளைக் குன்றுத ஊக்கத்தோடு பிரசாரம் செய்து வரும உங்கள் முன் சுயமரியாதை இயக்கத்தைப் பற்றியோ, சுயமரியாதைக் கொள்கைகளைப் பற்றியோ நான் அதிகம் பேசுவது கொல்லன் தெருவில் ஊசி விற்ற கதையாகும்.

ஆகலான் அன்பர்களே!

சுயமரியாதைக் கொள்கைகளை நமது மாகாணத்திலும் அகில இந்தியாவிலும் பறப்புதற்கான முறையில் தொண்டாற்றும்படி உங்களைக் கேட்டுக் கொண்டு அளவிடற்கரிய மகிழ்ச்சியோடு இம்மகாநாட்டைத்திறந்து வைக்கிறேன்.

உபசாணைக்கமிட்டித் தலைவர் கே. எ. எம். மாணிக்கம் அவர்களின்வரவேற்பு உபன்யாசம்.

எனது அன்பைக்கொள்ளை கொண்ட, ஆருயிர்த்தோழர்களே!

உங்கள் எல்லோரையும் என் மனப்பூர்வமான ஆசையோடு இந்த இரண்டாவது சுயமரியாதைத் சமதர்மத்திற்கும், சம உடமைக்கும் நம்மால் போடப்படும் ஆரம்ப நிட்டமே நமது பாமரமக்களின் பழக்க வழக்கத்திற்கும், உணர்ச்சிக்கும், நம்பிக்கைக்கும் கேர்விரோதமானதாகக் காணப்படுவதாய் இருப்பதால் அந்த இடத்திலேயே நமக்குப் பெருங்கஷ்டங்களும், தொல்லைகளும் ஏற்படுகின்றன. ஆகவே, நமது வேலை 'சாவு மலையின்மீது ஏறுவது' போல் மிகவும் கஷ்டமானதும், பல தொல்லைகளை விளைவிப்பது மானதுமாகும்.

பயப்படத்தேவையில்லை

எப்படியிருந்தபோதிலும், தொண்டர்களாகிய நாம் பயப்படத்தேவையில்லை யென்றே தைரியமாய்ச் சொல்லுவேன். எனெனில், உலகில் நிச்சயமான ஒரு காரியம் எல்லாவற்றையும்விட, 'சாவு' என்பதேயாகும். அந்த நிச்சயமான சாவை நோக்கும் அறியமுடியாத சம்பவங்களுக்கும், அவசியமற்றவைகளுக்கும் கிஞ்சுக்காமல் உண்மையானதும், பயனளிக்கத்தக்கதுமான ஒரு அரிய காரியத்திற்கு பயன் படுத்துவது என்பதில் உறுதிகொண்ட மக்கள்தான் உண்மைத் தொண்டர்களாவார்கள். அப்படிப்பட்ட நமக்கு பயம் எங்கிருந்து வரும்? அன்றியும், நமது லக்ஷியம் போன்ற கொள்கைகளை நிலைநிறுத்த முயற்சித்த வெளிநாட்டுத்தொண்டர்கள் யாவருமே இப்படிப்பட்ட கஷ்டங்களையும், தொல்லைகளையும் தாராளமாய் வரவேற்று, கன்னுய் உறுதியுடன் நின்று சமாளித்தப்பிறகே தான் தங்கள் தங்கள் நாட்டிற்கு விடுதலையை—சமதர்மத்தை—சமூக சமத்துவத்தைச்சம்பாதித்துக் கொடுத்திருக்கின்றார்கள். ஆதலால், நாம் அதை நியப்பட இடமில்லை யென்றே சொல்லுவேன்.

நமக்குள்ள அதிகக்கஷ்டம்.

ஆனால், மற்ற நாட்டு மக்களைவிட நமது நாட்டு மக்கள் மிகுதியும் பாமரத் தன்மையில் இருப்பதுடன் படிப்படியான பிறவி உயர்வு—தாழ்வு தன்மைகொண்ட மிக்க பலம் பொருந்தியதான வருணாச்சிரமம் என்னும் கோட்டைக்குள்ளும் அடைக்கப்பட்டிருப்பதோடு, மற்ற நாட்டு சமதர்ம எதிரிகளைவிட நமது நாட்டு சமதர்ம எதிரிகள் அதிகமான சுயலக்காரர்களாகவும், பாரம்பரியமான வழியைச் சேர்ந்தவர்களாகவும், கட்டுப்பாடாக எதிர்த்து நிற்க சௌகரியம் பெற்றவர்களாகவும், பிறவியிலேயே ஒன்றாய் சேர்ந்தவர்களாக இருக்கப்பட்ட சமூகஸ்தர்களாகவும் இருப்பதோடு, "தேசிய" இயக்கம் என்னும் ஒரு பெரிய எழும்புறுக்கி வியாதி போன்றதான ஒருஸ்தாபனமானது சமத்துவப்போர்வையைப் போர்த்துக்கொண்டிருக்கும் வலிமை பொருந்திய ஒரு சுயலச் கூட்டாத்தாருடைய ஆயுதமாய் இருப்பதாலும், மற்ற நாட்டு சமதர்ம முயற்சித் தொண்டர்களுக்கு எற்பட்ட எதிர்ப்புகளை சமாளித்த

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க.)

சுயமரியாதைக்காரனுக்கும் புராணமரியாதைக் காரனுக்கும் சம்பாஷணை.

(சித்திரபுத்திரன்)

சுயமரியாதைக்காரன்:- வாருங்கள் ஐயா புராணமரியாதைக்காரரே! வெகுநாளாய்க்காணோமே. எங்கு சென்றிருந்தீர்கள்?

புராண மரியாதைக்காரன்:— எனது வயிற்றுக்கொடுமைதான் உமக்குத்தெரியுமே. புராணக்கால க்ஷேபம் செய்யப் போயிருந்தேன்.

சு-ம. அப்படியா? உங்கள்புராணக்கால க்ஷேபம் சரியாய் நடக்கின்றதா? ஜனங்கள் முன்போல் புராணங்களை மரியாதை செய்து கேட்கின்றார்களா?

பு-ம. அதை ஏன் கேட்கின்றீர்கள்? வரவரபுராணம்என்றாலே மக்களுக்கு ஒருவித வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. நம்மை யாரும் லட்சியம் செய்வதே கிடையாது.

சு-ம. ஏன் அப்படிச்சொல்லுகிறீர்கள்? புராணங்கள் எல்லாம் பகவான்கள், ரிஷிகள், பரமசிவன், மகாவிஷ்ணு முதலியவர்வாக்கு என்பதாக இருக்கும்போது புராணங்களுக்கு மரியாதைப் போய்விட்டது என்பது அதிசயமாகவல்லவா இருக்கிறது?.

பு-ம. என்னைப்பரிகாசம் செய்கின்றீர்களா? என்ன? நீங்கள் போடுகின்றபோடுதான் நாட்டையே பாழாக்கிவிட்டதே. நம்மைக்கண்டால் பையன்கள் கல்லெடுத்துப்போடுகின்றார்கள் 'ரிஷிகள் சொன்னார், பகவான் சொன்னார்' என்றால் 'உனக்கு எப்படித் தெரியும்?' என்று கேட்கின்றார்கள்.

சு-ம. இப்படியிருக்க சற்றுமுன் நீங்கள் புராணக்காலக்ஷேபம் செய்யப்போயிருந்தேன் என்று சொன்னீர்களே?

பு-ம. அதுவா கேட்கின்றீர்கள். நான் இப்போதுகாங்கிரசில் சேர்ந்து அதிலிருந்துகொண்டு காங்கிரஸ் மேடைகளின் மூலம் கொஞ்சம் கொஞ்சம்புராணப் பிரசங்கம் செய்து வருகின்றேன். இந்த சமயத்தில் காங்கிரசில்லாவிட்டால் புராணங்கள் நெருப்பில் போடப்பட்டிருக்குமே?

சு-ம. காங்கிரசில் எப்படி ஐயா புராணப்பிரசங்கம் செய்ய முடியும்? அதில் அரசியல் பிரஸ்தாபம்தானே செய்ய முடியும்?

பு-ம. அந்த இரகசியம் உங்களுக்குத் தெரியாதது போல்இருக்கின்றது. இனி அதிலும் கைவைத்து விடாதீர்கள்.

சு-ம. தெரியாதே.

பு-ம. முதலில் மேடையில் ஏறினவுடன் "மகாத்மாகாந்திக்கு ஜே, வந்தேமாதரம்! ஜெயஜெய 'பாரத' என்று சொல்லும்போதே 'நமப்பார்வதிபதேஹே' என்றும் மகாத்மாகாந்தியின் இப்புனிதமான 'ஹரஹர சங்கரமகாதேவ! வெங்கிட்ரமண. கோவிந்தா!! கோவிந்தா!!!' என்றும் சொல்லுவேன். அங்குள்ள எல்லா உறுப்படிகளும் கூடவே கத்தும். பிறகு இரண்டொரு தேவாரம் பாடுவேன். பிறகு மெள்ள 'மகாத்மாகாந்திவாள் இருக்காளே. அவாளை மனிதப்பிறப்பு என்று எண்ணி விடாதீர்கள்! அவர் ஒரு அவதார புருஷாராகும்!! மகாவிஷ்ணுவே அவதாரம் செய்திருக்கிறாராகும்!!! அதாவது பகவான் ஸ்ரீமத் பகவத்கீதையில் திருவாய் மலர்ந்தருளிஇருக்கின்றபடி 'யுகாயுகங்கள் தோறும்!!!' என்பதாக ஆரம்பித்துவிட்டு பாரதம், ராமாயணம், பாகவதம், முதல் பெரிய புராணம், சின்னபுராணம், மச்ச புராணம, தவளை புராணம், கெருட புராணப், பெருச்சாளி புராணம் வரையில் சும்மா அளந்து கொட்டிவிடுவேன். முண்டங்கள் வாயைத்திறந்து ஆகாயத்தைப்பார்த்துக்கொண்டு நின்றது நின்றபடியே இரவு 10 மணிவரையில் கேட்டுக்கொண்டிருக்கும். உடனே மேல்வேஷ்டியை விரித்துக்கொண்டு கதர் குல்லாய் போட்ட ஒரு பையனை அந்தக்கூட்டத்தில் ஒரு சுத்து சுத்திவரச்சொன்னால் 10 ரூபாய்க்கு குறையாது வசூலாகிவிடும். மற்றும் சாத்தனையோ உறுப்படிகள், சற்று ஸ்குரூ லூஸ் ஆனதுகள் டவுண்டன் பேனு, மோதிரம், பேனு கத்தி கைசெயிலி, கெடியாரம் முதலியவைகளையும் கழட்டி போட்டுவிடும். பிறகு என்ன குறை?

சு-ம. பவுன்டன் பேனு கடிகாரமெல்லாம் என் போடுவார்கள்?

பு-ம. நான் அந்தமாதிரி சொல்லுவேன்.

சு-ம. எந்தமாதிரி?

பு-ம. 'சத்விஷயம் கேட்டுவிட்டு சும்மா போகாதீர்கள். மடியில் உள்ளதைப்போடுங்கள். அணில்பாலம்கட்ட ராமபிரானுக்கு சிறுமணல் மேலே பூசிக்கொண்டுவந்து உதரி உதவிசெய்ததுபோல் அவதாரபுருஷராகிய மகாத்மாகாந்தியின் இப்புனிதமான கைங்கரியத்திற்கு தங்களால் கூடியதை உதவுங்கள், அந்தப்படி உதவாவிடில் நீங்கள் பாவியாகிவிடுவீர்கள். உங்களுடைய வஞ்சனையை பகவான் உங்கள் மடியிலிருந்தே அறிந்து கொண்டிருக்கிறார்" என்று சொல்லுவேன். சொன்னவுடனே முண்டங்கள் மடியைப்பார்த்தும், ஜேபியைப் பார்த்தும் உள்ளதை எடுத்துப்போட்டுவிட்டு ஒரு கும்பிடும் குப்பிட்டுவிட்டுப்போய்விடுவார்கள். கையிலும் பணமும் இல்லாதவர்கள் பேனு, கத்தி, மோதிரம், சங்கிலி முதலியவைகளைப்போடுவார்கள். பிறகு அதையேஏலம் போட்டால் அது வேறே ஒன்றுக்கு இரண்டாய்ப்பணம் வரும். இவ்வளவுதான் நமது புராணக்காலக்ஷேபம். எதோ ஒருவழியில் ஜீவனம் நடக்கின்றது. மகாத்மாஜி காந்தி தோன்றினால் எங்களை யெல்லாம் காப்பாற்ற.

சு-ம. இப்படிச் செய்தால் திரு. காந்தி முதலிய யாவரும் இதற்கெல்லாம் ஒன்றும் கணக்கு கேட்கமாட்டார்களா?

பு-ம. அந்த வழக்கம் தான் இதில் கிடையாது. அதல்லவா காங்கிரசில் இருக்கும் ஒரு பெருந்தன்மை.

சு-ம. அதென்ன அப்படி? என் கணக்குக் கேட்கமாட்டார்கள்?

பு-ம. கேட்டால் தெரியும் சங்கதி?. கேட்க ஆரம்பித்தால் திரு காந்தி முதல் அவர்களை அப்பன் வரை பதில் சொல்லியாக வேண்டும். அது மாத்திரமல்ல. இதே மாதிரி கணக்குக் கேட்டு "அவன் பணம் எடுத்துக்கொண்டான் இவன் பணம் எடுத்துக்கொண்டான்" என்று கணக்கு வெளி வந்துவிட்டால் பிறகு எவனுக்கும் யாரும் பணம் கொடுக்கமாட்டார்கள். அப்புறம் காங்கிரசுக்கு ஆளே சேராது. ஆதலால் திருட்டு வசூலைக் கண்டுபிடித்தாலும் வெளியில் சொல்லமாட்டார்கள். அந்த ஒரு பெருந்தன்மை காங்கிரசுக்குதான் உண்டு. நீங்களே பாருங்களேஎத்தனையோ பேர் திருப்பதி உண்டியல் மாதிரி வசூல் நடத்துகிறார்கள் யாராவது பேசுராங்களா? பாருங்கள்.

சு-ம. இந்த முறையில் ஒரு வாறு உங்களுக்கும் மற்றும் சில ஆட்களுக்கும் வாழ்க்கை நடந்து வருகின்றது என்பதில் எனக்கு சந்தோஷம் தான். ஆனால் புராணங்களின் யோக்கியதைகளைப் பற்றி உண்மையிலேயே உங்கள் அபிப்பிராயம் என்ன?

பு-ம அதிதன்ன அப்படி கேட்கின்றீர்கள்? அதெல்லாம் ஒரு மாதிரியாய்த்தான் இருக்கும். அதை வெளியில் சொல்ல முடியுமா? ரிஷிமூலம் நதி மூலம் கேட்கலாமா? பொதுவாகவே புராணங்களை யாராவது குற்றம் சொன்னால் எனக்குக் கோபம் தான் வரும்.

சு-ம. சரி, சரி கோபித்துக் கொள்ளாதீர்கள். ஆதை நான் குற்றம் சொல்லவரவில்லை. அதைப்பற்றி ஏதாவது சந்தேகமிருந்தால் கேட்கலாமா?

பு-ம பேஷாய்க்கேளுங்கள்.

சு-ம. அப்படியானால் ஒருசந்தேகம். ஆனால் நீர் கோபித்துக் கொள்ளக்கூடாது.

பு-ம. கோபம் என்ன? சந்தேகத்திற்குக் கோபிக்கலாமா?

சு-ம. உங்கள் வீட்டு தோட்டத்தில் ஒரு மல்லிகைச்செடியின் அடியில் ஒரு குழந்தை அப்பொழுதுதான் பிறந்ததாகக் காணப்படக்கூடியது அழுதுகொண்டுகிடக்கக்கண்டீர்களே யானால் அதைப்பற்றி நீங்கள் என்ன நினைப்பீர்கள்?

பு-ம. என்ன நினைப்பது? யாரோ பெற்றுத் திருட்டுத்தனமாய்க் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போய் விட்டார்கள் என்றுதான் நினைப்பேன்.

சு-ம. டார்? எப்படி பட்டவர்கள் பெற்றார்கள் என்று நினைப்பீர்களா?

பு-ம. யாரோ "திருட்டு கர்ப்பம்" அதாவது விதவையோ, கல்யாணமாகாத பெண்ணோ புருஷன் ஊரில் இல்லாமல் தேசாந்திரம் போனவனுடைய மனைவியோ சோரத்தனமாய் கர்பமாகி, அதைப் பெற்றுநமதுதோட்டத்தில் கொண்டுவந்து போட்டுவிட்டாள் என்றுதான் நினைப்பேன்.

சு-ம. சரி. இதுதான் நல்லபகுத்தறிவு என்பது.

பு-ம அதென்ன? அப்படிச் சொல்லுகிறீர்கள்? இதுகூடவா மனிதனுக்குத்தெரியாது? இந்தப்படி கல்லாமல் பின்னே என்ன

தொடர்ச்சி 16ம பக்கம் பார்க்க.

சென்னைமாகாண 2-வது சுயமரியாதைத் தொண்டர் மகாநாடு.

எஸ். என். பொன்னையா திறந்து வைத்தார்.

கே. வி. அழகர்சாமி தலைவர்.

ஈ. வெ. இராமசாமி, குஞ்சிதம், பொன்னையா ஆகியவர்களுக்கு வரவேற்பு.

சென்னை மாகாண சுயமரியாதைத் தொண்டர்களின் 2-வது மகாநாடு 30-8-31 ஞாயிற்றுக்கிழமை காலை ஆரம்பமாயிற்று. 29-8-31 இரவே வெளியூர்களிலிருந்து 150 பிரதிநிதிகள்வரை திருவாரூருக்கு விஜயம் செய்து விட்டார்கள். 30-8-31 காலை 8.30 மணிக்குள் திருவாரூருக்கு வரும் புகைவண்டிகளில் திருவாளர்கள் எஸ். என். பொன்னையா கோயமுத்தூர், ஈ. வெ. இராமசாமி, கைவல்யம், சிவானந்தம், குருசாமி பி. ஏ. குஞ்சிதம் பி. ஏ. திரு. மலைசாமி, வாசுதேவன், கே. வி. அழகர்சாமி (மகாநாட்டின் தலைவர்) எஸ். இராமனுதன் எம். ஏ. டி. எல். முதலிய தலைவர்களை யில் நிலயத்தில் ஆயிரக்கணக்கான ஜனங்களுட்பட வரவேற்புக் கழகத்தலைவர் திரு. கே. ஏ. எம். மாணிக்கம் அவர்களால் மாலை சூட்டி வரவேற்கப்பட்டு, திரு. சாம்ஜீ சத்யா அவர்கள் பங்களாவுக்கு அழைத்துச் சென்று காலை சாப்பாட்டிற்குப்பிறகு திருவாளர்கள அழகிரிசாமி, எஸ். என். பொன்னையா, கைவல்ய சாமியார்முதலியவர்கள் மோட்டாரில் வாத்தியங்களுடன் ஊர்வலமாய் அழைத்துச் செல்லப்பட்டார்கள். வழி நெடுக வளைவுகளும் தலைவர்களை வரவேற்கும் வாக்கியங்களும், தோரணங்களும் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்ததுடன், புகைப்படங்கள் பல எடுக்கப்பட்டன. மகாநாட்டுக் கொட்டகையான கருணாநிதிஹாலுக்குச்சரியாக 9 மணிக்கு ஊர்வலம் சென்றதும் தலைவர்கள ஹாலுக்குள் நுழையும்போது கரகோஷம் செய்யப்பட்டது. மகாநாட்டு கொட்டகை பூராவும் அறிவுவிளக்கத்துக்குறிய துணுக்கு வாத்தைகள் கொண்ட அட்டைகளும், கொடிகள தோரணங்கள ஏராளமாகக்கட்டி அலங்கரிகக்பட்டிருந்தது. ஊர்வலத்தில்கிருஷ்ணஸ்டுடியோவால்போட்டோ எடுக்கப்பட்டது. தலைவர்கள் ஆசனத்திலமர்ந்ததும் கொட்டகையில் 1000 பிரதிநிதிகள் வரை காணப்பட்டார்கள் அவர்களில் முக்கியமானவர்கள்: — திருவாளர்கள் எஸ். என். பொன்னையா, ஈ. வெ. இராமசாமி, கைவல்யம், எஸ். இராமநாதன், எம். ஏ., பி. எல்., என். தண்டபாணி, கும்பகோணம் குப்புசாமி, எஸ். குருசாமி. பி. ஏ., கே. வி. அழகர்சாமி, என். பி. காளியப்பன், சாமி சிதம்பரனார், பொன்னம்பலனார், கே. ராமய்யா, எஸ். வி. லிங்கம், என். தண்டபாணி, சுப்பையா, பட்டுக்கோட்டை இரங்கராஜ், கேசவலு, திருச்சி பி. எஸ். தெண்டபாணி, சிதம்பரமசிவம், வாசுதேவன், எஸ். பரம், தியாகராஜ ஞாணியார், ஞானசண்முகசுந்திரம், திருமலைசாமி, ஞானதன், மருதமுத்து, முருகேசன், கலியபெருமாள், மு. இலக்கன், முருகேசன், நாராயணசாமி, சுப்பிரமணியன், கோவை எ. ஆர். மி, முத்துப்பேட்டை தருமலிங்கம், சிவானந்தம், சூலூர் கிருஷ்ணசாமி தலைமையில் இருபது பெயர்களும், திருத்துறைப்பூண்டி உத்தமசாமி, மாயவரம் சி. நடராஜ திராபதி, நடராஜன், காரைக்குடி கே. ஆர். ஜி. பால், கோவை இராஜகோபால், திருச்சி விந்தாராஜு, நீடாமங்கலம் ஆறுமுகம் உதவி ஆசிரியர் முஸ்லிம், உடுமலை கனகராஜன், முதலியவர்களும், மற்றும் திருவாளர்கள் டி. கே. விஜயராகவலு, பி. ஏ., பி. எல்., டி. கே. இராமசாமி பி. ஏ., எஸ். சம்பந்தம், கே. ஏ. எம். மாணிக்கம், வி. ஜி. ஆர். இராஜு, கே. ஆர். கடராஜன், தருமலிங்கம், எம். சுப்பிரமணியம், அஞ்சுகராஜன், தசஞ்ஞமூர்த்தி, மருதை, முதலியவர்களும், மற்றும் ஜனப்புகள் ரா. கா, முகம்மது இஸ்மாயில், அப்துல்சமத் சாஹிப், சி, கெ. அப்துர்ரஹீம், அப்துர்ரஹமான், முகம்மதுயாசின், சையத் முகம்மது மூபாரக், புருஹானுதின், முகம்மது தாவூது ஆகியவர்களும், மற்றும் பல தாருல் இஸ்லாம் அபிமானிகளாயுள்ள முஸ்லீம் வர்கள் பலரும், மற்றும் திருவாளர்களான தலைக்காடு எம். எஸ். இரத்தினம், டி. கே. இரத்தினம் ஆலங்குடிச்சேரி சி. கோபாலகிருஷ்ணன், திருவாரூர் இராமசாமி ராயடு பி. ஏ, பி. எல்., முருகைய உடையார், சி. வெங்கட்டாசலம், எம். நாராயணசாமி, முத்துவைத்திலிங்கம், சிற்சபேசன், சாமிநாதசெட்டியார், உலகநாதம் செட்டியார், அருணாசலம் செட்டியார், ஏ. இராஜகோபால், ஏ. மாணிக்கம், பக்கிரிசாமி ராயடு, மகாலிங்க பண்டாரம், இரங்கசாமி பண்டாரம், வேலாயுத பத்தர், சுப்பிரமண்யபத்தர், சாம்ஜிசத்யா, கோபாலகிருஷ்ணன், கோவிந்தராஜு, எஸ். ஏ. காதர், எஸ். முருகேசன், என். இராமன் ஆகியவர்களும், திருமதிகள் எஸ். குஞ்சிதம், பி. ஏ., சிவகாமி, மிசஸ்காளியப்பன், செல்லம்மாள், தேவகி, மூவாலூர் இராமாமிர்தம்மாள், திருவாரூர் இராமமிர்தத்தம்மாள், தெய்வானை, தனத்தம்மாள் சொர்ணத்தம்மாள், லோகாம்பிகை, புனகு அம்மாள், இரத்தினம்மாள், கமலாம்பாள், சாராம்பி அம்மாள், முதலியவர்களும். மற்றும், மதுரை, காரைக்குடி, திருச்சி, தஞ்சை, கும்பகோணம், புதுச்சேரி, சென்னை, கோவை முதலிய இடங்களிலிருந்தும் யோராளமான பிரதிநிதிகளும் விஜயம்செய்திருந்தார்கள்.

பெரிய இடத்தில் சுயமரியாதைத் திருமணம்.

:0:

தாலிகட்டுதல் ஒழிக்கப்பட்டது.

தென்இந்திய பிரபல வியாபாரியும், விருதுநகர்வாசியும், மாஜிசேர்மெனும், சுயமரியாதை இயக்கப்பிரமுகருமான திரு. M. S. P. செந்தில் குமார் அவர்களது குமாரர் திரு. பரமசிவத்திற்கும், பம்பாய் பிரபல வியாபாரி திரு. சி. மு பெருமாள் நாடார் அவர்களது குமாரத்தி திருமதி நாகரத்தினத்திற்கும் விருதுநகரில் சுயமரியாதை முறைப்படி, தலைவர் திரு. W P. A. சௌந்திர பாண்டியன் அவர்கள் தலைமையில் வெகு விமரிசையாக திருமணம் நடைபெற்றது.

திருமணத்தில் தாலிகட்டுவது என்னும் அடிமைச் சடங்கும், மூட நம்பிக்கைச் சடங்கும் அறவேஒழிக்கப் பட்டது முக்கியமாய்க்குறிப்பிடத்தக்க தாகும்.

கல்யாண மண்டபம் முழுவதும் சுயமரியாதை வாக்கியங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. திரு சொ. முருகப்பா அவர்கள் "திருணம்" என்பதுபற்றி ஒரு அரிய சொற்பொழிவாற்றினர். திருமணத்திற்கு கலெக்டர் முதலிய அதிகாரிகள், திருமதி மாகதவல்லியார் உட்பட அனேக பிரபலஸ்தர்கள்விஜயமாகியிருந்தார்கள். கலெக்டர் திரு P.N. இராமசாமி ஐயர் I. C. S. அவர்கள் இம்முறையை பாராட்டியதுடன் மணமக்களையும், பெற்றோர்களையும் பாராட்டி வாழ்த்தினர். தலைவர் முடிவுரைகூறி, சாப்பாடு முடிந்ததும் திருமண நடவடிக்கைகள் முடிவு பெற்றது.

திறப்பு விழா.

மகாநாடு ஆரம்பமானவுடன் திரு. பொன்னம்பலனாரால் சுயமரியாதைப் பாட்டு பாடப்பட்டதும் மகாநாட்டைத் திறந்து வைக்கும்போது கோவை திரு. எஸ். என். பொன்னையா அவர்கள் பேசினார். அது மற்றொருபக்கம் பார்க்க.

பின்னர் வரவேற்புத் தலைவர்

(தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.)

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

திருச்சங்கோட்டில் ஈ. வெ. இராமசாமி உபன்யாசம்.

1-9-31 தேதியில் திரு. ஈ.வெ. இராமசாமி கனம் திரு. டாக்டர் பி. சுப்பராயன் அவர்களைக்காண திருச்சங்கோட்டிற்குச் சென்றிருந்தார். அங்கு பிரபல வியாபாரியான திரு. டி. வி. நடேச முதலியார் அவர்கள் ஏற்கனவே "தற்கால இராஜீயநிலைமை" என்பதைப்பற்றி பேச ஒரு பொதுக்கூட்டம் ஏற்பாடு செய்திருந்தார்.

திரு. இராமசாமியவர்கள் தான் சென்ற காரியம் பார்த்து விட்டு ஊருக்குப் பயணம் சொல்லிக் கொள்ளும்போது திரு. நடேச முதலியார் அவர்கள் வந்து தாம் ஏற்பாடுசெய்திருக்கும் பொதுக் கூட்டத்தில் சிறிது பேசி விட்டுப்போகவேண்டுமென்று கேட்டார். அதற்குத் திரு. இராமசாமியவர்கள் இக்கூட்டம் காங்கிரஸ் சம்பந்தமாய்க் கூட்டியிருக்கலாமானதால்தான் காங்கிரஸ் கொள்கைக்கு மாறுபட்டிருப்பதால் இதில்பேசுவது அவ்வளவு பிடித்தமாகஇருக்காதென்றும், தவிரவும் மந்தமக்கும் சிறிது அசௌகரியமாகயிருக்குமென்றும், ஆகையால் இன்னொருசமயம் பார்த்துக்கொள்ளலாமென்றும் கேட்டுக்கொண்டார்.

அப்படியிருந்தும் திரு. நடேச முதலியார் அவர்கள் அதைப்பற்றி தனக்கு ஒன்றும் ஆக்ஷேபணையில்லை யென்றும்எதிர்பாராமல் கிடைத்த சந்தர்ப்பத்தை விட முடியாதென்றும் ஆகையால் அவரவர்கள் அபிப்பிராயம் சொல்லுவதில் | தாக்ஷண்ணியம் வேண்டியதில்லை யென்றும், தாக்ஷண்ணியம் யாரும் எதிர்பார்க்க விரும்பமாட்டார்கள் என்றும், நீங்கள்வந்திருக்கும் செய்தி கேட்டு பலர் பேசவேண்டுமென்று விரும்புகிறார்களென்றும் சொன்னதோடு கனம் சுப்பராயன் அவர்களும் சில வார்த்தைகளாவது பேசும்படி கேட்டார்.

ஆகவேஎல்லோருமாககூட்டத்திற்குப்புறப்பட்டுப்போனவுடன் டாக்டர் சுப்பராயன்அவர்களை அக்கிராசனம் வகிக்க வேண்டுமென்று திரு.நடேசமுதலியார்பிரேரேபிக்க திரு. வி. டி. இராமசாமி ஐயர் அவர்கள் பி. ஏ., பி. எல்., வக்கீல், ஆமோதிக்க டாக்டர் சுப்பராயன் அவர்கள் தலைமைவகித்து திரு. இராமசாமியை முதலில் பேசும்படியாககேட்டுக்கொண்டார்.

திரு. ஈ. வே. இராமசாமி.

தலைவர்களே!

சகோதரர்களே!!

நான் இங்கு இப்படி ஒரு கூட்டத்தில் பேசவேண்டியிருக்கும் என்று கருதவேயில்லை. ஜமீன்தார் (டாக்டர்சுப்பராயன்) அவர்கள் ஒரு காரியமாய் என்னை இங்குவரவேண்டுமென்று 10, 15 நாட்களுக்கு முன்னமே எழுதிபதை உத்தேசித்து அவர்களைக் காணநான்வந்தேன். சற்று முன்புதான் இங்குஒ நமீட்டிங்குகூட்டப்பட்டிருப்பதை அறிந்தேன். இக்கூட்டம்ஜமீன்தார் அவர்களையும் திரு. கண்ணப்பர் அவர்களையும் உத்தேசித்தே கூட்டப்பட்டது என்பதையும் அறிந்தேன். இதில் நான் பேசுவது என்பது அசௌகரியமான காரியமான காரியம் என்றாலும் நண்பர் நடேச முதலியார் அவர்கள்சொல்லையும் ஜமீன்தார் அவர்கள் சொல்லையும் தட்ட முடியாமல் ஏதோ சிறிது பேசவேண்டியவனாக இருக்கிறேன். இன்று பேசவேண்டிய விஷயம் "தற்கால இராஜ்யநிலைமை" என்பதாக நோட்டீசில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. நானோஇராஜீயநிபுணனோ சம்பந்தமான விஷயங்களில் மாறுபட்ட ஒரு அபிப்பிராயம் கொண்டிருப்பவன். இராஜீய துறையில்சிறிதுகாலம்இருந்து பார்த்து விட்டு அதன் கொள்கைகளில் அதிருப்தி கொண்டு வெளியேறி என் சொந்த இஷ்டப்படி சமூகத்துறையில் வேலை செய்துகொண்டிருப்பவன். அப்படிப்பட்ட நான் இராஜீய நிலைமைபப்பற்றி என்ன பேச முடியும்? என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். சகோதரர்களே! இன்றைய நிலைமையில் நான் இராஜீயத் துறை கொள்கைகளில் மாத்திரம் அபிப்பிராய பேதங்கள் கொண்டவனல்ல. தற்கால இராஜீய விஷயம் என்பதாலே நானேபமானதல்ல என்று கருதுவதோடு இந்தியநாட்டின் விடுதலைக்கு இன்று இராஜீயத்துறை அவ்வளவு முக்கியமானதல்லவென்றும், மற்ற விஷயங்களின் வரிசைக்கிரமத்தில் அரசியல் சீர்திருத்தம் என்பது எவ்வளவோ பின்னால் இருக்கவேண்டியது என்றும் கருதுகின்றவன். நமக்கு இருக்கும் வேலை எல்லாம் நாம் செய்யவேண்டிய முதல்வேலை எல்லாம் சமூதாய சம்பந்தமானதேதவிர அரசியல் வேலையல்ல, ஏனெனில் சமூகத்துறையில் நமதுநிலைமை என்ன? நமது அடிமைத்தனத்தின் கொடுமை எவ்வளவு? இவைகளுக்குக் காரணம் என்ன? என்பதை நினைத்துப்பார்த்தால் அறிவும் மானமும் உள்ள மனிதன் அரசியல் தன்மையை கொஞ்சமும் பெரிதாகக் கருதி லட்சியம் செய்யமாட்டானென்றே கருதுகின்றேன். உங்களில் யார் எப்படி நினைத்துக் கொண்டாலும் சரி என்னைப் பொறுத்தவரை நமது நாட்டுமத சம்பந்தமான-சமூகசம்பந்தமான அடிமைத்தனத்தால் தான் நம் சுதந்திரமிழந்து மானமிழந்து இழி ஜாதியாய் வாழுகின்றோமே யொழிய அரசியல் அடிமைத்தனத்தாலல்ல என்பதே எனது அபிப்பிராயம். நான் இப்போது அரசாங்க ஆட்சியின் சுதந்திரத்தை முதன்மையானதாக விரும்பவில்லை. உத்தியோகத்தை பிரமாதமானதாகக் கருதவில்லை. அதிகாரத்தை ஆசைப்படவில்லை.

என்னுடைய நாட்டு மனிதன் ஒருவன்என்னை ஒரு மனிதனாய்க் கருதவேண்டும், அவன்என்னைபிற விபில் சமமாய் நினைக்கவேண்டும் என்றுநான் ஆசைப்படுகின்றேன். இந்த இழிவுத்தன்மையும் அவமானமும் தான் என்னை வருத்துகின்றது. நினைத்தால் வயிறு பற்றி எரிகின்றது, நெஞ்சம் குமுறுகின்றது. இதற்கு ஏதாவது ஒரு மார்க்கம் ஏற்பட இன்றைய எந்த அரசியலாவது இடையூறுஇருக்கால் சொல்லுங்கள். அப்பொழுது அந்த அரசியலைப்பற்றி கவனிப்போம்.—அதை யொழிப்போம். இல்லாவிட்டால் வேறு எது இடையூறு, யார் இடையூறுயிருக்கின்றார்களோ அவற்றையொழிக்க ஒன்று சேரலாம் வாருங்கள். அதைவிட்டு விட்டு இவ்வளவு பெரிய அக்கிரமத்தையும் கொடுமையையும் மூடி வைத்துக் கொண்டு "அரசியல் அரசியல்" என்றால் என்ன அருத்தம்? இது யாரை ஏமாற்றுவது? இன்னும் எத்தனை நாளைக்குத்தான் இப்படியே காலத்தை கடத்துவது? என்பவைகளை யோசித்துப்பாருங்கள்.

"அரசியலைப்பற்றிக்கூட நமக்குக் கவலையில்லை, அன்னியனை ஒழிக்கவேண்டாமா?" என்று சிலர் கேட்கின்றார்கள். இதிலும் உண்மையோ அறிவுடைமையோ இருப்பதாக நான் கருதவில்லை. ஏனென்றால், யார் அன்னியன்? என்பதை முதலில் கவனித்துப்பாருங்கள்.

என்னை அடிமை என்பவனும், வைப்பாட்டி மகன் என்பவனும், கிட்ட வரவேண்டாம்-தொடவேண்டாமென்பவனும், கிட்ட வந்தாலே-கண்ணில் தென்பட்டாலே தோஷம் என்பவனும், நான் தொட்டதை சாப்பிட்டால்-என் எதிரில் சாப்பிட்டால் நரகம் என்பவனும் அன்னியனா? "அல்லது உனக்கும் எனக்கும் வித்தியாசமில்லை, தொட்டாலும் பரவாயில்லை, நாம் எல்லோரும்சமம்தான்" என்று சொல்லுகின்றவன் அன்னியனா? என்பதை யோசித்துப் பாருங்கள்.

நமது ஜனங்கள் 100க்கு 90 பேர்கள் மூடமக்களாகயிருந்து வருகின்றார்கள். கல்விவாசனையும் இல்லை. அறிவுவாசனையும் இல்லை. இருந்தாலும் அறிவு சுதந்திரமில்லை. இவர்களைக் கூட்டி வைத்துக்கொண்டு யார் என்ன பேசினாலும் கைதட்டுவார்கள். கூடவே கோவிந்தா போடுவார்கள். ஆகவே சரியானது? தப்புஎது? என்று தெரிந்துகொள்ளும் அறிவுயில்லாதவர்கள். இவர்கள் முன் எதைச்சொன்னால் தான் என்ன? என்கின்ற முறையில் தேசத்தில் எத்தனையோ புரட்டுகள் நடக்கின்றன. இதைப்பார்த்துக் கொண்டே இந்தநிலைமையை மாற்றவேண்டிதே நமதுமுதல் வேலையாயிருக்கவேண்டும் என்பதை யாருமே கவனிப்பதில்லை. எந்தத்தலைவருமே நினைப்பதில்லை. இப்படியே காலம் கடந்தால் நமக்கு எப்போது விடுதலை கிடைக்கக்கூடும்? என்பதையோசித்துப்பாருங்கள்.

"பொருளாதாரத்துறையில் நாம் அடிமையாய் இருக்கின்றோம். நமது பொருள் கோடிக்கணக்காக வெளியில் போகின்றது. அதை நிறுத்த வேண்டாமா? என்கின்றார்கள் மற்றொரு கூட்ட அரசியல் கூட்டத்தார். இதையும் அன்னல் லட்சியம் செய்யவோ, ஒப்புக்கொள்ளவோ முடியவில்லை. ஏனென்றால் பொருள் நஷ்டம் என்பது இப்போது நமது நாட்டில் யாருக்கு இருக்கிறது? என்று யோசித்துப் பாருங்கள்.

நமது நாட்டில் சமூகத்துறையிலேயே பிறவிலேயே பொரு

ளாதார உரிமை அநேகமக்களுக்குத் தடுக்கப்பட்டிருக்கின்றது.

உதாரணமாகபுரோகிதன், உத்தியோகஸ்தன், வக்கீல், வியாபாரி, முதலாளி, ஜமீன்தாரன், மிராசுதாரன், ஆகியவர்களின்கூட்டங்களுக்குத்தான் பொருளாதார உரிமை இருக்கின்றதேதவிய மற்ற ஜனங்களுக்கு வயிற்றுக்கு எவ்வளவு வேண்டும் என்கின்ற அளவுக்குட்பட்ட விடுமை உரிமைதானே இருந்து வருகின்றது? முற்கூறிய கூட்டங்களுக்குப்பொருளாதார உரிமை என்பதுபிறவியிலேயேகொடுக்கப்பட்டிருக்கின்றதுஎன்பதுடன் மற்றவர்கள் அதற்கு அருகரல்லாமல் இருக்கும்படியான நிர்பந்தங்களும் செய்யப்பட்டிருக்கின்றன.

உதாரணமாக, ஒரு இட்லிக்கடைப்பார்ப்பானுடைய மகன் ஹைகோர்ட் ஜட்ஜாகவாலாம். ஒரு பஞ்சாங்கப் பார்ப்பனன் மகன் மந்திரி ஆகலாம். ஒருதோட்டியினுடைய மகன் ஹைகோர்ட்ஜட்ஜாக வாழமுடியுமா? யோசித்துப்பாருங்கள். ஜாதியின் பேரால் வகுக்கப்பட்டிருக்கும் பிரிவானது இம்மாதிரி சிலருக்கு நன்மையையும், சிலருக்குத்தீமையையும் செய்துவருகின்றது, வெகுகாலமாய்செய்தும்வந்திருக்கின்றது. இனிமேல் இந்தப்படி செய்யாமல்இருக்க நமது 'ஆசியல் சுயராஜியத்தில்' எவ்விததிட்டமும் இல்லை என்பதோடு இந்த முறைமையைக்காப்பாற்றவும் திட்டம் போடப்பட்டிருக்கின்றது என்றால் அறிவுள்ளமனிதன் எப்படி இந்த ஆசியலை ஒப்புக்கொள்ள முடியும்?

இன்றையதினம் இந்தத்திருச்சங்கோட்டில் ஒரு பறையன் இட்லி சுட்டானால் அது எவ்வளவு பெரிதாயிருந்தாலும் மற்றவர்கள் நாயிக்கு வாங்கிப்போடக்கூட. அவனிடம் இட்லி வாங்கமாட்டார்கள். ஒரு பார்ப்பனன் இட்லி சுட்டால் அது எவ்வளவு சிறிதாயிருந்தாலும் எவ்வளவு மோசமாயிருந்தாலும் 'சாமி சாமி' என்று கெஞ்சி ஒன்றுக்கு ஆறுவீலை கொடுத்து வாங்குவார்களென்றால் இது அரசியல் சுதந்திரமில்லாத காரணத்தாலா? சமூகசுதந்திரமில்லாத காரணத்தாலா? என்று தயவு செய்து யோசித்துப்பாருங்கள். பறையன் இட்லி வயிறுநிறையாதா? அதுவிஷம்கலந்ததா? மதமும் ஜாதியுமல்லவா இபபடி செய்கின்றது?

எழைஜனங்களையும் சரீரத்தால் பாடுபடும் தொழிலாளிகளையும் கீழ்ஜாதிஎன்றும், தொடக்கூடாதவர்கள் என்றும், கொடுமைப்படுத்திக்தாழ்த்திவைத்திருக்கும ஜனங்களையும் கவனித்து, அவர்களை அவர்களுடைய கஷ்டங்களில் இருந்து விடுதலை செய்ய முடியாத அரசியல் திட்டம் யாருக்குவேண்டும்? என்று கேட்கின்றேன். மேல் ஜாதிக்காரனுக்கும் முதலாளிக்கு மல்லவா அதுபயன்படும். தொழிலாளிக்கு எவ்வளவு கூலிகொடுப்பது என்பதை யோசிப்பது தான் அரசியல் திட்டத்தில் ஒரு கொள்கையாய் இருக்கின்றதே தவிர முதலாளி எவ்வளவுலாபத்திற்கு மேல் சம்பாதிக்கக்கூடாது என்பதாக யாராவது திட்டம் போடுகிறார்களா? பாருங்கள்.

நமது மக்களின் இழிவும், அடிமைத்தனமும், பொருளாதாரக் கஷ்டமும் நமது மதத்தின் பலனுய் சமுதாய முறையின்பயனுய் இருந்து வருகின்றதா? அல்லது இல்லையா?என்று பாருங்கள். பணக்காரஜமீன்தாரனும்பணக்காரபிரபுவும்தங்கள்பணங்களைஇந்நாட்டில்என்னசெய்கிறார்கள்?என்றுசற்றுகவனித்துப்பாருங்கள். மதத்தின் பயனுய் ஏற்பட்ட மூட்டாள் தனத்தின் காரணமாய் இதோ எதிரில் தெரிகின்ற கோவிலின் போல்பாழாகின்றபணம் இவ்வளவென்று உங்களுக்குத் தெரியாதா? பணம் சேரச்சேர மண்ணால் கட்டின கோவிலை இடித்து கல்லால் கட்டுகின்றான். பிறகு சலவைக்கல்லால் கட்டுகிறான், சித்திரவேலை செய்கிறான், பிறகு வெள்ளியிலும் தங்கத்திலும், வாகனம் செய்கின்றான், தங்க ஓடுபோட்டுகோவில் கூரை வேய்கின்றான். இந்த மூடமக்களைக்கொண்ட நாட்டிற்கு பணம் மிச்சமாவதால் என்ன லாபம்?

பாமரமக்களே அறிவாளிகளாக்கி அவர்கள் கையில் பணத்தை ஒப்புவித்தால்தான் அந்தப்பணம் நாட்டின் நலத்திற்கு பயன்படும். அப்படிக்கில்லாமல் பாழாவதற்கும் சோம்பேரிகளும், சூக்ஷிக்காரர்களும் பிழைப்பதற்காக பணத்தைக்காப்பாற்றுவதில் என்ன பலன்? என்று யோசித்துப் பாருங்கள். மற்றொரு கூட்டத்தார் 'நமக்குசமத்துவம் வேண்டியதற்காக சுயாஜியம்வேண்டு' மென்கிறார்கள். இதுவும் அர்த்தமற்றதும் அறிவற்றதுமானபேச்சு என்றுதான் சொல்லுவேன். பார்ப்பனனும், பறையனும் இருக்கும்நாட்டின், இருக்கவேண்டிய நாட்டின் இருக்கும்படி காப்பாற்றப்படவேண்டிய நாட்டின் மக்களுக்கு சமத்துவம் சம்பாதிப்பது என்பது புரட்டா? அல்லதுநாணயமானதாஎன்றுயோசித்துப்பாருங்கள்.வீண்வாய் பேச்சில்-வெட்டிப்பேச்சில் மயங்குகின்ற பாமர மக்களைக்கூட்டிவித்துப் பேசிவிடுவதிலேயே எந்தக்காரியமும் நடத்துவிடாது. எப்படியாலும் ஒரு காலத்தில் வெளியாய்த்தான் தீரும். நாட்டிற்கு உண்மை விடுதலை வேண்டுமானால் விடுதலைக் கேற்ற அரசியல் சுதந்திரம்வேண்டுமானுல்பயன்படத்தக்க-நாணயமான சுதந்திரம் வேண்டுமென்றுதான் சொல்லுகின்றேன். வரப்போகும்—வரவேண்டுமென்று கேட்கப்படும், சுதந்திரத்தின் பயனுய் இனி மேல் நமது நாட்டில் பார்ப்பனனும், பறையனும், இருக்கமாட்டானு? என்று கேட்கின்றேன். பறையன் உள்ளே விடப்படாத கோவில்கள் இருக்குமா? என்றும் கேட்கின்றேன். இன்றையதினம் சாமிகளின் போல் கடைபெறும் வீண்செலவுகள் ஒழிக்கப்படுமா? என்றும் கேட்கின்றேன். இன்றையதினம் ஜாதிகளின் பேரால் இருந்து வரும் கொடுமையும் இழிவும் கொள்ளையும் ஒழிக்கப்படுமா? என்றும் கேட்கின்றேன். குடும்பத்துடன் பாடுபட்டும் பட்டினி கிடப்பவனும் பாடுபடாமல் இருந்துகொண்டு குடும்பத்தோடுமேண்மையாய் வாழுபவனும் இருக்கமாட்டானு? என்றும் கேட்கின்றேன். ஜமீன்தாரன்என்பனும்குடியானவன்என்பனும் இல்லாமல்போய் விடுவார்களா? என்றும் கேட்கின்றேன். இவைகளை ஒழிக்காத சமத்துவம் என்ன சமத்துவமாகும்? இந்த வித்தியாசங்கள் இருக்கும் 'சுயராஜியத்திற்கு'ம் இப்போது இருக்கும் 'அன்னிய ராஜிபத்திற்கு'ம் என்ன வித்தியாசம் இருக்கக்கூடும்? என்பதை யோசித்துப்பாருங்கள் மத மூடநம்பிக்கையில் மக்கள் அறிவீனர்களாய் இருப்பது போலவே அரசியலிலும் மூடநம்பிக்கையுள்ளவர்களா யிருந்து அறிவீனர்களாகி தாங்களும் கெட்டு அன்னியரையும் கெடுத்த நாட்டின் முற்போக்கை பாழாக்குகிறார்கள்.

நமது நாட்டில் அரசியல் கிளர்ச்சி ஆரம்பித்த காலம் முதல் இதுவரை சமூக சம்பந்தமான முற்போக்கு ஏதாவது ஏற்பட்டிருக்கின்றதா? என்று பாருங்கள். சமூக முற்போக்கு-சீர்திருத்தம் என்பவை ஏற்பட தீவிர முயற்சி செய்யப்படும் போதெல்லாம் அரசியல் என்பது குறுக்கிட்டு தடைக்கல்லாய் இருந்து வந்திருக்கின்றதே ஒழிய என்ன நன்மை ஏற்பட்டிருக்கின்றது? என்று சொல்லுவதற்கு பார்ப்போம். இவ்வளவு விழிப்பான இந்தக்காலத்திலும் அரசியல் தலைவர்கள் வருணச்சிரம பாதுகாப்பும் மத நடுநிலைமையும் என்று சொல்லிக்கொண்டு தானே இன்று சுயராஜியம் வேண்டுமென்கின்றார்கள்—சுயராஜியமும் வாங்கப் போயுமிருக்கின்றார்கள். எந்தத்தலைவராவது சுயராஜியத்தில் வருணச்சிரமம் ஒழிக்கப்படும், மதக்கொடுமை ஒழிக்கப்படும் மத சம்பந்தமான பழக்கவழக்கம் கீழ்-மேல் நிலைமை ஆயவைகள் ஒழிக்கப்படுமென்று சொல்லுகின்றார்களா? சொல்லுகின்றார்களா? என்ற கண்ணுய் கவனித்துப்பாருங்கள்.

வருணச்சிரமமும் மதக்கொடுமையும் ஒழியவேண்டுமென்கிற நான் எப்படி இந்த அரசியலை—சுயராஜியத்தை ஆதரிக்க முடியும்? மத சமநிலைமையில் பறையன் ஒழிவானு? சூத்திரன் ஒழிவானு? என்று ஆராய்ந்து பாருங்கள். அப்படியிருக்க சுயராஜியக் கிளர்ச்சியில் பறையன் என்பவனுக்கும், சூத்திரன் என்பவனுக்கும் அறிவும் மானமும் இருந்தால் அதில் சேர்க்கூடுமா? என்ற யோசித்துப்பாருங்கள்.

நண்பர்களே! நான் இதுவரை பேசியது தங்களில் யாருக்காவது அபிப்பிராயபேதத்திற்கோ அதிருப்திக்கோ இடமிருக்கக்கூடியதாக இருந்தாலும் இருக்கலாம். ஆனால் நான் எனது அபிப்பிராயம் என்கின்ற முறையில் இந்த இடத்தில் எனக்குப் பட்டதை பேசவேண்டுமே ஒழியகூட்டத்திற்குத் தகுந்தபடி சந்தர்ப்பத்திற்குத் தகுந்தபடி என்று பேசக்கூடாது என்கின்ற முறையில்பேசினேன். இதற்காக நண்பர்கள் தப்பாக இதநினைக்கலாம். இவற்றையெல்லாம் அடியோடு நீக்கிவிடக்கூடியதாகவும் இருக்கலாம். ஆனால் என் அபிப்பிராயம் என்கின்ற முறையில் வெளியிட எனக்குள்ள பாத்தியதையில் உங்களுக்கு ஆக்ஷேபமிருக்காதென்றுதானேயோழிய வேறில்லை.

ஆகவே தாங்கள் நான் சொன்னதையும் இனியும் எனவான்கள் பலர் சொல்லப்போவதையும் தயவு செய்து ஒத்திட்டு ஆராய்ச்சி செய்து பார்த்து உங்களுக்கு இஷ்டப்பட்டதைஎற்றுக் கொளளுங்கள் என்றே கேட்டுக்கொள்ளுகின்றேன் என்று பேசிவிட்டு ரயிலுக்குப் புறப்பட்டு விட்டார்.

நிர்வாண இயக்கம்.

30 லட்சம் நிர்வாண மக்கள்.

ஜெர்மன் நகரில் 30 நிர்வாண சங்கங்கள்.

டெய்லி ஹிரால்டு பத்திரிகை பின் வருமாறு எழுதுகிறது:—

நிர்வாண இயக்கம் அதாவது மனிதர்கள் ஆடையின்றி முழு அம்மணமாக வாழும் வழக்கம் ஐரோப்பாவெங்கும் பரவிவருகிறது. அது இப்பொழுது பிரிட்டனிலும் பரவ ஆரம்பித்து விட்டது. இரண்டு வருஷங்களுக்கு முன்னதாக இரண்டு லட்சம் ஜெர்மனியர்கள் பூர்ண நிர்வாணமாக வாழ்க்கை நடத்திவந்தனர். இப்பொழுது இந்நிர்வாண இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் ஜெர்மனியில் 30 லட்சம் பேர்களிருக்கின்றனர். பெர்லின் நகரத்தில் மட்டும் 30 நிர்வாண சங்கங்களிருக்கின்றன. "சண்டமாருதம்"

குடி அரசு

ஈரோடு 1931 செப்டம்டர் 6உ

சத்தியாக்கிரகம்.

"சுயமரியாதை இயக்கமானது எவ்வித சத்தியாக்கிரகமும் செய்யவில்லை" என்பது இன்றையதினம் அதன் மீது துவேஷமும், பொறுமையும் கொண்டவர்களால் சொல்லப்படும் ஒரு பெரிய குற்றமாகும்.

மற்றபடி அதன் கொள்கைகளைப்பற்றி யாரும் இதுவரை எவ்விதக்குற்றமும்சொல்லவில்லை. அன்றியும் இந்த மேற்கண்ட குற்றத்தை மனதில் வைத்துக் கொண்டுதான் "சுயமரியாதை இயக்கம் இதுவரை என்ன சாதித்து விட்டது?" என்பதாகவும் சிலர் நம்மைக் கேட்கின்றார்கள்.

சுயமரியாதை இயக்கம் "சத்தியாக்கிரகம்" எனபதாக ஒரு கிளர்ச்சியை ஆரம்பித்து, சில வாலிபர்களைச் சேர்த்து அவர்களுக்கு சாப்பாடும் விளம்பரமும் கொடுத்து, ஏதோ இரண்டொரு கோவில்களின் முன்போ, அல்லது குளங்களின் முன்போ கொண்டுபோய் நிறுத்தி, அவ்வாலிபர்களுக்குக் கொஞ்சம் அடியும் உதையும் வசவும் வாங்கிக்கொடுத்து, ஜெயிலுக்கும் சிலரை அனுப்பி, அதற்குத்தகுந்த விளம்பரங்களும் பாராட்டுகூட்டங்களும் போட்டு ஆடம்பரங்கள் செய்வதுமான காரியங்களைச் செய்திருக்குமேயானால் அந்தக் காரியங்களால் நமது லட்சியம் வெற்றி பெற்றாலும்—பெறாவிட்டாலும் லட்சியத்திற்கே முட்டுக்கட்டையாகஇருந்தாலும்கூட, சிறிதுபகவலை இல்லாமல் "சுயமரியாதை இயக்கம் நிரம்பகாரியம் சாதித்துவிட்டது" என்பதாக நமது மக்கள் கருதி விடுவார்கள். மற்றபடி இவ்வியக்கத்தால் பயன்பட்டதான காரியம எவ்வளவு நடைபெற்றிருந்தாலும் நமது மக்கள் தெரிந்துகொள்ளுவது என்பது சாத்தியமற்ற காரியமாகும்.

ஏனெனில், முதலாவது நமது மக்களுக்கு பெரும்பாலும் பகுத்தறிவு ஆராய்ச்சி என்பது தடைபடுத்தப்பட்டு விட்டது.

இரண்டாவதாக, எதாவதுசிலருக்குப் பகுத்தறிவுஉணர்ச்சிஇருந்தாலும் அதை நேர்வழியில் பயன் படுத்த யோக்கியமோ, நாணயமோ, நன்றியறிதல் தன்மையோ கிடையாது.

ஆகவே, இந்த இரண்டு காரணங்களாலேயே பொதுநல வாழ்க்கை நாணயமாய் இல்லாமல் இருப்பதுடன் ஒன்றிரண்டு நாணயமாய் உண்மையாய்ப் பாடுபட்டாலும் அதை மக்கள் அறியமுடியவோ, நன்றிசெலுத்தவோ முடியாமல் போய்விடுகின்றது.

நிற்க, சுயமரியாதை இயக்கம் ஆரம்பத்தில் அரசியலில் இரண்டு காரியத்தை ஏட்சியமாய்க்கொண்டு ஆரம்பத்திலிருந்தே கதறி வந்திருப்பதுடன், அந்த லட்சியத்திற்காகவே சுயமரியாதை இயக்கப் பிரமுகர்கள் காங்கிரசிலிருந்து பிரிந்தும் வந்ததுமான காரியம் யாவரும் அறிந்ததாகும். அந்த லட்சியம் ஒருவாறு வெற்றிபெற்றது என்பதை இன்று அதன் எதிரிகளும் மறுக்கமாட்டார்கள்.

அதாவது, இவ்வியக்கம் தோன்றிய காலம் தொட்டு அரசியல் பிரதிநிதித்துவ தேர்தலிலும், அரசியல் உத்தியோகத்திலும், பல மதம், பலவகுப்பு, கீழ்-மேல்நிலைமை ஆகியவைகள் ஏற்பட்ட இன்னாட்டு மக்களுக்கு வகுப்புவாரி உரிமை ஏற்பட வேண்டுமென்று கூப்பாடு போட்டுவந்த தேயாகும்.

சுயமரியாதை இயக்கம் இந்த மாதிரி கூப்பாடு போட்டு இந்தப் படிக்கேட்பதை இழிவான-தேசத்துரோகமான காரியமென்று திரு. காந்தியும், காங்கிரசும் பிரசாரம் செய்தார், அது இழிவானதல்ல, தேசத்துரோகமானதல்ல என்பதான உணர்ச்சியை மக்களுக்குள் உண்டாக்கி அந்தப்படி இழிவென்றும் தேசத்துரோகமென்றும் சொல்லி வந்த அதன் எதிரிகளையெல்லாம் முறியடித்து வந்திருக்கின்றது.

மேலும் "சுயமரியாதை இயக்கம் எந்த சமூகத்தாருக்காக வகுப்புவாரி உரிமை கேட்டுவந்ததோ அந்த சமூகத்தாரின் நன்மைக்காக ஏற்பட்டதாகச் சொல்லிக்கொண்டு உத்தியோகங்களையும் பதவிகளையும் சுயநலத்துக்குக் கொள்ளையடித்தக் கூட்டத்தார்களாலேயே வகுப்புவாரி உரிமைக்கு விரோதமாய் செய்யப்பட்ட செய்கைகளை சமாளித்தும், மற்றும் அரசியல் ஸ்தாபனங்கள், தேசிய ஸ்தாபனங்கள், பார்ப்பனத் தலைவர்கள், மகாத்மாக்கள் முதல் அனேகர் அதற்கு விரோதமாயிருந்தும் அவ்வளவையும் சமாளித்து, அரசியல்- பிரதிநிதித்துவங்களிலும், பதவிகளிலும், உத்தியோகங்களிலும் அரசாங்கத்தாராலேயேவகுப்புவாரி உரிமையை ஒப்புக்கொள்ளச் செய்தும், அதைஅமுலுக்குக் கொண்டுவரச்செய்தும்,இன்றையதினம் அமுலில் நடந்தும் வருகின்றது.

நாளையதினம் வரப்போகும் அரசியல் சீர்திருத்தத்திலும் 1000 மகாத்மாக்கள் விரோதமாய்இருந்தாலும்கூட இக்கக்கொள்கைகள் ஒப்புக்கொள்ளப்பட்டு அமுலில் வரவும் போகின்றது.

மற்றும் அடுத்தமாதம் நமது நாட்டில் நடக்கப்போகும் ஸ்தலஸ்தாபன பிரதிநிதிகள் தேர்தல்களிலும் பறையர் என்பவரும், பள்ளர் என்பவரும், சக்கிலி என்பவரும், சாம்பர் என்பவரும் தேர்தலில் நின்று வெற்றிபெற்று, மனிதராகவந்து சபையில் சரிசமமாக உட்காரப்போவதும் உறுதியாகிவிட்டது.

மற்றும் மனித சமூகத்திலேயே சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்கள் என்று இழித்துக்கூறி, தாழ்மையாய்க்கருதி, அடிமைகளாய் நடத்திவந்த 'பொட்டை' என்னும் பெண்மக்களும் தேர்தலில் நின்று வெற்றிபெற்று மனிதஉணர்ச்சியுடன சபையில் வந்து சுதந்திரத்துடன் உட்காரப்போவதும உறுதி. மற்றபடி மகமதியர், கிறிஸ்துவர்கள் என்பவர்களும் தங்கள் மானத்தையும் மனசாக்ஷியையும் இழக்காமல் ஸ்தாபனம் பெறக்கூடிய யோக்கியதை அடைந்திருக்கிறார்கள்.

இதுபோலவே சர்க்கார் உத்தியோகத்திலும்சுயமரியாதை இயக்கம் விரும்பியவாரே இத்தனை பறையன், இத்தனை பார்ப்பனன், இத்தனை பார்ப்பனரல்லாதவன், இத்தனை முகமதியன், இத்தனை கிறிஸ்துவன் என்றவிதி ஏற்பட்டு அனேக விஷயங்களில் அந்தப்படி நடைபெற்றும் வருகின்றது. இனி கூடிய சீக்கிரம் பெண்களுக்கும் இந்த உத்தியோகங்களில பங்கு கிடைக்க முயற்சிக்கிறது.

இவைகளெல்லாம் சுயமரியாதைஇயக்கத்தால் ஏற்பட்டதா? அல்லது அல்லவா? என்பதை விவகாரத்தில் வைத்துக் கொண்டாலும் சுயமரியாதை இயக்கம் என்று ஒன்று ஆரம்பமான காலத்தில்- அதன் (அவ்வியக்கத்தின்) அவசியத்திற்காக-கொள்கையாக சொல்லப்பட்ட காரணங்களில் இந்த வகுப்புவாரி உரிமையேதான் முக்கியமாய் சொல்லப்பட்டதா? அல்லது அல்லவா? என்பதில்ஒருகடுகளவுவிவாதமும் செய்யமுடியாது. யாராவது செய்யக்கூடுமானால் அவர்களுக்குத் திருவண்ணாமலைக்கான்பரன்சும், காஞ்சீபுரம் கான்பரன்சும், கதர் ஸ்தாபன தகராறும், முதலாகியவைகளும் 'குடிஅர'சின் 1926ம் வருஷத்திய தலையங்கங்களும், உபதலையங்கங்களும், மற்ற நிருபங்களும்தோல்பிக்கத்தயாராய் இருக்கின்றன. நன்றிஅறிதலற்ற தன்மை, குரோதம், பொறாமை, எதிரிகளிடம கூலிபெறுவதால் அதற்குத்தகுந்தபடி பேசவேண்டியதான குணங்கள் இல்லாதவர்கள் இதை ஒப்புக்கொள்ளுவார்கள் என்றே கருதுகின்றோம.

ஆகவே மேற்கண்டபடி அரசியல்துறைஎதாதிசமலாமல் சமூகாயத்துறையை எடுத்துக்கொண்டோமேயானாலும் ஜாதிஅகம்பாவம், ஆணவம ஆகியவைகளை வெளிப்படையாய்க்காட்டும் மனோபாவம நமது நாட்டில் 100க்கு 50 விதமாவது மறைந்திருப்பதைக்காணலாம். மற்றும்மதசம்பந்தமானசடங்கு, உற்சவங்களிலுஷயமாய்உள்ளஉணர்ச்சிகளும்100கு50பங்குஅறிவாளிகளென்பவர்கள்மனதிலேபமுகியஸ்தமுமடிவாதமும, குறைந்து ஏதோகடன் கழிபது என்கின்ற முறையிலநடத்தவேண்டியதாகி, சிறிது சிறிதாய் குறைந்துவருவதைக்காணலாம். இவை ஒருபுறமிருந்தாலும பார்ப்பனர் உடபட எலலாஜாதி மகளும் இன்றுசமபந்தியில்இருபபதறகு முனபோல் பயப்படாமலும, கஷ்டப்படாமலும் சாதாளமாய் இருந்து உண்பதையும்காணலாம. அதுமாத்திரமலலாமல் ஸ்பரிசதோஷமிலலாமல் பல உயர்ந்த ஜாதியினர சமமாக ஆகாரம் உடகொள்ளுவதையும் காணலாம்.

உதாரணமாக, ஈரோடு சுயமரியாதை மகாநாட்டிலும், விருதுநகர் சுமமரியாதை நாட்டிலும் ஆயிரக்கணக்கான மக்கள் ஒரே பந்தியில்சமமாக உட்கார்ந்துசாப்பிட்டதைஇயக்க எதிரிகளும்கூட இருந்து பார்த்துக்கொண்டுதான் இருந்தார்கள். எவ்விதஒழிமறைவுமில்லாமல் பார்ப்பனரல்லாதசைவர்கள் அல்லாதநாடார்கள்தான்சமையல்செய்தார்கள். ஈரோட்டில் பறையர்கள் முதல் எல்லா ஜாதியாரும், எல்லாமதக்காரரும் பறிமாறினார்கள். சைவ வேளாளர், தொண்டைமண்டல முதலியார், காசைக்காட்டு

சைவர், பார்ப்பனர், நாடார், நாயக்கர்மார், செங்குந்தர், வாணியவைசியர், நாடார்-க்ஷத்திரியர் நாட்டுக்கோட்டை-வைசியர் ஆகியனல்லோருமே சமமாக உட்கார்ந்து, ஒன்றுகச்சாப்பிட்டார்கள். அதுவும் பந்தி 1க்கு 150 பேர் வீதம் சாப்பிட்டார்கள். எந்த ஆசியல் மகாநாட்டிலும் பார்ப்பனரல்லாதார் சமையல செய்ததோ, 'தீண்டா' ஜாதியார் பறிமாறினதோ, பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் எல்லோரும் ஒரு பந்தியில் இருந்து சாப்பிட ஏற்பாடு செய்ததோ இதுவரையில் நாம் அறியநடந்ததே இல்லை. மற்றும் பெண்கள் ஆண்களுடன் சரிசமமாக தங்களைக்கருதிக் கொண்டதும் மற்றும் அவர்கள் நிர்ப்பந்தங்கள் ஒழிந்ததுமான சம்பவங்கள் இவ்வியக்கத்தின் பயனுய் ஏனப்பட்டதுபோல் வேறு எதிலாவது காணப்பட்டது என்று யாரும் சொல்லவரமாட்டார்கள். மற்றும் கடவுள், மதம், சமயம், வேதம், புராணம், முதலியவைகளைப்பற்றியும், இனியும் பல காரியங்களும் ஏற்பட்டதை சொல்லாமலே விட்டுவிடுகின்றோம். அதை அவரவர்களே நினைத்துப்பார்த்தால் தெரியும். ஆகவே சொன்னவரையிலும்கூட இதன் தன்மைக்கு ஒரு விஷயத்தை ஞாபகமூட்டுகின்றோம்.

அதாவது, எந்த மக்களுக்கு என்னவிதமான நன்மை செய்ய வேண்டுமென்று கருதினோமோ அந்த மக்களின் எதிர்ப்புக்கிடையிலேயே இவை செய்யப்பட்டது என்பதுடன், பலன் அடைந்த சமூகத்தாரே இன்றும் எதிரிகளாய் இருந்து வருகின்றார்கள் என்பதையும் ஞாபகமூட்டுகின்றோம்.

மேலும் சுயமரியாதை மகாநாடுகளின் தீர்மானங்களின்படி பால்யமணம் தடுப்பு-பெண்களுக்குச்சொத்துரிமை-விவாகரத்து—விதவை உரிமை—தீண்டாமை விலகு முதலியவைகளுக்கு சட்டசபைகளில் சட்டங்கள் கொண்டுவரபபட்டு சிலநிறைவேறியும சில விவாதத்திலும் யோசனையிலும் இருந்து வருகின்றன. தீண்டாதவர்கள் என்பவர்கள் விஷயத்தில் அவர்களுக்கு கல்வி வசதியும் பூமிவசதியும் சிற்சில இடங்களில் சர்க்காரால் நடத்தப்பட புதிய உத்தரவுகளும்போடப்பட்டு வருகின்றன.

இவைகள் எல்லாம் சுயமரியாதை இயக்கத்தால்தான் ஆயிற்று? என்பதுஒருமுகியகேள்வியாய்இருக்கலாம். அதற்கு பதில் சொல்ல நாம் ஆசைப்படவில்லை. ஆனால் ஒன்றைமாத்திரம் நினைப்பூட்டுகின்றோம். அதாவது சுயமரியாதை இயக்கத்தின் கொள்கைகள்-சுயமரியாதை இயக்கத்தின் தேவைகள்-விருப்பங்கள் ஆகியவைகள்பற்றி அவ்வியக்கம்தெரிவித்துக் கொண்டபடி காரியங்கள் நடந்துவந்திருக்கின்றது—நடந்தும் வருகின்றதுடன் இவைகளைப்பற்றி இதுவரை எந்த அரசியல் இயக்கமும் தெரிவிக்கவில்லை. தனது லட்சியமாய்க்கொள்ளவும் இல்லை என்பதாகும். ஆகவே இவையால் ஏற்பட்டதாய் இருந்தால் என்ன? என்பதோடு இனியும் எவ்வளவோ ஆகவேண்டி இருக்கின்றது என்பதையும் நாம் மறைக்கவில்லை.

சத்தியாக்கிரகம்.

இனி எடுத்துக் கொண்ட விஷயத்தைக் கவனிப்போம். அதாவது சத்தியாக்கிரகம். மேற்கண்ட இந்தக் காரியங்கள் செய்வதற்கு சுயமரியாதை இயக்கமானது இதுவரை எவ்வித சத்தியாக்கிரகமும் செய்யவில்லை. அன்றியும் எவ்வித பலாத்காரமும் செய்யவில்லை.

மற்றபடி அது என்ன செய்ததென்றால் மனதில் உள்ளதை உள்ளபடி தைரியமாய் வெளியில் எடுத்துச்சொல்லிற்று. பேனுவைத்தாராளமாக பூட்டிற்று. தத்துவார்த்தத்திற்கு இடம் கொடுக்கவில்லை. ஊர் ஊராய், கிராமம் கிராமமாய், பட்டணம் பட்டணமாய் சென்று பட்டி தொட்டிகளிலும், காடு மேடுகளிலும் கூப்பாடு போட்டது. சமயத்துக்குத்தகுந்தபடி பேசவில்லை, பின்னல் போகவில்லை என்பதைத்தவிர வேறு ஒன்றும் பிரமாதமாகச் செய்துவிடவில்லை. மக்களுக்குள் இயற்கையாய் ஏற்படும் சுயநலமும், உத்தியோகப் போட்டியும், பொறுமைகளும் இவ்வியக்கத்தில் கலந்து கொண்ட சிலருக்கு சற்று குறைவாய் ஏற்பட்டு இருந்திருக்குமானால் சுயமரியாதை இயக்கத்தால் இன்னமும் சற்று அதிகமான பலன்கள் ஏற்பட்டிருக்கும் என்பதை நாம் மறைக்கவில்லை. அவைகள் சற்று அளவுக்கு மீறி அதிகமாக ஏற்பட்டு விட்டதால் ஏற்பட்ட பலன்கள் குறைவாய் இருப்பதாகக் கருத வேண்டியிருக்கின்றது. இவை எப்படியோ ஆகட்டும். பொதுவாகவே சுயமரியாதை இயக்க வேலையானது வெறும் விளம்பரக்கிளர்ச்சியும் மக்களின் மூடத்தன்மையை பயன்படுத்திக்கொள்ளுவதும் அல்லவாகையால் அதன் வேலை சற்று கஷ்டமானதாக இருந்து வருகின்றது.

அன்றியும் "இந்துக்களின் சுயராஜ்யத்திற்காக வெள்ளைக்காரனுடன் சண்டை பிடிக்கப்போகின்றோம், வாருங்கள்" என்றுஒரு தேசத்தார் மீது மற்றொரு தேசத்தாரை ஏவி கூட்டம் சேர்ப்பது போன்ற சுலபமான காரியமாயில்லை. என்பதோடு மாத்திரமல்லாமல் இந்தியர்களின் நன்மைக்காக இந்துக்கள் மீதே அவர்களது உயிர்போன்ற உணர்ச்சிகளை, சுயநலங்களை தகர்த்தெரிய போர் தொடுக்கவேண்டியதான மிக்க கஷ்டமான வேலையாகயிருந்து வருகிறது.

ஆகையால் சுயமரியாதை இயக்க வேலை அக்கஷ்டமான காரியமாயிருக்கின்றதால் இந்து மக்களுக்குள் பிரசாரம் செய்து பகுத்தறிவை எழுப்பி போதனை ஏற்றி அவர்களை சரிபடுத்துவதின் மூலம் பயன்பட வேண்டியதாய் இருக்கின்றது. இப்படிப்பட்ட நிலைமையில் அப்படிப்பட்ட மக்களோடு எடுத்த எடுப்பில் "சத்தியாக்கிரகம்" செய்வதென்பது எப்படி சாத்தியமாகக்கூடியதாகும்? என்பதை பொறுப்புடன் இருந்து யோசித்துப்பாருங்கள். உண்மையிலேயே நம் (சுயமரியாதை இயக்கத்து) எதிரி என்பவனும அதாவது எதற்காகனவனிடம் நாம் சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று கருதுகின்றோமோ அவனும், அதற்காக அந்தக்காரியத்தை சதியமாகக்கருதி சத்தியாக்கிரகம் செய்யும் முறையிலேயே நமது சத்தியாக்கிரகத்தை எதிர்த்து நம்மோடு சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்று எண்ணுகின்றான்.

வாசகர்கள் இந்த இடத்திலுள்ள ஒரு முக்கியமான கஷ்டத்தை நன்றுய்க்கவனிக்கவேண்டுகின்றோம். சத்தியாக்கிரகம் என்பதாக முதல் முதலாக ஆரம்பித்தவர்களான அதன் கருத்தாக்கள் சத்தியாக்கிரகம் என்பதை ஒரு தருமமாகவும் அதாவது கடமையாகவும், நீதியாகவும் அதாவது தெய்வக்கட்டளையாகவும் கருதி அதற்கு அது ஒரு தெய்வீகசக்தி வாய்ந்த தென்ற பொருள் கொடுத்து அதில் தெய்வீகத்தன்மை புதைந்து கிடக்கின்றதென்றும் சத்தியாக்கிரகம் செய்ய ஆரம்பித்து விட்டால் எப்படியானலும் அது ஜெயித்துத்தான் தீருமென்றும், அதற்கு அநேகவிதமான தெய்வீக பத்தியங்கள் (நிபந்தனைகள்) ஏற்படுத்தி அதன் மூலமே மக்களுக்கு சத்தியாக்கிரகத்தில் நம்பிக்கையுண்டாக்கி காரியத்தில் அதை நடத்தி வருகின்றார்கள் அனுபவ பலன் எப்படியிருந்த போதிலும் இன்றும் அந்தக்கருத்திலேயேதான் அதனைப்பெற்று வருகின்றது.

ஆனால், சுயமரியாதை இயக்கக்காரர்களோ தெய்வீகம் என்பதிலேயே சத்தியாக்கிரகக்கர்த்தர் போன்ற நம்பிக்கையுடையவர்களல்ல. சத்தியாக்கிரகத்தை ஒரு தெய்வீக சக்திப்பொருந்தியகாரியமாக அவர்கள் கருதுவதுமில்லை. அன்றியும் சத்தியம் என்கின்ற ஒன்றுக்கு மனித சக்திக்கு மீறினதான ஒரு சக்தி இருப்பதாக அவர்கள் கருதுவதுமில்லை

மற்றும், சத்தியாக்கிரகம் என்பதின் பேரால் செய்யப்படும் காரியங்கள் எல்லாம் சத்தியமானதாய் இருக்கவேண்டுமென்றோ, அல்லது சத்தியமானதாய் இருந்துவிட்டதாலேயே வெற்றிபெற்றுவிடுமென்றோ, வெற்றிபெறக்கட்டுப்பட்ட தென்றோ கருதுவதில்லை.

ஏனெனில், சத்தியம் என்பது ஒரு விஷயத்தில் எல்லாருக்கும் ஒன்றுபோலவே படும் என்று நினைக்கக் கூடியதாய் இல்லை.

நாம் சத்தியமென்று கருதுவது மற்றொருவன் அசத்தியமென்று கருத உரிமையுடையதேயாகும்.

அன்றியும் சத்தியம் என்று ஒருமனிதனுக்குப் பட்டதெல்லாம் உண்மையானதும், நியாயமானதும் என்று கருதிவிடவும் முடியாது.

உதாரணமாக மாட்டை அறுத்து அதன் மாமிசம் சாப்பிடுவது சத்தியமானதாகவும், நியாயமானதாகவும் மௌலானு சௌகத் அலிக்குத் தோன்றலாம்.

அதைத்தடுக்க வேண்டியது சத்தியமாகவும், அதற்காக சத்தியாக்கிரகம் செய்யவேண்டியது நியாயமாகவும் திரு. காந்திக்குத் தோன்றலாம்.

"இருவரும் கடவுள்பக்தர்கள். மதபக்தர்கள்-இருவரும் சத்தியத்திபத்தில் அதாவது கடமையிலும், நியாயத்திலும் நம்பிக்கை வைத்தே இந்தப்படி முடிவு காண்கின்றார்கள்" என்றால் இதில்

எது சத்தியம்?

எது அசத்தியம்?

எது சத்தியாக்கிரகத்திற்குறியது?

எது துராக்கிரகத்திற்குறியது?

இதற்குஎன்ன பரீக்ஷை? என்பனவற்றை கவனித்துப்பாருங்கள்

மற்றும் சிலரும், சாராயமும் சாமிக்கு வைத்துப்படைத்துக் குடித்து, கூத்தாடவேண்டியது கருப்பன், காட்டேரி, மதுரை வீரன், முருகன்முதலியவைகளைக் கடவுளாகும்பிடும் டலஜாதிமக்களுக்குதர்மமாகவும்நியாயமாகவும் தோன்றலாம்.

அதைத்தடுக்க வேண்டியது தர்மமாகவும், நியாயமாகவும் அதற்கு சத்தியாக்கிரகம் செய்யவேண்டியது அவசியமாகவும் காங்கிரசுக்காரருக்குத் தோன்றலாம். இதில் எது நியாயமானது? இதற்கு என்ன ஆதாரம்? என்று பாருங்கள்.

மற்றும் "மற்றொருவன் சமைத்ததை சாப்பிடுவது பாவம்' என்றும் 'மற்றொருவன் தொட்ட தண்ணீரைக் குடிப்பததோஷம்' என்றும் 'மற்றவன் பார்க்கதண்ணீர் சாப்பிடுவது நரகம் சித்திக்கக்கூடியது' என்றும் பண்டித மாளவியாபோன்ற "உத்தம பிராமணர்"களுக்குத்தோன்றலாம், ஆனால் இந்தப்படி நினைப்பதே மகா அக்கிரமமென்றும், ஜாதி ஆணவமென்றும், அறிவீனம் என்றும், சுயநலம் என்றும், அந்த வழக்கத்தை ஒழித்தாலொழிய நாடு ஒற்றுமையும், முன்னேற்றமும், சமத்துவமும் அடையாதென்றும அதை ஒழிக்க சத்தியாக்கிரகம் செய்யவேண்டுமென்றும் சமூக சீர்திருத்தக்காரருக்குத் தோன்றலாம்.

இப்படியே இன்னும் பல உண்டு. இவற்றுள்எது சத்தியம்? எதைப்பற்றிச்செய்யும் சத்தியாக்கிரகம் வெற்றிபெறுவதற்குறியது? என்று யோசிபபோமானால் என்ன முடிவுக்கு வரமுடியும்?

முதலாவது சத்தியத்திற்குஇலக்ஷணம் என்ன என்பதை நிர்ணயிக்க நம்மிடம் என்ன பரீக்ஷைக்கருவி இருக்கின்றது? அப்படியே கண்டுபிடித்தோமாயினும் அந்த சத்திபம் ஜெயித்தாகவேண்டும் என்பதற்கு என்ன ஆதாரமோ, நிர்பந்தமோ, அல்லது நடத்துவிக்கும் சக்தியோ இருக்கின்றது?

சத்தியத்தையும், அசத்தியத்தையும் பற்றி தீர்ப்புச்சொல்ல அருகர் யார்?

சத்தியாக்கிரகம் வெற்றி பெற்றதாலேயே, சத்தியாகிரகம செய்யப்பட்டதற்காக இணங்கவந்தவன் தான் சத்தியத்திற்குகட்டுபபட்டுவிட்டதாகநினைத்துதிருப்தி அடைகிறானா? அல்லது நிர்பந்தத்திற்காக தொல்லை சகிக்கமாட்டாமல் அதாவது திருடனது அடி பொறுக்க மாட்டாமல் மறைத்து வைத்திருந்ததை,குரங்குப் பிடியாய் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்ததை எடுத்துக் கொடுத்து விட்டதுபோல் இணங்கவேண்டியதாயிற்றே என்றுகருதுகின்றானா? என்பனவாகியவற்றை யோசித்துப்பார்த்தால் சத்தியாக்கிரஹத்தின் யோக்கியதை விளங்காமல் போகாது.

நாம் கடை வைத்து வியாபாரம் செய்யும்போது நல்லவியாபாரம் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் ஒரு பிச்சைக்காரன் மேலெல்லாம் அசங்யத்தைப் பூசிக் கொண்டுவந்து கடைக்கெதிரில் நின்று கொண்டு 'ஐய்யய்யா! ஐய்யய்யா!!" வென்று கூப்பாடு போட்டால் உடனே காசு கொடுத்து அனுப்பு கின்றோமே? இதற்கு என்ன பெயர்? மற்றொருவன் அசங்யமான புண்ணைக்காட்டிக்கொண்டு எதிரில் நின்றுகெஞ்சினால் என்ன சொன்னாலும் போகமாட்டேன் என்று பிடிவாதமாய் இருந்தால் அவன் முகத்தைக்கூட பார்க்காமல் பேசாமல் காசு கொடுத்து அனுப்புகிறோமே? இதற்கு என்னபெயர்? இந்தக்காரியங்கள் எல்லாம்சத்தியாக்கிரகமாகுமா? அல்வானால் இவை எப்படி வெற்றி பெறுகின்றன? என்பவைகளைப் பார்த்தால் சத்தியாக்கிரஹம் வெற்றி பெருவதின் இரகசியம் விளங்காமல் போகாது.

சாதாரணமாகசண்டித்தனத்திற்கு 100க்கு 50க்கு மேற்பட்ட விஷயங்களில் வெற்றி ஏற்படுகின்றதை கோரில் பார்க்கின்றோம். இந்த சண்டித்தனத்திற்கு வேண்டியதெல்லாம் மானுவமானம் கருதக்கூடாது, மற்றவன் செய்யும் கொடுமைக்குப்பின் வங்கக் கூடாது என்பவைகளேயாகும். ஆகவேஇக்காரியங்களுக்குத்தயாராய் இருந்தால் எறக்குறைய அனேக காரியங்களில் வெற்றி அடையலாம். ஆனால் சத்தியாக்கிரக எதிரியும் மானத்திற்குப் பயந்தவனாகவும் தொல்லைக்கு ஈடு கொடுக்க சக்தியில்லாதவனாகவும் இருந்தால் தான் முடியும். அவனும் சத்தியாகிரகிகளைப் போல் சண்டித்தனத்திற்கு மானுவமானமற்ற தன்மைக்குத்தயாராய்விட்டானேயானால் யார் ஜெயிப்பார்கள்? என்பது சூதாடுவதுபோலத்தான் முடியும். எப்படியானாலும் இவ்வெற்றிகளுக்கு எமாற்றி ஜெயித்துவிட்டோம்' 'தந்திரம செய்து ஜெயித்துவிட்டோம்' என்று தான் சொல்லவேண்டுமேயொழிய சத்தியத்தினால் என்று சொல்லமுடியவே முடியாது. சுருக்கமாக உண்மையைச் சொல்லவேண்டுமானால் இந்த வெற்றிக்கு காரணயத்தையும் சுயமரியாதையையும் விலையாகக்கொடுத்ததான் வெற்றிபெற்றோம்என்றுசொல்லவேண்டுமேயொழிய மற்றபடி நியாயம் வென்றுவிட்டது- சத்தியம் ஜெயித்துவிட்டது என்று சொல்லுவது பித்தலாட்டமேயாகும். ஆகவே சத்தியாக்கிரஹம் என்கின்ற பெயரே அர்த்தமற்றதாகும் என்பதும் அன்போல் கையாளப்படும் முறைகளும் தன்மதிப்பற்றதாகும் என்பதும் ஒருவனுடையமுடிவானால் அவன் தன்மதிப்பைப்பறிகொடுத்து ஒருகாரியத்தை நிறைவேற்றுவது என்பது கண்ணைவிற்று சித்திரம் வாங்குவதுபோலேயாகும்.

அன்றியும் சத்தியாக்கிரகத்தில் அகிம்சை இருக்கின்றது என்றும், பலாத்காரம் இல்லையென்றும், ஆதலால் வெற்றிபெறஅது ஒரு சாதனம் என்றும் செல்லப்படுகின்றது. இதிலும் ஏதாவது உண்மைஇருக்கின்றதாஎன்பதை யோசித்தால் விளங்காமல் போகாது. இம்சை என்பதற்கு அருத்தம் என்ன? என்பதை முதலில் தெரிந்துகொள்ளவேண்டும். ஒரு மனிதனின் சரீரத்தை நோகச்செய்வதோ ஒருமனிதனுடைய மனதை நோகச்செய்கின்றதோ ஆகிய இரண்டு காரியங்களும்இம்சையில்பட்டதேயாகும். இதுஒவ்வொருமனிதனுடையவும் அனுபவமேயாகும். யாருடையசரீரமும் நோகாமல், மனமும் நோகாமல் எந்தக்காரியத்திற்காகிலும் சத்தியாக்கிரகம் செய்யக்கூடும் என்றுயாராலும் சொல்ல முடியாது.

ஆகவே, சத்தியாக்கிரகத்தில் அகிம்சை இருக்கின்றது என்று சொல்வதெல்லாம் உண்மையை மறைத்தும், திரித்தும் சொல்லுவதாகுமே யொழிய, மற்றபடி நாணயமான வார்த்தை யாகாதென்றே சொல்லுவோம்

நிற்க, மற்றொரு முக்கியமான விஷயம் என்னவென்றால் சுயமரியாதை இயக்கத்தின் லட்சியம் சமதர்மத்தன்மையும், சமஉடைமைத்தன்மையும் என்று முடிவு செய்து கொண்ட பிறகு, கையில் வலுத்தவனும், தந்திரத்தில்வலுத்தவனும், உலக சுகபோகங்கள் தனக்கே வரும்படி செய்து கொண்டு இனைத்தவனையும், சாதுவையும் அடிமைகளாகிஆண்டு,பயன் பெற்று வரும்போதும், இதுவே சத்தியம், இதுவே தருமம், இதுவே நீதி, இதுவே கடவுள் கட்டளை, இதுவே வேதத்தின் கருத்து, சாஸ்திரத்தின் சம்மதம் என்று ஏற்பாடு செய்து வைத்திருக்கும் போதும், சத்தியத்தின் பேரால் எதற்கு சத்தியாக்கிரகம் செய்ய முடியும் என்பதை யோசித்தால், சத்தியாக்கிரகத்தின் பயன்படாததன்மைவிளங்கும்.

கோயில் இடிப்பதும், சாமி சொத்துக்களையும் மடாதிபதிகள் சொத்துக்களையும் பறிமுதல் செய்து "பஞ்சமர்களுக்கு"ப் பிரித்துக்கொடுத்து, மடாதிபதிகளை விவசாயத்தில்போடுவதும், ஜமீன்தார்கள் பூமிகளைக்குடிகளுக்கு பங்கு போடுவதும், அரசர்களும் பிரபுக்களும் நாழிஅரிசியுடனும், நான்குமுழத் துண்டுடனுமேதரனிருக்கவேண்டுமென்பதும் முதலாகிய காரியங்களுக்கெல்லாம் சத்தியாக்கிரகம் செய்ய முடியும்? செய்தால் அதற்கு சத்தியாக்கிரகம் என்கின்ற பெயர் தகுமா? என்பனவற்றை யோசித்துப் பாருங்கள்.

இவைகளையெல்லாம் நன்றாகக் கவனித்து பகுத்தறிவுடன் சமதர்ம நிலைமையில் இருந்து பார்த்தோமேயானால்சத்தியாக்கிரகம்என்னும் வார்த்தையும், அதன் பிரசாரமும், அனுபவமும் மறைமுகமாய் வைதீகத்தை-வருணச்சிரமத்தை பிரசாரம் செய்யப்படுவதேயொழிய வைதீகத்திலும், தெய்வீகத்திலும்நம்பிக்கை உண்டாக்கச்செய்வது என்பதைத்தவிர மற்றபடி நமது மக்களுக்கு இன்று உண்மையாய்க்கிடைக்க வேண்டிய மனிதத்தன்மையான நியாயத்தையும், அதை நிறைவேற்றவேண்டிய தான தர்மத்தையும் உணர்த்துவதாகாது என்பது நன்றாய் விளங்கும்.

எனவே, இதுவரை சொல்லிவந்தவைகளில் இருந்து ஒருமனிதன் தன் தனதுலக்ஷியமானவெற்றிபெறுவதற்குசத்தியாக்கிரகம் செய்யப்படுவதுஎன்பது பொருளற்றதென்றும்: தன்மதிப்பற்ற தென்றும் தான்எதிர்க்காட்டப்பட்டதேயன்றி, லக்ஷியசித்திக்காக எவ்வித முயற்சியோ, தியாகமோ செய்யப்படாது என்பதற்காக சொல்லப்பட்டவைகள் அல்லஎன்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றோம்.

இனி லக்ஷியசித்திற்காக மனிதன் சுயமரியாதைக்காரன்கையாடவேண்டிய முறைகளைப் பற்றியும், தியாகம் செய்யவேண்டிய துறைகளைப்பற்றியும் பின்னால் விவரிப்போம்.

மாளவியாஜீ.

சேர்மாதேவி குருகுல சம்பந்தமாய் தூத்துக்குடி டி. ஆர். மகாதேவய்யர் என்கின்ற பார்ப்பனரை 100க்கு 90 பார்ப்பனரல்லாதார்மது நாட்டில் குற்றம் சொன்னார்கள்-சொல்லுகின்றார்கள். இதனாலேயே அவரை அரசியல் உலகத்தை விட்டு ஓட்டியும் விட்டார்கள். அவரும் தனக்கும் அரசியலுக்கும் சக்தி இல்லீ என்று கருதி வாழ்க்கைக்கு வேறுவழியையும் தேடிக் கொண்டார்.

இதற்கெல்லாம் காரணம் என்ன? 'பார்ப்பனன் சாப்பிடுவதை பார்ப்பனரல்லாதவன் பார்க்கக்கூடாது' 'பார்ப்பனனும் மற்றவனும் சமபந்தியாய் உட்காரக்கூடாது' என்று அவர் சொன்னதேயாகும். ஆனால் பண்டிதர் மதன்மோகன மாளவியாஜீ அவர்களை எந்த விதத்திலாவது திரு மகாதேவய்யரைவிட மேலானவர்? அரசியல் உலகத்திலிருக்கத் தகுந்தவர்? என்று கேட்கின்றோம். மகாதேவய்யராவது தன்னைப் பொறுத்தவரை நம் எதிரில் சாப்பிட நம்முடன் உட்கார்ந்து சாப்பிட்டுமிருக்கின்றார். மாளவியாஜீ அவர்களோ 'கிழ் ஜாதிக்காரர்கள் கோயிலுக்குள் போகக்கூடாது என்றும், அவர்களுக்கு வேறு இடம் வேறு கோவில், வேறு பள்ளிக்கூடங்கள் இருக்கவேண்டும் என்றும் சொல்லுகிறார்.

தனது சம்மந்தி பார்ப்பனரல்லாதவனிடம் உட்கார்ந்து சாப்பிட்டவனிடம் உட்கார்ந்து சாப்பிட்டதற்கு அவரை ஜாதியை விட்டுத் தள்ளினவர்.

பார்ப்பனரல்லாதார்இடம் கோடிக்கணக்கான ரூபாய்களை வசூல் செய்து கட்டிய, ஏற்படுத்திய காசி இந்து யூனிவர்சிட்டி பள்ளிக்கூடத்தில் தீண்டாதவர்கள் உள்ளே வரக்கூடாதென்றார், பார்ப்பனரும், அல்லாதாரும், சமபந்தியாய் இருக்கக்கூடாதென்றும், அவருக்கு வேறுபடிப்பு, இவருக்கு வேறுபடிப்பு என்றும், ஏற்பாடு செய்துவைத்து அதற்கு தானே எஜமானனுய் இருந்து நடத்தியும் வருகின்றார். இப்படிப்பட்ட ஒருவர் இன்றைய தினம் இந்தியநாட்டு மக்களுக்குத் தலைவர் என்றும், பிரதிநிதி என்றும், சொல்லுவதாலும் இந்திய மக்களுக்கு சுயமரியாதையோ, ஞானமோ இருக்கின்றதாகக்கொள்ள முடியுமா? என்றுகேட்கின்றோம். இன்றையதினமும் பண்டித மாளவியாஜீ ஒரு பார்ப்பனரல்லாதான் முன் தாகத்திற்குத் தண்ணீர் சாப்பிட்டால் பாவம் என்று நினைத்துக்கொண்டிருக்கின்றவர். சுயராஜியம் வாங்கப் போகும்போதுகூட இந்தியாவிலிருந்து பார்ப்பனர்களாலேயே பார்த்தெய்த எனங்களில் தண்ணீர்கொண்டு போகின்றார். தனி சமயலறையில் சமைத்துக்கொண்டு போகிறார். இது யாவருமே அறிந்ததாகும். ஆகவே இவரால் இந்தியாவுக்கு எவ்விதம் சமதர்ம முள்ள சுயராஜியம் கிடைக்கும் என்பதை 'தேசபக்தர்கள்' கவனிக்கவேண்டாமா? என்றுகேட்கின்றோம். இதைச்சொன்னால் எம்மை கெட்டவன் என்றும், பாவி என்றும் சொல்லுகின்றார்களேயொழிய அவர் அப்படிச்சொல்லுவது நியாயமா? அல்லது சுயமரியாதைக்கேற்றதா? என்றாவது சிந்திப்பதில்லையென்றால் பிறகு நாம் என்னதான் செய்வது? இவர்களைப்பற்றி நாம் என்ன தான் நினைப்பது? நமது மக்களை எப்படித்தான் நினைப்பது? என்பது நமக்கு விளங்கவில்லை. சுயமரியாதைக்காக பாடுபடுவதாகச் சொல்லுகின்றவர்கள் இதையெல்லாம் எப்படி மறைத்து வைப்பது என்பதும் நமக்கு விளங்கவில்லை.

பண்டித மாளவியாஜீ அவர்கள் நம்மை எதிரில் சாப்பிடுவதால் நமக்குப் பசி அடங்கிவிடும்என்பதாகநகருதி நாம் அதை இங்கு குறிப்பிடவில்லை. ஆனால் அவர் இப்படி மறைவாய் சாப்பிடும் போது நம்மை என்னமாய்க்கருதி அப்படிச்சாப்பிடுகின்றார் என்பதுதான் கவனிக்கத்தக்கது என்று சொல்லுகின்றோம்.

காந்திஜீ.

திரு காந்திஜீ அவர்களோ உலகம் தோன்றியதுமுதல் காணப்படாத வேடிக்கை மனிதராக இருந்து வருகின்றார். அதாவது தான் அரை வேஷ்டிகட்டி இருப்பதற்குக்காரணம் உலகமக்களுக்குத் தேவையான துணி கிடையாதாம்! ஆதலால் சிக்கனத்தை உத்தேசித்து அரை வேஷ்டியுடன் இருக்கின்றாராம்!! இதை உலகம் ஒப்புக்கொண்டு அவரை சபர்மதிரிஷி என்று சொல்ல ஆரம்பித்துவிட்டார்கள் நமது அரசியல் பாகவதர்கள். ஆனால் நம்நாட்டு மக்களில் அதே உடுக்குக்கஞ்சிக்கே மார்க்க மில்லாமலிருக்குமபோது ஆட்டுப்பாலும், ஆஞ்சப்பழரசமும் சாப்பிடுவது கவலைப்படக் கூடியதல்லவாம்! அது எப்படியோபோகட்டும். இதற்காகநாம் அவரை அவருக்குப் பிடிக்காத உணவை சாப்பிடச்சொல்லவில்லை. காந்திஜீ அவர்கள் தனது காலுக்குச் செருப்பு போட்டுக்கொள்ளவேண்டியதற்காக தோலாலேயே செத்தமாட்டுத் தோல் ஒன்றை கையில்கொண்டு போகின்றாராம்! 'என்ன ஜீவகாருண்யம்!' என்பதை நினைத்துப் பாருங்கள். உலகிலுள்ள 175 கோடி மக்களில் வேறு யாருக்காவது இந்த எண்ணம் தோன்றுமா? என்று பாருங்கள். சமணர்களுக்குக்கூட இவ்வளவு ஜீவகாருண்யம் இருந்ததாகக் காணமுடியவில்லை. திரு காந்தியைத் தவிர மற்ற மனிதன் எல்லாம் கொலைபாதகர்கள் என்றும் திரு காந்தி ஒருவரே அஹிம்சாதருமமூர்த்தி என்றும் கருத வேண்டுமென்பதாகவே இந்தச்செய்கையினுடையவும் இதன் விளம்பரத்தினுடையவும் தன்மை ஆகின்றது. அஹிம்சா தர்மம் எப்படியோ போகட்டும். அதைப்பற்றி யாரும் கவலைப்பட வேண்டியதில்லைஎன்று வைத்துக்கொள்ளலாம்.

இனி அவரது வருணதருமம் என்னவென்பதையோசித்தால் அதாவது 'வருணாசிரம தர்மம் சரிவர நடந்துவராததாலேயே இந்தியாவுக்கு சுயராஜியம் இல்லாமல் போய்விட்டது' என்று அவர் சொல்வதையோசித்தால் அவர்மனக்கெல்லாம் எப்படிப்-பட்ட முறையில் பிரதிநிதியென்பது விளங்கவில்லை?

இதுமாத்திரமல்லாமல் 'சுயராஜியம் கிடைத்தாலும் கடவுள் செயல், கிடைக்காவிட்டாலும் கடவுள் செயல்' என்று சொல்லிக்கொண்டு போகின்றார் ஆகவே எவ்வளவு பொறுப்புடன் பேசுகின்றார் என்பதும் எவ்வளவு தன்மைபிக்கையுடன் போகின்றார் என்பதும் இதிலிருந்தே அறியலாம். பொறுப்பும் இல்லாமல் தன்னம்பிக்கையும் இல்லாமல் இருக்கும் ஒருவரே இந்தியப் பிரதிநிதியாய் போகின்றார் என்றால் இதை ஒப்புக்கொள்ளுபவர்கள் எவ்வளவு ஞானமுள்ளவர்கள் என்பதையும் கவனித்தால் விளங்காமல் போகாது.

எந்த இந்தியன் வாய்திறந்தாலும் 'மகாத்மா அவதார புருஷர், ரிஷி, முனிவர்' என்பவைகளான "தெய்வீக"த்தன்மைகளை அவர் மீது ஏற்றிச் சொல்லுவதாலே யே மத சம்பந்தமான மூடநம்பிக்கைக் கண்ணைக்கொண்டே திரு காந்தியைப் பார்க்கின்றார்களே யொழிய பகுத்தறிவுக் கண்ணைக்கொண்டு ஒருவராவது பார்க்கவில்லைஎன்பதும் மதசம்பந்தமான மூடநம்பிக்கைப்பிரசாரமுறையிலேயே மக்களை ஏமாற்றுகின்றார்கள்என்பதும் வெளிப்படையாய் விளங்கவில்லையா? என்று கேட்கின்றோம். இந்தப்படி இன்று எந்த நாட்டிலாவது ஒரு அரசியல்மனிதரை அவதாரமூர்த்தி மகாத்மாஎன்பதுபோன்றதன்மைகளால் கருதுகின்றார்களா? என்று யோசித்துப்பாருங்கள்.

ஆகவே நமது நாட்டுக்கு இன்னமும் எத்தனை காலத்திற்குத் தான் ரிஷிகளும், அவதாரங்களும், மகாத்மாக்களும் தோன்றிக்கொண்டிருப்பது என்பதும் அவர்களது "தெய்வீகத்தன்மை"க்கு ஆளாய்க்கொண்டிருப்பதென்பதும் நமக்கு விளங்கவில்லை.

(இஸ்லாம்மதக்கொள்கைப்படியாவது 'இனிமேல் நபிகள் கிடையாது' என்பதுபோல் நமக்கும் 'இனிமேல் மகாத்மாகிடையாது. அவதார புருஷர் கிடையாது' என்று எற்பட்டாலொழிய இந்தியர்களுக்கு ஒருநாளும் பகுத்தறிவு உண்டாகப்போவதில்லை.)

இவைகள் எல்லாம் மத சம்பந்தமான எண்ணங்கள் அல்லவா? என்றுதான் கேட்கின்றோம். இதற்காக நம்மீது கோபித்து என்ன செய்வது? வெட்டுவதாகவும்-குத்துவதாகவும்-மிரட்டுவதால் என்னபயன்?

நவஜீவான் தொண்டரும் தலைவரும்.

நவஜீவான் பாரத வீரர்கள் 'காந்தி ஓழிக' என்று சொல்லி தடுத்து கன்னம் அடிப்பட்ட சேதி ஒருபக்கம் இருக்க, நவஜீவான் பாரத வீரர் சபை தலைவரான திரு சுபாஸ் சந்திரபோஸ் அவர்கள் திரு. காந்தி வட்டமேஜை மகாநாட்டுக்குப்போவதைப் பற்றி தங்களது திருப்தியையும் தாங்கள் திரு. காந்தியவர்களையே பின்பற்றி வருவதாகவும் உறுதி கூறி தந்தி அடித்திருக்கின்றார். (இது 29-8-31 தமிழ் நாட்டு பத்திரிகையில் இருக்கிறது). இதிலிருந்து பாரத நவஜவான் சபை கொள்கைகளின் போக்கியதையும் தலைவர்களின் போக்கியதையும் விளங்குகின்றது.

நவஜவான் பாரத வீரர்கள் என்று சொல்லிக் கொள்ளும் வாலிபர்கள் கவனிக்கத் தக்கதாகும்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கே. ஏ. எம். மாணிக்கம் அவர்கள் தமது உரையை நிகழ்த்தினர். அது மற்றொரு பக்கம் பார்க்க.

தலைவர் தேர்தல்.

திரு. கே. வி. அழகர்சாமி அவர்களை மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி திரு. கே. ஏ. எம். மாணிக்கம் அவர்கள் பிரேரேபிக்க, திருவாளர்கள் சாமி சிதம்பரனர், திருமலைசாமி, கல்யாணசுந்தரம், ஈ. வெ. இராமசாமி ஆகியவர்கள் ஆதரித்துப் பேசினர்கள். ஈ. வெ. இராமசாமி பேசும்போது தொண்டர், தலைவர் என்கின்ற பாகுபாடு எதைப்பற்றிய தென்று தனக்குத் தெரியவில்லை என்றும் இப்போது அது சண்டை பிடித்துக் கொள்ளத்தான் உதவுகின்றதென்றும், தொண்டருக்கு என்ன வேலை, தலைவருக்கு என்ன வேலை என்று எந்த மகாநாட்டிலும் தீர்மானிக்கவில்லை என்றும் இனி தொண்டர் என்றும் தலைவர் என்றும் பிரிவினைத்தேவையில்லை யென்றும், பேரளவில் இப்படியிருந்தபோதிலும் காரியத்தில் எல்லாரும் ஒன்றுகத்தான் உழைக்கிறார்களென்றும், சையிலே காசு தாராளமாக ஓட்டமுள்ளவர்கள் தலைவர்களென்றும், காசில்லாமல்கஷ்ட மடைபவர்கள்தொண்டர்களென்றும்சொல்லிக்கொள்ளுகின்றார்களேஒழிய யோக்கியதையிலும், லட்சியத்திலும், உழைப்பிலும், கஷ்டத்தைப் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வதிலும ஒருவருக் கொருவர், கடமி ஜாஸ்தியாய் இருக்கிறார்களென்று சொல்வதற்கில்லையென்றும், வேறு இயக்கங்களில் சிலர் தாம் தலைவர்களாவதற்காக சிலரைப் பிடித்து ஒரு கூட்டத்தை ஏற்படுத்தி அவர்களுக்கு ஏதாவது கொடுத்து அவர்கள மூலம் தாங்கள் தலைவர்கள் ஆவது வழக்கம என்றும் அந்த வழக்கம் நம இயக்கத்தில் பற்ற இடம் கொடுக்கக் கூடாது என்றும, இந்த மகாநாட்டில் தலைமை வகிக்கும் திரு. அழகர்சாமி அவர்களைத் தொண்டரென்று சொல்வதா? அன்றி தலைவரென்று சொல்வதா? என்பது தனக்கு விளங்கவில்லை என்றும் அவர் நம் இயக்கத்துக்காக நன்றாய் உழைப்பவர் என்றும், இயக்கக்கொள்கைகளைப் பின்பற்றி தமக்குப் பட்டவற்றைத் தைரியமாக யெடுத்து சொல்பவர்கள் வெகு சிலரே யென்றும் அவர்களில் இவரே முன்னணியில் யிருக்கிறாரென்றும், இயக்கம் ஆரம்பித்த காலந் தொட்டு நம் நாட்டிலே இது வரைச் செய்யப்பட்டிருக்கும் பிரசாரத்துக்கு இவர் முக்கிய ஆதாரமானவரென்றும், இவர் இதினின்றும் விலகினிடத்தக்க விதத்தில் எவ்வளவு ஆசை காட்டப்பட்டபோதிலும், கவர்ச்சியேற்பட்ட காலத்திலுங்கூட, கொஞ்சமும் சலியாது, அசையாது, மிகக் கஷ்டத்துடன், நிலை தவறாமல் இருந்து வேலைசெய்தவர் என்றும் குறிப்பிட்டார்.

பின்னர் தலைவர் தமது ஊக்கமும், உணர்ச்சியுமிக்க சொற்பொழிவை நிகழ்த்தினர். (அது அடுத்த வாரம் வெளி வரும்.)

வரவேற்புப் பத்திரங்கள்.

பின்னர் மகாநாட்டின் சார்பாக திருமதி எஸ். குஞ்சிதம் பி. ஏ., திரு. எஸ். என். பொன்னையா, திரு. ஈ. வெ. இராமசாமி ஆகிய மூவருக்கும் திரு. சாமி சிதம்பரனர் அவர்களால் வரவேற்புப் பத்திரங்கள் படித்துக்கொடுக்கப்பட்டன.

திருமதி எஸ். குஞ்சிதம் பதிலளிக்கும்போது, மகாநாட்டில் பெண்கள் அதிகமாக ஆஜராகாது செய்யாததுபற்றி வருந்துவதாகவும், இனியேனும் தங்கள் சகோதரிகளையும் பெண்டுகளையும் கூட்டிவரும்படி ஆடவர்களைக் கேட்டுக்கொள்வதாகவும், தான் எந்த உத்தியோகத்தைக் கைக்கொண்டபோதிலும் பெண்களுடைய முன்னேற்றத்துக்காகவும் இயக்க அபிவிருத்திக்காகவும் உழைப்பதாக உறுதி கூறுவதாகவும் குறிப்பிட்டு, தமக்களிக்கப்பட்ட பத்திரத்துக்கு நன்றி செலுத்தினர்.

திரு. எஸ். எஸ். பொன்னையா அவர்கள் பதிலளிக்குபோதும், தம்மைப்பற்றி அதிகமாகப் புகழ்ந்து கூறப்பட்டிருக்கிறதென்றும், தாம் சிறிது செய்திருந்தால் அது தன் கடமையைப் பொறுத்ததாகவேயிருக்குமென்றும, தலைவருலகத்துக்குத் தம்மை ஏற்றுமதி செய்துவிடாமல் தொண்டர் உலகத்திலேயே வைத்துத் தம்மிடம் வேலை வாங்கிக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதாகவும் குறிப்பிட்டு நன்றி செலுத்தினர்.

ஈ. வெ. இராமசாமி பதிலளிக்கும்போது, தம்மைப்பற்றிச் சொல்லப்பட்டிருப்பவற்றைச் செயலிற்கொண்டுவர முயற்சி செய்வதாகக் குறிப்பிட்டு வந்தனமளித்தார். இத்துடன் காலை நிகழ்ச்சிகள் முடிந்தன. பிற்பகலில் கமலாலயத்தின் பின்புறமுள்ள மடத்தில் அனைவருக்கும் உணவு அளிக்கப்பட்டது.

அகசமயம் சாப்பாட்டு மண்டபத்தில்நாகை, திருவாரூர், திருச்சி முதலிய பிரதிநிதிகளால் 2, 3 கட்சிய க சுயமரியாதைப் பாடல்களும் சமதர்மப் பாடல்களும் பொது உடைமைப் பாடல்களும் சுமார் ஒருமணிநேரம் பாடப்பட்டன.

பிற்பகல் நிகழ்ச்சிகள்.

பிற்பகல் 3-30 மணிக்கு, கருணிதி தியேட்டரின் முன்பு போடப்பட்டிருந்த கொட்டகையில் விஷயாலோசனைக் கமிட்டிக் கூட்டம் நடை பெற்றது. பல தீர்மானங்கள் நிறைவேறப்பட்டன. பின்னர் குரூப் போட்டோ படங்கள் எடுக்கப்பட்டன.

தீர்மானங்கள்.

அப்பால் மீண்டும் மகாநாடு கூடியது. பிரதிநிதிகளும் பெண்களும் காலையில் ஜபருஞ் செய்ததை விட பல மடங்கு அதிகமாக விஜபருஞ் செய்திருந்தார்கள். 6 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தலைவர் முடிவுரையுடன் மகாநாடு முடிவுற்றது.

(தீர்மானங்கள் அடுத்த வாரம் வெளிவரும்.)

கோயில்களை இடிக்க சர்க்கார் உத்திரவு.

லண்டன் 'டைம்ஸ்' பத்திரிகைக்கு அதன் ரிகா நிருபர் பின்வருமாறு எழுதுகிறார்:—

ரஷியா தேசத்தின் தலைநகராகிய மாஸ்கோ நகரிலே கிறிஸ்து நாதரின் பெரியதோர் புராதன தேவாலய மொன்றிருக்கிறது. இந்த தேவாலயம் அந்நாளிலுள்ள மற்றெல்லா தேவாலயங்களையும் விட மிகப்பெரியதும் மிகப் புராதனமுமானது. இக்தேவாலயத்தை மண்ணோடு மண்ணாக இடித்துத் தகர்த்து விட சோவியத் சர்க்கார் உத்திரவு பிறப்பித்திருக்கிறார்கள். இந்த தேவாலயக் கட்டிடம் மிகப் பழமை வாய்ந்தபடியால் அது ரஷியதேச சரித்திரத்தின் ஒப்பற்றதோர் சின்னமாகும். ஆனால் அந்தக்கோயிலைசர்க்கார்காரியாலயமாக்கசோவியத்சர்க்கார்ஆலோசனைசெய்தனர். ஆனால் அந்தக்கட்டிடம் பழங்காலத்து ரஷிய சிற்ப முறையில் கட்டப்பட்டுள்ளபடியாலும், செல்வச்செருக்குடைய தனவந்தர்களாலும், ஜமீன்தார்களாலும் அக்கோயில் கட்டப்பட்டுள்ளபடியாலும் அதன்ஞாபகமே யிருப்பதற்கில்லாமல்அதை தரையுடன் தரையாக இடித்துத் தகர்த்து அவ்விடத்திலே புதிதாக சர்க்கார் மாளிகையை நிர்மாணம் செய்யவேண்டுமென்று சோவியத்சர்க்கார் நிச்சயம் செய்து அவ்விதம் செய்ய உத்தரவு பிறப்பித்திருக்கின்றனர். 1933ம் வருஷ முடிவிற்குள் அங்கு சர்க்கார் காரியாலயக் கட்டிடம் கட்டிமுடிந்துவிடும். எனெனில் அப்பொழுது ருஷிய ஐந்துவருடத்திட்டமும் முடிவுற்று விடுமாதலால், அதையொட்டி சர்க்கார் மாளிகையின் திருப்பிரவேசத்தை நடத்த உத்தேசித்திருக்கின்றனர்.

(குமரன்)

திருப்பூர் டி. மு. கோர்ட்டு.

O. S. No. 1296 of 1921.
E. P. No. 1407 of 1931.

மூரா. ம. அரு. நடேசஞ் செட்டியார்—வாதி.

பல்லடம் தாலூகா தொங்குட்டிபாளையம் கிராமம் கஸ்பாவிலி நக்கும் ராமேகவுண்டன் மகன் கெட்டி முத்திக்கவுண்டன்—பிரதிவாதி.

தீர்ப்புக்கடளியாகிய டிபிரதிவாதி என்பவருக்கு

மேலேகண்ட வியாஜ்யத்திலே டிக்ரி பெற்றவராகிய வாதி என்பவர் ஜப்தியான ஸ்தாவர சொத்துக்களை விற்பனைக்காக மனு செய்து கொண்டிருக்கிறபடியால் விற்பனை இஸ்தியாரின் ஷரத்துக்களை நிர்ணயிப்பதற்காக 1931வரு செப்டம்பர் மீ 7தேதி நிஷ்காரிசை செய்யப்பட்டிருக்கிறதென்றும் இதனால் உமக்குத் தெரிவிக்கலாகிறது.

(Sd.) M K. Govindarajalu,
Chettiar Advocate for D.H.
Tirupur.

விதவைத் தன்மை.

"ஓயாத்துன்பம்—ஒழியாவேதனை"

(உ. க.)

பொதுவாகப் பெண்மக்கள் ஆண் மக்களது வலிவுள்ள ஆதிக்கத் தால் கட்டுண்டு கொடுங்கோட்டாளாக ஷியாரது கொடுந் துன்பத்திற்குப் பாத்திராகி அடிமைகளாக மீளாவழியின்றி அல்லலுற்று உழலுகிறார்கள் என்பது ஒரு புறமிருக்க, பெண் உலகிலே ஒரு பெரும் பகுதி அதிபால்ய த்திலே மணம் செய்விக்கப்பட்டு யுவ திப்பருவத்திலே புருஷனைப் பறி கொடுத்துப் புருஷசக மின்னதென வறியா விதவைப் பெண்களாகவும், இல்லற இன்பமின்னதென்றறியா "நிர்ரக்கியவதி"களாகவும் தம்வாழ் நாளோ ஓயாத்துன்பமாகவும், ஒழியா வேதனையாகவும் கழித்து, தம் உயிரை அணுஅணுவாகப் போக்கிக் கொண் டெ வருகிறார்கள்என்பது நம்நாட்டில் நாம் காணும் பிரத்தியட்சக் காட்சியா கும். பாலய விதவைகள் தம்போன்ற ஏனையப் பெண்கள் அனுபவிக்கும் சுகத்தையும், அதனால் அவர்கள் எய் தும்குதூகலத்தையும் காணுந்தோறும் உள்ளநொந்தும்பி, மனங்கொதித்து 'தமக்குப் பிறரால் அப்பாக்கியம் தடைபட்டு கிடைக்காமல் போயிற் றே!' என ஏங்கி, அழுதுத்தேற்ற வரற்றுக்கிடக்கும் அசேரமான காட்சி வேறு எந்த நாகரீக நாட்டிலும் காண முடியாப் பரிதாபகரமான தோற்றம ஆகும். சொல்லால் விவ கரிக்கவும், மனதால் யூகித்து ரிணயிக்கவும் அசாத்தியமான பாரசக்க டமான நிலையிலே நம் பால்ய விதவ ரத்தினங்கள் வீற்றிருப்பதற்கு மூலகாரணமாக விளங்குவோர் பெற் றோர், பந்துகுழுங்கள், இவர்களது அந்நாட்சிப் பந்திரங்களாய் விளங் கும வேதம், சாஸ்திரம், ஸ்மிருதிக ளேயாகும என்பது அறிவாளிகளால் பறைசாற்றப்பட்டுவரும உண்மை மொழிகளாகும்.

பால்ய விதவைகளைச் சிருஷ்டித்த தற்கும், அவ்விதவைப பெண்கள் அப்பருவாளவியிலே ஆயுள் முழு தும் கிடந்து அவ்வித வாஸ்திரியிலே யே இறக்கவேண்டு மென்பதற்கும்; காரணம் 'பூர்வஜன்ம வினைப்பயன்' என்றும, 'கடவுளது திருச்சித்த அமைப்பு' என்றும, 'வேதஸ்மிருதி வின் முறையீடு' என்றும், 'தலை விதி' என்றும பலமாகக்கூறி. சாஸ்தி ரங்களிய ஆதாரகாட்டி மெய்ப்பிக்க முயலுவோர் இவ்விருபதாம் நூறூ ண்டில் மிக மிச்சொற்பத் தொகை யினரேயாகுர; அவ்வற்பத் தொகையி னரும அறிவாளிகளாலும், உலகறிவு பூர்ணமாயமைந்த மேதாவிகளாலும் 'கொடுமையாளர்' என்னும் 'பரந்த நோக்கமும், நாகரீக உலகறிவு இல் லாதார்' என்றும், சுயமரியாதையின் ஒளிக்கு நெடுந்தூரத்திலே அந்த கார த்திலே மூழ்கியிருப்போர் என்றும், 'தேச முன்னேற்றத்தின் கோடாரிக் காம்புகளென்றும் கூறப்பட்டுச் சமூக விடுதலையின் விரோதிகளாகப் பழிக் கப்படுகின்றனர். சமூகத்திலே யிரு கரும் கெடுமையான கடுதாசிட்டங் களாலும் உதறித்தள்ளி அவைக ளுக்கு மூலகாரண பூதர்களை மிதித்து அடிமைகளாக்கிக்கொண்டு பேதமை க்குப் பதிலாகத் தைரியத்தையே அணிகலமாகப் பூண்டு, ஞானதிற்கு மாறுக வீரத்தை பெற்ற. தனக்குச் சரிநிகராகவும், மனதிற்கொத்தவராக வும், பகுத்தறிவுணர்ச்சி பெற்றவரா கவும் உள்ள பூமாதேவிபூர்ண, சுய மரியாதை மாமதியின், நிலவிலேசல் லாபித்து நிற்கும் நாளை எந்நாள் பால்யவிதவைப் பெண்கள் அடைகின் றனரோ அந்நாளேதம் இந்நிலதாடு சம்பூர்ண சுயராஜ்யமடைந்த திருநா ளாகும்.

பாலய விதவைகள் தம் வாழ்நாளை ப்புதுப்பிக்க மனத்திற்குத்தகுதிதப்படு வதையும், ஆங்காங்கே விதவா விவா கம் ஏராளமான எதிர்ப்புகளிடையே சிறப்பாக நடைபெறுவதையும கண்டு தனது கலர்சாலேப்படிப்புக்கு முற் றுப்புள்ளி வைத்தவர்களும், ஓரள வுக்கு உலக ஞானமறிந்தோறும், தேச தத்துவ ஆராய்ச்சியில் இறங் கினவர்களும, மறு மணத்திற்குச் சம்மதிக்கும் விதவைகளை 'வீட்டுக் கடங்காதபட்டி'களென்றும், 'ஊருக் கடங்காத பஜாரி' களென்றும் 'சித் தின்பப்பிரியர்கள்' என்றும் 'புலன டக்கச்சக்தியற்றவர்க'ளென்றும் பல வும் கூறித்தூற்றுகின்றனர்.

இவ்ப துஷ்பங்கள் அவரவர்கள் மனோநிலைக்குத்தக்கவாறு, அறி வின் முதிர்ச்சிக்கு ஏற்றபடியும் ஒவ் வொருவருக்கும் உதைத்துக்கின்றனவா னாலும் வயதின் கால அளவுக்கும் தக்கவாறு ஒவ்வொரு புதுப்புது ரூபம் ஒவ்வொரு வயது காலத்திலே ஒவ்வொருவரையும் விலக்கமுடியா வகையில் சூழ்ந்து கொள்ளுகிறது என்பது உலக அநுபவம்.

உதாரணமாக பால்யக்குழந்தைகள் 'மரப்பொம்மை, கந்தைத்துணி, காலியான சிகரெட்பெட்டி, கிழிந்த சீட்டுக்கட்டு முதலிய அற்பப்பொருள் கள்மேல் மட்டற்ற பிரேமையைக் கொள்ளுகின்றன. அவைகளிலே சாசுவத மான இன்பம் நிறைந்திருக்கிறது என்று நிசயித்து மகிழ்கின்றனர். வாலிபப்பருவத்தை அடைகின்ற வர்கள் 'வேட்கை' உண்டாவது சகஜமல்லவா? தம் வாழ்நாளிலே மிகவிக முக்கியபாகமானதும், உச்சியான நிலை 'எனமதிக்கும்படியான தமான பௌவன பிராயத்திலே, பரிபக்குவ தேஜசோடு விளங்கும் 'விதவைகளென்னும்' அவ்வனிதாரத்னங்களைட்டும் 'பாழும் ஆசையால்' தன்புற்று மனம் நொந்து கைகளகமாட்டார்கள்' என்று நிர்மானித்துவிட முடியுமா? பருவகாலத்திலெழும் இன்ப ஆசை யான மந்தமாருதச்சுழலிலே அகப் பட்டு மீள முடியாமல் அவ்வின்பக் கடலிலே ஆசையான கயிற்றிலே கட்டுண்டு அண்டசராசரங்களெல் லாம் மிதந்துகொண்டு உடக்கும் போது சல ஜீவர்களினிலும் மேம் பட்ட மனிதவர்க்கம் அவ்வின்பப் பேறு இம்மியுமில்லாமல் ஆசையை அறவேதவிர்த்து வாழ்வதென்றால் அது அணுபோக சாத்தியமான காரி யமா? சாதாரண மனிதர்களால் உல கில் நிறைவேற்ற முடியாக்கருமத்தை நிறைவேற்றி வெற்றிமாலைசூடும் வீரர்களும் தமது புத்தியிலுலக அற்புதங்களையும் இரகசியங்களையும் உலகுய்யுமாறு வெளிப்படுத்தும் மேதாவிகளும், பெண்உலகிற்கு ஒப் பற்ற உதாரணமாய் விளங்கும் ஸ்திரீ ரத்னமணிகளும் அப்போதைக்கப் போது தோன்றி மறைகின்றனர். ஆனால் அவர்களது அத்தரக்கக்காரி யங்களை ஆராயும்போது அவர்களும் ஆசையால் இழுபட்டு காதல் உலகில் அங்கத்தினராகச் சேர்ந்பின்பே மறைக்கனரே ஒழிய, அறவே 'ஸித் தின்பத்தை' ஒழித்து பூர்ணமான பிரம்மச்சாரியங்களோ, ஆயுள் முழுதும் கன்னிகால் நிரியாகவோ கழித்து இறந்தனர் என்று மனசாட்சிக்கு விரோதமில்லாமல் நீர் மானமாய்க் கூறுதல் முடியாக்காரி யம். விதவா நிலையிலே தம் வாழ் நாளை மனநிம்மதியோடு கழிக்க சில வழிகள் கூறப்படுகின்றன. "ஸித்தி ன்ப மென்பது தெவிட்டும் தன்மை யது என்றும், இல்லற காழ்க்கை நிலையற்றது என்றும் கடவுளடி எய் தும் பேரின்பமே தெவிட்டாதது என்றும், மோக்ஷ வீடு சாசுவதமான தென்றும் ஆசையால் பின்னல்கூறிய இரண்டினை அடையமுற்பட்டு முன் னல் கூறிய இரண்டினையும் அகற்றி வெற்றி பெறுவதே சாலவும் சிறந்த தென்றும் கூறுவது ஒரு வழியாகும். கண்ணுக்கெதிரே தோன்றி அனுபவித்தில் இன்பமடை யும் ஸித்தின்பத்தையும், இல்வாழ்க் கையையும்விட்டு, மானஸீகமானதும் தேக இயற்கைக்கு முற்றிலும் வேற பட்டதும் உண்டோ இல்லையோ என சந்தேகிக்கத் தக்கதுமான பேரின்பத் தையும், மோக்ஷவீட்டையும் அடைய முயலுவது தரசனை நம்பிப் புருஷ னைக்கைவிட்டகதையையேநினைப்பூட் டுகிறது. ஸித்தின்பத்தை வெறுத்து கூறிய ஏராளமான கவிகளை ஒதி தேகத்தையே அலக்ஷியமாக 'காற்றடை த்த தோற்பை' எனக்கருதி ஆண் பெண்னை மாயப்பிசாசு என்றும் பெ ண் ஆணை பெரும் பூதம் என்றும் அ னிஜ-வாலே என்றும் நிச்சயத்து ஆண்கள்மேல் த்வேஷம் கொள்ள தால் துன்பத்தவிர்த்து மனம் நிம்மதி யடைந்து விதவா நிலையை திருப்தி யோடு கழிக்கலாகும் என்பது மற் றோர் உபாயகரமான வழியாகும்.

ஒரே வஸ்து-பொருள், அதன் தன்மை என இரண்டாக எவ்வாறு வகுக்கப்படுகிறதோ அதே போல் அசையும்பொருள் அசையாப்பொ ருள் என்றும் படைப்பிலும் ஆண், பெண் என இரு வகுப்பு இயற்கை மாறுபாட்டோடு வகுக்கப்பட்டு ஒன்றோடொன்று இசைந்து வாழ, விலக்க முடியாத "இன்பம்" என் னும் பெருத்த சக்தியால் பிணைக் கப்பட்டு உலகை இழுத்துச்செல்லு மாறு அமைக்கப்பட்டிருக்கிறது என எக்கட்சியாரும் ஆமோதிக்கும் உண் மையாகும். இதற்கு முற்றிலும் மாறுக தாமாகக் கற்பனை செய்து கொண்ட காரணங்களால் ஆணும் பெண்ணும் அனைதன் எதிர்க்கட் சியான வர்க்கத்தின் மீது த்வேஷ மும், பயமும் கொண்டு ஒருவரை யொருவர் அணுகாமல் அதே கொள் கையில் சாசுவதமாய் நிற்பதென் றால் ஆகாயத்திலே பலமான கோட் டை கட்டி அதில் நிலைத்து நிற்பதற்கு ப்பாடு படுவதை யொக்கும். பயங்க ரமான கொள்ளை, கொலை முதலி யன பொது ஜனங்களிடையே நட த்தி மனிதத்தன்மை சிறிதும் அற்ற கொடியதுஷ்டர்களைக் கூட "எனை நகாதன்" எனக்காதலோடு மெல்லி பலார் கூறி அவ்வரக்கர் தமது கணவனாக அமைந்தது தமது பாக்கி யம் எனப் பெண்கள் உள்ளாமகிழ்ந் து அவர்களை விடுப்பிரிய மனமி ல்லாதிருக்கும்போது, லலிதா குண க்களும், கலியண குணங்களும் பூர் ணமாயமைந்த வசீகரமுள்ள ஏனைய புருஷர்களைப் பெண்கள் த்வேஷி த்து வெறுத்து உதறித் தள்ளுவதெ ன்பது முடியாத காரியமாகவும், அம்மாதிரி முயற்சிப்பது மூண்டெ றியும் நெருப்பில் எண்ணையை யூற்றி அனைக்க முயலுவதை யொக்கும்.

மனமான குரங்கை அதனது கட் டறுத்து அலையவிடாமல் "சமன ஆட்சி" என்னும் பகுத்தறிவான சவுக்கால் அடிபோதைக் கப்போது சுழற்கொடுத்து அடக்கி ஒருவரம்பி ற்குத் தமது நிலையை வகுத்து அத னால் சிறிதுடன் ஓய்வடையலாம் என்று கூறுவது ஓளவுக்கு உண் மையாய்த் தோன்றினாலும், உல கஇச்சையை முழுதும் த்வீர்த்து, இல்

லற வாழ்க்கையை அறவே அகற்றி முற்றிலும் தன் தேக இச்சையை அடக்கி ஆண்சாயலே தன் மேற்படாவாறு மனசாட்சிக்கு விரோதமின்றி ஒரு இளங்கைம்பெண் தமது வாழ்வை ஆயுள் முதல் இறுதிவரை கடத்துகென்றால், மனித மன்க்வர் சிலைய முழுதுமடைந்த சுகங்கள் நிறைந்த இந்நிலவுலகிலே அது சாத்தியமற்ற விஷயமென்பதே எனது துணிபு. ஏராளமான கல்லிமையுள்ள கார்த்தக் கற்கள் நிறைந்த இடத்திலே இரும்பூசி யொன்று சலனமற்று காந்தக் கற்களால் பாதிக்கப்படாமல் தனைகளின் மத்தியில் கிடப்பதென்றால் அது முடியுங்காரியமா? அதுபோல, ஐயுவனுக்கும் உணவு எனக்கூறதருந்தபடி அலங்காரங்கள், அற்புதக்காட்சிகள், கேளிக்கைகள், நிகரற்ற புதுப்புது சுகங்கள் சல்லாபங்கள் முதலியன ஏராளமாய் நிறைந்த மனிதா மனதை அணுதினமும் சின்ன பின்னப் படுத்தும் நவ நவமான நாகரீகங்கள் நிறைந்த இந்நிலவுலக மதியிலே இந்து மதத்தின் ஆசாரவில் அதன் கொடுமையினாலேயே சடையாய்த்தொங்கிய அனகபாரம், திருநீறு ப்பூச்சு நிறைந்தமேனி, மடிஸ்வத்த பழையபுடவை, கருடபுராணப்படி ப்பு முதலிய அலங்காரங்களோடு பால்ய விதவைப் பெண்கள் தம் ஆயுள்காலைப் பலவந்தமாகக் கடத்துவ தென்றால் "இந்து மதம் அழியவேண்டும்" என்று கூறும் பெரியோர்களுக்கு கற்கண்டு வழங்குவதில் ஆச்சரியமொன்று மில்லையல்லவா?

விவேகம், பகுத்தறிவு, தயாளகுணம், தற்கால உலகநிலையின் ஆராய்ச்சி இவைகள் மட்டுமில்லாமல் ஏனை யகுணங்கள் பூர்த்தியாயமைந்த பெற்றோர்களையும், பிறரது கஷ்டங்களையும்; நிஷ்டூரங்களையும் அணுவளவு எண்ணிப்பாராமல் 'கொடுமை" என்னும் ஆயுதத்தைப் பிறர்மேல் எவியும் எவுவதற்கு ஆயத்தமாயுமிருக்கும் இந்து மத பக்தகோடிகளான உற்றார் உறவினர்களையும்,—பழக்க வழக்கங்களையும், மூடநம்பிக்கைகளையும்தமதுமூளையாகவும், இரத்தமாகவும் முடைய சுற்றுப்புற ஜனங்களையும் முறையே தமது மாதா பிதாக்களாகவும், பந்துமித்திரர்களாகவும், தமது பாதுகாப்பாளர்களாகவும் அடைந்த பால்ய விதவைப்பெண்களது கதி "பூசாரியை நம்பின ஆடுபோலவும், தகரம் கூண்டில் அடைபட்ட பஞ்ச வாணக்கிளியைப்போலவும் அடிமை நிலையிலே சுதந்திரமற்று தமது வாழ்நாளை ஓயாத்துன்பமாகவும், ஒழியாவேதனையாகவும் உயிர்ச்சின்ன மெதுவுமின்றித் தமது வாழ்நாளைக் கழித்து சடைப்பிணமாய் வீட்டோடு இருக்கிறார்கள் என்பது உலகமறிந்த கொடுமையாகும். இந்தியாவிலே இருக்கும் ஐரோப்பியரை பெண்டு பிள்ளையோடு கப்பலேற்றி அவர்கள் தாய் நாடு கொண்டு சேர்த்து, சர்வமும் இந்தியர் மயமாக்கி கதர்க் கொடியை ஆகாயத்திலே பறக்கவிட 24மணி நேரமும் வாரத்தில் ஆறுநாளும் உழைத்துக் கொண்டு, அதே காலத்தில் இராஜாங்க மானிகையில் தமது போஜனம் சயனம் முதலியவைகளை வெத்துக்கொண்டு, ஐரோப்பிய விருந்திலே இரண்டறக் கலந்து நின்று, ஆங்கிலேயர் சாசுவதமாக இந்தியாவிலே நிலைத்து நிற்க ஹேதுவாக, சமூகம் சிறு மாறுதலடைந்து ஓடி முன்னுல் நகாவொட்டாமல், பெரிய கருடக்கம்பங்களாக நிற்கும் தேசியலாகிளான மகாத்மாக்கள், ஆச்சாரியார்கள், நேருக்கள் மாளவியாக்கள் இதுவரை நான் கூறிவந்த 'பால்டவி தலை' களனுபவிக்கும் ஓயாத்துன்பத்தை, ஓய்வில்லா இன்பமாகவும் ஒழியாவேதனையை ஒப்பற்ற சுகமாகவும் மாற்றி சாயுஜிய பதவியிலே ஷிபெண்ணோ வீற்றிருக்குமாறு செய்ய முற்படுவார்களா? அல்லது ஆங்கிலேயப்பூண்டே அடியோடு இருந்த இடம் தெரியாமல் மறைய்ச் செய்த பின்புதான் சமூக சீர்திருத்தத்தின் அம்சமான 'விதவாவிவாகத்தை' த்தொடங்குவார்களா?

——

(6-ம பக்கத்தொடர்ச்சி)

மாய்நினைக்கமுடியும்? மல்லிகைச் செடியா பிள்ளை பெறும்? அல்லது ஆகாயத்தில் இருந்து வந்து விழுமோ? ஒரு மூடன் கூட இதற்கு மாறுக சொல்ல முடியாது.

சு-ம. தாங்கள் சொல்லுவது நிரம்பவும் சரி. வேறு விசேஷம் ஒன்றும் இல்லை. மல்லிகைச்செடியின் கீழ் இருந்தால்தான் அப்படிச்சொன்னீர்கள். ஒரு சமயம் தளசிச் செடியின் கீழ் கிடந்தாலோ?

சு-ம எங்கும் அப்படித்தானே கிடக்கும். தளசிச்செடிக்கு மாத்திரம் என்ன கொம்பா முளைத்திருக்கும்? அல்லது அதுகர்ப்பமாகி பிள்ளை பிறக்குமோ? இதென்ன சிறு பிள்ளைகள் மாதிரி கேட்கின்றீர்களே?

சு-ம. இல்லை. ஏதோ ஒரு புராணத்தில் தளசிச் செடி அடியில் ஒரு குழந்தை கிடந்தது. அதை க்கடவுள் அவதாரமாய்க் கருதினார்கள். பிறகு அது கடவுளே ஆகிவிட்டது. இப்போதும் அது கடவுளாயிருக்கின்றது என்று பார்த்ததாக எனக்கு ஞாபகம். ஆதலால் அந்தப புராணங்களையெல்லாம் தாங்கள் நம்புவதுண்டா? அல்லது நம்பும்படி காலக்ஷேபம் செய்வதுண்டா? என்று தெரியலாம் என்பதாக ஆசைப்பட்டுத்தான் தங்களைக் கேட்டேன்.

பு-ம. நீர் சு. ம. என்பது தெரிந்தும் உம்மிடம் நான் பேசியது சுத்தத்தப்பு. புராணத்தை சந்தேகப்படுகின்ற-தர்க்கம் செய்கின்ற — நாஸ்திகர்களுடைய முகாலோபனமே செய்யக்கூடாது என்று பெரியவாள் இதற்காகத்தானே சொல்லி இருக்கின்றார்கள். சு. ம. என்றாலே நாத்திகம் தானே. உம்மோடு பேசிய குற்றத்திற்காக நான் ஒரு முட்டாள் ஆக வேண்டியதும் நியாயம்தானே?

சு-ம. இப்படிக் கோபித்துக் கொள்ளலாமா? நீங்கள் சொன்னதை உங்கள் வாயைக்கொண்டு, சொன்னதைக்கொண்டு உங்களை என்னசொல்லுகின்றீர்கள்என்று தான்கேட்டேனே ஒழிய நான் ஏதாவது குற்றமான வார்த்தை சொன்னேனா? அல்லது என் அபிப்பிராயமாக ஏதாவது சொன்னேனா?என் இவ்வளவு கோபம்?

பு-ம. கோபம் ஒன்றும் இல்லை எனக்கு வேலை யிருக்கின்றது. கொஞ்சம் அவசரம். நான் போய் விட்டுவருகின்றேன் (என்று சொல்லிக்கொண்டேநழுவிவிட்டார்.)

——

கழுதி யூனியன் வரிகொடுப்போர் 2-வது கூட்டம்.

20 8—31 உ மாலை 6மணிக்கு கழுதி மேட்டுத்தெரு மொழக்கொட்டு மைதானத்தில் கழுதி ஸ்ரீமான் கே. ஆதிமூலம் சேர்வைகாரர் அவர்கள் தலைமையின்கீழ் ஒரு பெரிய பொதுக் கூட்டம் கூடியது. சுமார் 2000 பேர் வரை கூடியிருந்தார்கள். அதே பிரமுகர்கள் கழுதி பஞ்சாயத்துப் போர்டின் ஊழல்களையும், தவறுகளையும், அதிகாரிகளுக்கு மஜர் மூலம் தெரிவித்த விஷயமாய் இராமநாதபுரம் தாலூகாபோர்டு பிரசிடெண்டு அவர்கள் 9-8-31ல் இவ்விடம் விஜயம் செய்தும் நமது குறைகளை கவனியாது நம்மிடத்திலேயே "உங்களுக்கு பஞ்சாயத்து போர்டில் சர்வ சுதந்திரமும் உண்டு, ஆனதால் நீங்களே அதற்குவேண்டிய ஏற்பாடு செய்துகொள்ள வேண்டுமேயொழிய நான், ஒன்றும் செய்யமுடியா" தென்று நம்மேரில் சொல்லிவிட்டு பஞ்சாயத்து போர்டில் இருக்கும் தவறுகளுக்கு தக்க பரிகாரம் செய்யாமலும், அதைப்பற்றி எந்தநடவடிக்கையும் எடுக்காமலும்,பஞ்சாயத்துபோர்டில் இருக்கிற ஊழல்களை மற்றவர்கள் தெரிந்துகொள்ளாத விதமாய் ரிக்கார்டுகள் ஒழுங்கு பண்ணும்படி பஞ்சாயத்து போர்டு

பார்ப்பன (ஆதிக்கம் அழிய)

இவ்வூர் சித்தன் கோவிலுக்கு முன்பாக 30-8-31ந்தேதி ஞாயிற்றுக்கிழமை காலை புது தேசிய க்கொடி ஏற்றினார்கள். அது சமயம் கொடிக்கு சந்தனப்பொட்டும், குங்குமப்பொட்டும் பூவில் அலங்காரம் முதலியவை செய்து மறந்து தேங்காய், பழம், ஊதுபத்தி, சூடம் முதலியவைகளைக் கொண்டு அலங்காரமாகக் கோவிலில் சாமியைக்கும் பிடுவது போல் ஷையூர் கோவில் பட்டரைக்கொண்டே சூடத்தைக் கொளுத்தி கொடிவணக்கம் செய்ததுந்தவிர, ஷை கூட்டத்துக்கு ஒரு பார்ப்பானையே தலைவராக நியமித்து மற்ற பேர்கள் சூழ்ந்து இருந்து பார்ப்பானைகொண்டே கொடியை ஏற்றினார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

——

நோட்டீஸ்.

31ம்தேதி செப்டம்பர் மாதம் 10ம்தேதி வியாழக்கிழமை காலை 11-மணிக்கு சிவகெங்கை தாலூகா போர்டாரவர்களின் சாதாரண மீட்டிங்கு மதகுபட்டி சத்திரத்தில் நடைபெறுமென ஒரு நிருபர் எழுதுகிறார்.

——

சுயமரியாதைத் தலைவர்களின்

போட்டோ பேட்ஜ்கள்.

உயர்ந்த வேலைப்பாடுடன் குறைந்த விலையில் 1 1/4" ரவுண்டு சைஸ் (வெள்ளைக்கலரில்) போட்டோ பேட்ஜ்கள் தயாராகி விட்டது. மாதிரிக்கு தேவையுள்ளோர் ஒன்றுக்கு 0-2-6 அனை ஸ்டாம்புமட்டும் அனுப்பவும். வியாபாரத்திற்கு தேவையுள்ளவர்கள் விலை விபரத்திற்கு எழுதவும்.

அ.ப அர்த்தனரி & பிரதர்
ஜலகண்டபுரம், (Via) ஓமலூர்.

ரோஜா முத்தையா
ச்சி நூலக அறக்கட்டளை

(5ம் பக்கத்தொடர்ச்சி)

திறமையைவிட, நமச்குஷிகஅதிகமான பலமும், உறுதியும் வேண்டியிருக்கு மென்பதை நான் மறுக்கவில்லை.

நமது சௌகர்யம்.

ஆனால், மற்ற நாட்டு சமதர்ம முயற்சிகளுக்கு இருந்த வேறு ஒரு விதமான கஷ்டம் நமது நாட்டில் இல்லையென்பதையும் உங்களுக்கு எடுத்துக் காட்ட ஆசைப்படுகின்றேன். அதாவது, நமது நாட்டு அரசாங்க ஆதிக்கம் முழுவதும் நமது எதிரிகளுடைய கைகளுக்குள் இன்னும் வராமலிருப்பதால், சமதர்ம ஆரம்பகாரியங்களை நாம் செயல்வதற்கு அரசாங்கத் தொல்லை யேற்பட நியாயமில்லை யென்பதேயாகும். அனறியும், நமது நாட்டுச்செல்வவான்கள் என்பவர்களும் ஒரு விதத்தில் நமக்கு மூட்டுக்கட்டைப் போடக்கூடியவர்களாலும், சமதர்ம விஷயத்தில் நம்மோடு சேராவிட்டாலும், இன்று அவர்கள் நமக்கு எதிரிகளாக வரக்கூடிய நிலைமையில் இல்லை யென்பதோடு, எதிரிகளுடனும் சேரமுடியாத நிலைமையில் இருக்கின்றார்கள் என்பதும் நமக்கு அனுகூலமான காரியமாகும்.

ஆகவே, சிலவழிகளில கஷ்டமிருந்தாலும் சில வழிகளில் நமக்கு அனுகூலங்களுமிருக்கின்றன என நே கருதுகின்றேன்.

நமது முன்னணிவேலை.

நிற்க, இனி நமது முன்னணி வேலைகளைப்பற்றி சிறிது சிந்திக்கலாம் எனக் கருதுகின்றேன். நாம் செய்ய வேண்டியது ஒன்று, இரண்டல்ல.

மக்களின் பாமரத் தன்மையை விலக்க வேண்டும்.

மூட நம்பிக்கைகளை அகற்ற வேண்டும்.

வருணாச்சிரம தர்ம ஒழுங்கு என்னும் எதிரிகளின் கோட்டையைத்தகர்த்தெறிய வேண்டும்.

அவைகளுக்குதவுமிருக்கும் மதங்களையும் அழித்தாக வேண்டும்.

கடவுள உணர்ச்சியையும் ஒழித்தாகவேண்டும்.

விதி, மோக்ஷம், நரகம் என்னும் மயக்கங்களையும் ஒழித்தாக வேண்டும்.

என, நம்மால் அழிக்கப்பட வேண்டும் என்றுகருதப்படுகின்றதானமேற்கண்ட இவைகளனைத்தையும் காப்பாற்றுவதற்காக வேலை செய்துவரும் "தேசீய"மென்னும் காந்தீயத்தையும் அடியோடு வெட்டிப் புதைக்க வேண்டும்.

இவைகள் எல்லாம் ஒன்றுக்கொன்று சம்பந்தமுடையதாக பிணைக்கப்பட்டிருப்பது கொண்டு, சுலபத்தில் அவைகள் அழிக்கப்பட்டு, மறையக் கூடியவை அல்லவாதலால், சற்று உறுதியுடன் வேலை செய்ய வேண்டியிருக்கின்றது என்பதை ஞாபகமூட்டுகின்றேன். இவைகளுக்கெல்லாம முதலில் மகத்தான—இடைவிடாததான உறுதியும், தைரியமும் கொண்டதான பிரசாரமே வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் பாமரத்தன்மை ஒருவாறு நீங்கும்.

நம் எதிரிகள்.

நம் எதிரிகள் நமது பலஹீனத்தை வேலையை ஒருவாறில் கெடித்துவிடக் கூடிய சௌகரியம் வாய்ந்தவர்கள். எதனாலென்றாலோ, நமது மக்கள் அவ்வளவு பாமரத்தன்மையில்--மூட நம்பிக்கையில் இருக்கின்றதே காரணமாகும்.

உதாரணமாக, நாம் இரண்டு, மூன்று வருஷ காலமாக செய்துவைத்திருந்த வேலையை, சென்ற சில மாதங்களில் "சுயராஜ்யம்" என்றும், "சட்டமறுப்"பென்றும், "சத்தியாக்கிரகம்", என்றும் சொல்லி ஆர்பாட்டங்கள் செய்து பல மக்களின் மனதைக்கெடுத்துவிட்டார்கள். அதிக தூரம் போவானேன்? நமது தொண்டர்களிலேயே பலர் உடைந்து போனார்கள். வேலை அகப்படாத கஷ்டமும், ஜீவனமார்க்கமும் சுயலமும் என்பவை ஒருபுறம் இருந்தாலும் அநேகர் மூட் நம்பிக்கையால் ஏமாந்து உடைந்துவிட்டார்கள் என்று சொல்லாமலிருக்க முடியவில்லை.

நமது மக்களின் அறிவின் தன்மையை பரீக்ஷிக்க, கதர் என்று சொல்லப்படும் ஒரு விஷயத்தை எடுத்துக் கொள்ளுங்கள்.

கதர்.

பாம்பினால் கடிக்கப்பட்டவனின் விஷத்தை இரக்க, ஒரு மந்திரவாதி என்பவன் "ஓம் ஐபுங் கிலியும் சவ்வும் வௌவும்" என்று உறுச்செபித்து, பாடம்அடித்து ஊதினால் விஷம் இறங்கிப்போகுமென்று நமது மக்கள் எப்படிக்கருதுகின்றார்களோ, அதே போல்தக்ளிசுற்றினால்பொருளாதாரக் கஷ்டம்என்னும் விஷம் இறங்கிப்போகும்என்றுஅநேகர் கருதுகின்றார்கள். அதுமாத்திரமல்லாமல் ஏதோ சிலமொண்டி, முடம், கூன், குருடு, நிழற ஆகிய பெண்கள் ராட்டினத்தைச்சுற்றி, நான் ஒன்றுக்கு முக்கால ணா, ஒரு அணா கூலி கிடைக்கும் படியான நூலை நூற்றுவிட்டால், அதன் மூலமே 'இந்தியாவிலிருந்து இங்கிலாந்து, அமெரிக்கா. ஜப்பான், ஜர்மனி முதலிய விடங்களுக்குத் துணிகளுக்காகவும். நூல்களுக்காகவும் போகும் 60, 70 கோடி ரூபாயை இந்தியாவிலேயே நிறுத்திவிடலா"மென்று சொன்னால் உடனே எல்லோரும் நம்பி, "கதர், கதர்" என்றும், "ராட்டினம், ராட்டினம்" என்றும் கூப்பாடு போடுகின்றார்கள். அதுமாத்திரமல்ல. 0-3-0 அணாத் துணிக்கு 0-9 0 அணா கொடுத்து வாங்குவதன் மூலம் யாரோ ஒரு முடப்பெண்ணுக்கு ஒரு அணா கூலி கிடைப்பதால் இந்திய காட்டின் கைத்தொழில் விருத்தி செய்யப்பட்டு விட்டதாகக் கருதிக்கொண்டிருக்கின்றார்கள்.

இந்த எண்ணம் பாமர மக்கள் என்பவர்களிடம் மாத்திரமே இருந்தால், அதைப்பற்றி நான் அதிகக் கவலைப் படமாட்டேன். அல்லது "கல்லைச் சுற்றினால் பிள்ளை பிறக்கும்" என்கின்ற பெண் மக்களிட மாத்திரமிருந்தாலும் நான் வேலைப்படமாட்டேன். படித்த மக்கள், தேசபக்தர்கள், தேசீய வீரர்கள் என்பவர்களிடமே இருக்கும்போது இந்நாட்டு மக்களைப் பாமரத்தன்மையிலிருந்து விலக்குவது என்பது எவ்வளவு பெரிய கஷ்டமான காரியமென்பதை யோசித்தால், மயக்கம் ஏற்படாமலிக்லை.

அரசியல் திட்டம்.

இதுபோலவே "வருணாச்சிரமதர்மத்தைச்காப்பாற்றுகின்றேன், வருணாச்சிரமத்தில் எனக்கு நம்பிக்கையிருக்கின்றது" என்று சொல்லுகின்ற தலைவர், "நாட்டுக்கு விடுதலை சம்பாதித்துக்கொடுக்கின்றேன், சமத்துவத்தை யேற்படுத்துகின்றேன்—சமதர்மத்தை உண்டாக்குகின்றேன்" என்று சொல்லுவதை நமது மக்கள் நம்புகிறார்கள் என்றால், இன்னுட்டு மக்களுக்கு சமதர்ம ஞானம் விடுதலை ஞானம் எவ்வளவு இருக்கின்றது என்பதை யோசித்துப் பாருங்கள். இது போலவே, இந்நாட்டு மக்களின் ஒவ்வொரு சமூகத்தையும், அவர்களது பழக்க வழக்கங்களையும், உரிமைகளையும், ஆதாரங்களையும் காப்பாற்றும், ஜவாப்தாரித்தனத்தை யேற்றுக்கொள்ளும் அரசியல் திட்டங்களினால் மக்களுக்கு சமத்துவமோ, விடுதலையோ கிடைக்கும் என்று நம்பிக்கொண்டிருக்கும் மக்களுக்கு அரசியல் ஞானம் எவ்வளவு இருக்கும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள்.

ஆகவே, இவற்றிலிருந்தே நாம் செய்யவேண்டியிருக்கும் வேலையின் கஷ்டத்தை ஒருவாறு உணர்வீர்களென்று கருதுகின்றேன்.

மதம், கடவுள்.

மற்ற துறைகளிலும், அதாவது கடவுள், மதம், மூட நம்பிக்கை மூதலிய துறைகளிலும் எவ்வளவு வேலை செய்யப்பட வேண்டியிருக்கின்றது என்பதைச்சற்று யோசித்துப்பாருங்கள். மக்களுக்குக் கடவுள் உணர்ச்சியினால் ஏற்பட்டிருக்கின்ற கேடுகளைவிட, மனித சமூகத்திற்கு மதங்களே பெருங்கேடு விளைவித்து வருகின்றன. மதங்கள் ஒழியாமல் மக்களுக்குள் ஒற்றுமையையோ சமத்துவ உணர்ச்சியையோ ஏற்படுத்திவிடலாம் என்று கருதுவது, 'நிலமில்லாமல் பயிர் செய்யலாம்" என்பது போன்றதேயாகும். ஆதலால், மனித சமூகத்தின் விடுதலையையும், ஒற்றுமையையும் சமத்துவத்தையும் விரும்புகின்ற மக்களை, முதலில் செய்ய வேண்டிய வேலை மதங்களை ஒழிப்பதேயாகும். 'மதம் இல்லாவிட்டால் மனித சமூகம் வாழமுடியாது' என்று சொல்லுவதெல்லாம் வெறும் அறிவீனமேயாகும்.

மனித சமூகமானது, தனக்கென்று ஏற்படுத்திக்கொண்ட எவ்வளவோ செயற்கைத் தொல்லைகளுடன் மதம் என்பதும் மனிதன் தனக்குத்தானாக ஏற்படுத்திக்கொள்ளும் தற்கொலைக்குச் சமமான தொல்லையாகும். மதம், மனிதனது வாழ்க்கைக்கு ஓர் ஜீவிதாட்டி என்பது சிறிதும் உண்மையற்ற காரியம் என்பதோடு; உண்மையிலேயே மதம் என்பது மனிதனது வாழ்க்கையின் சுதந்திரப் போக்கிற்கும், அறிவு வளர்ச்சிக்கும் ஒருவழி மறுப்பேயாகுமென்று தைரியமாய்க் கூறுவேன்.

மற்றும், மதம் சமதர்மத் தத்துவத்திற்கு எவ்வளவு விரோதி யென்பதை நான் எடுத்துக்காட்ட வேண்டியதில்லை.

அது போலவே கடவுள் என்பதும், மனித சமூகத்தினுடைய அறிவையும் முயற்சியையும் மூற்போக்கையும் கொன்றே கொண்டுவிட்ட ஒரு கொடிய வியாதியேயாகும்.

மத உணர்ச்சியும் கடவுள் உணர்ச்சியும் மாறுபடாத எந்த தேசமும் சமதர்ம தத்துவத்தையும் பொதுவுடைமைத் தத்துவத்தையும் அடைந்ததில்லை யென்பதையும் அடைய முடியாது என்பதையும் மனதில் கெட்டியாய் இருத்துங்கள்.

கல்லும், மண்ணும், மரமும், செடியும், கடலும், நதியும் ஆகிய எல்லாவற்றையுமே கடவுளாகக்கருதும் மக்களுக்கு விஷய ஞானம் எப்படியுண்டாகும்?

நண்பர்களே! நமது கடமைகளையும் நாம் செய்யவேண்டியிருக்கும் வேலைகளையும் அவற்றிற்கு இருக்கும் தடைகளையும் ஒருவாறு எடுத்துச் சொன்னேன்.

தலைவர் கடமை.

இனி லக்ஷியம் அடையும் மார்க்கத்திற்கு திட்டம் வகுத்து நம்மிடம் வேலை வாங்கிக்கொள்ள வேண்டியது நமது தலைவர் கடமையாகும்.

நமது மகாநாட்டுத் தலைவர் தோழர் கே. வி. அழகர்சாமி அவர்கள் தெளிந்த ஞானமுடையவர். தளராத உறுதி உடையவர். எதையும் செய்ய வல்ல ஆற்றலும் தன்னம்பிக்கையும் உடையவர். அப்பேர்ப்பட்ட ஒரு பெரியாரின் தலைமையில்கூடி கடைபெறும் இம் மகாநாடானது வரப்போகும் நெருக்கடியான ஒரு வருஷ காலத்தில் மகத்தானக் காரியங்களைச் சாதிக்கும் வண்ணம் தொண்டர்களுக்கு ஊக்கமும் உறுதியும் ஆற்றலும் கட்டுப்பாடும் ஒழுக்கும் அளிக்கவேண்டுமென்று ஆசைப்பட்டு உங்கள் எல்லோரையும் மறுபடியும் ஒரு தடவை வரவேற்புக்கூறி ஆசனத்தமருகின்றேன்.

உறுதி! உறுதி!! சாவு உறுதி!!! அறிவுடமை! அறிவுடமை!! சாவை லக்ஷியத்திற்குப் பயன் படுத்துவது அறிவுடமை!!!

பெண்கள் தேவை.

விதவை, ஏழை, டாவரும், எக்குலத்திலும் தெரிவிக்கலாம்.

A. C/o
குடி அரசு, ஈரோடு.

(3ம் பக்கத் தொடர்ச்சி)

க்கசக்கிக்கொண்டே மனிதர்களோ உண்டாச்சிக்கொள்ளுவதால் எல்லா மனிதர்களும் தாழ்ந்த ஜாதிக்காரர்கள் தானே?

கள்ளை உண்டுபண்ணுகிறவன் பிரஷ்டன்என்ற்ல்கள்ளைக்குடிப்பவனும் பிரஷ்டனல்லவா? மாம்சத்திற்காக பிராணியைக்கொலைசெய்கிறவன்பிரஷ்டனுனால் அதைஉண்பவனும் வளர்ப்பவனும் பிரஷ்டனாகானே? கள்ளில் மயக்கமுண்டு. மாம்சத்தில் ராஜத விர்த்தியுண்டு. எண்ணெய்யில் அவ்விதமொன்றுமில்லையே? ஒரு வியாதியஸ்தனுக்கு நல்லெண்ணெய் யாகாதென்று வைத்தியர்கள் சொல்லுகிறார்களேயல்லாமல் எண்ணெயை வேண்டாமென்று சொல்லுகிறவர்கள் யாருமில்லை. குழந்தை பிறந்ததும் யெண்ணெயைத்தான் முதல் முதல் வாயில் தடவுகிறார்கள். மனிதன் செத்தாலும் தலையில் எண்ணெயை வைத்து அனுப்புகிறோம். இதற்கு மத்தியில் பல முக்கியத்திற்கும் எண்ணெயே வேண்டியிருக்கிறது. இவ்வளவு முக்கியமாகவேண்டியிருக்கிற யெண்ணெயை உண்டுபண்ணுவதால் அவர்கள் தாழ்ந்த ஜாதிக்காரர்களென்ற ஒரு சாஸ்திரத்திலிருக்குமானால் அந்த சாஸ்திரத்தால் ஜன சமூகத்திற்கு என்ன நன்மை ஏற்படப் போகிறதென்பதையும் ஆலோசித்துப் பாருங்கள். ஒரு பொருளிலிருந்து இன்னொரு பொருளைக் கசக்கி எடுப்பவன் தாழ்ந்த ஜாதிக்காரன். அந்தப்பொருள்களை அனுபவித்துக்கொண்டு வாழ்கிறவர்கள் எல்லாம் உயர்ந்த ஜாதிக்காரர்கள். இதுவே சாஸ்திரமாகவிருந்தால் அந்த சாஸ்திரங்களை புடைய சமூகம் முன்னிற்கு வரமுடியுமா என்பதையும் ஆலோசித்துப் பாருங்கள்.

எண்ணை எடுப்பவன் கோவிலுக்குள் போகப்படாது. எண்ணைபோகலாம். ஏன்? சாஸ்திரம் சொல்லியிருக்கிறது. சாஸ்திரம் எதை எப்படிச் சொல்லியிருக்கிறது என்பதை க்கவனித்துப் பார்க்காவிட்டாலும் சாஸ்திரம் சொல்லியிருப்பதாகச் சொல்லும் பிகாரமே நடக்கவேண்டும். இல்லாதவன் பாவி நரகத்திற்குப் போவான் நாஸ்திகனுவான் என்று சொல்லுகிறவர்கள் சாஸ்திரத்தால் தள்ளப் பட்டதைச் செய்தும் சொள்ளப் பட்டதை விட்டும் இருக்கப்பட்ட மடாதிபதிகள் உயர்ந்த ஜாதிக்காரக்கள் ஆஸ்திகர்கள் இவர்களெல்லாம் இன்னும் உயர்ந்த ஜாதிக்காரர்கள் தானு என்பதை ஆலோசித்துப் பாருங்கள்.

பிர்மத்தை யடைந்தவன் பிராமணன்என்னும் மனிதரின் பொதுப்பிரயோக வார்த்தையைத் தங்கள் சொந்த அனுபவமாய் நினைத்து மற்றவர்களிடம் சொல்லியும் பிர்மம் இப்படியுள்ள அனுபவமென்று தெரியாத அறிவின்மையுடன் பிதற்றி வெளியில் தன்னை உயர்த்திக் கொண்டு தெய்வம் மதம் என்ற பேச்சில் எமாற்றி அதனுல் தங்களைப் பெரியவர்களாகப் பாவிக்கும் தன்மையினுல் பெரும் குணமில்லாமல் தங்கள் நல்லுணர்வை முற்றிலும் மறந்து தேக போஷணைக்கும் கௌரவத்திற்குமாக எல்லாவற்றையும் நடித்துப் பொருள் சம்பாதிப் பதற்காகவே ஜாதியென்ற கட்டுப் பாட்டை வலுப்படுத்த லஞ்சகம் கடம் சூலம் முதலியவைகளிலேப் புகும் உயர்ந்த ஜாதிக்காரர்களுக்குமாத்திரம் சாஸ்திரவிதிகளில்லையோ. அவர்களைமட்டும்சாஸ்திரங்கள் கட்டுப் படுத்தாதோ. மூன்றிருந்த பார்ப்பனர்கள் வேதம்படித்து வேள்விசெய்து வேதியராகவிருந்தார்கள். அவர்கள் மக்கள் அதை விட்டு எத்தொழில் செய்தாலும் கோவிலுக்குள் போகலாம். எண்ணை எடுத்த வாணியன் மகன் அதை விட வேறு தொழில் செய்தாலும் கோவிலுக்குள் போகப்படாது என்கிற இந்த நியாயத்தைத் தெய்வம் கோவிலுக்குள் இருக்கிறதென்னும் எண்ணத்தால் சொல்லப்படுகிறதா? மற்ற படிசுயநலத்தால்சொல்லப்படுகிறதா என்பதையும்ஆலோசித்துப் பாருங்கள்.

புரோகிதம் ஒழிந்த திதி.

தஞ்சாவூர் ரிசர்வ் போலீஸ் எட்காண்ஸ்டேபில் திருவாளர் பக்கிரிசாமிபிள்ளை அவர்கள் மூத்த குமாரர் திரு. சண்முகம் காலமானதை குறித்து யாதொரு புரோகித சடங்கின்றி ஞாபகார்த்தமாய் சுமார் 50 பேர்வரை அன்னம் அளிக்கப்பட்டதென ஒரு நிருபர் அறிவிக்கிறார்.

பண்டிதர். உயர்திரு. சாமி சிதம்பரனர் அவர்களியற்றிய

மாதர் சுதந்திரம் அல்லது

பெண் மக்கள் பெருமை.

என்னும் அரிய நூல் விலை அணு 10. (பத்து)

கிடைக்குமிடங்கள்:- "குடி அரசு" புத்தகாலயம். ஈரோடு.

இம்பிரியல் பிரஸ், மாயவரம்

சுயமரியாதைப் பொக்கிஷம்

எனும்

புதுவைமுரசு விசேஷ அநுபந்தம்.

இதில், சுயமரியாதை இயக்க அறிஞர், தலைவர், அறிஞர் ஆப்டோன் படங்கள், அறியகட்டுரைகள், விகடங்கள், கிண்டல்கள், கவிகள் அடங்கியிருக்கினறன. பத்திரிகைகள் அனைத்தும் நமது அநுபந்தத்தைப் பற்றித் தெரிவித்துள்ள கல்லபிப்பிராயங்களையும் வாசகர் அறிவர். 130 பக்கங்கள் கொண்டது விலை ஆறே அணு.

3 காப்பிகளுக்கு குறைந்த ஆர்டருக்கு வி. பி. யில் அனுப்ப முடியாது. ஒரு காப்பி வேண்டுவோர் 7 அணு ஸ்டாம்பு அனுப்புக,

மானேஜர்,
புதுவை முரசு,
புதுச்சேரி, F. இந்தியா.

அதிர்ஷ்டம்! ஆனந்தமான நலல அதிர்ஷ்டம்

ஐரிஸ் பிரீஸ்டேட் ஆஸ்பத்திரி
மான்செஸ்டர் நவம்பர் ஹேண்டிகேப்.

குதிரைப் பந்தய லாட்டரி.

1930 வருஷத்திய ஆஸ்பத்திரி தர்ம ஆக்டின்படி இந்த ஆஸ்பத்திரி கமிட்டியின் உபதலைவரான வைக்கவுண்ட் பவர்ஸ்கோர்ட சர் வில்லியம் டைய்லர் அவர்களின் மேற்பார்வையிலும், போலீஸ் கமிஷனர் மேற்பார்வையிலும், 1931-வது வருஷம் நவமபர் மாதம் 18-தேதியில டப்லின் என்னும் நகரத்தில் சீட்டுகளைக் குலுக்கி எடுக்கப்படும். 1931-வது வருஷம் நவம்பர் 28-ந் தேதியில் மான்செஸ்டர் என்னுமிடத்தில் பிரைஸ் விழுந்த குதிரைகளை ஓட்டத்தில் விடப்படும்

வசூலான பணத்திலிருந்து சிலவுபோக ஆஸ்பதத்திரிக்காக கால் பாகம் எடுத்துக்கொண்டுமீதி முக்கால் பாக பணத்தையும்பிரைஸ்களாக பிரித்துதரப்படும். அதிகத் தொகை வசூலானுல் பிரைஸ் தொகையும் அதிகரிக்கப்படும்.

ஒவ்வோரு (100,000) லக்ஷம் பவன்களுக்கும் கீழ்கண்ட விகிதம்போல் பிரித்துத்தரப்படும்.

1-வது குதிரைக்கு	30,000	பவுன்கள்	3-வது குதிரைக்கு	10,000	பவுன்கள்
2-வது குதிரைக்கு	15,000	பவுன்கள்	மற்ற குதிரைகளுக்கு	35 000	பவுன்கள்

100-பவுன்கள் வீதம் 100 ரொக்க பிரைஸ்களுக்கு...10,000 பவுன்கள்

100 000. பவுன்கள்.

ஒவ்வொரு சந்தாதாருக்கும் தலைமை ஆபீஸ் ரசீது அனுப்பித்தரப்படும். பிரைஸ்கள் விழுந்த விபரங்களை எல்லா முக்கிய இங்கிலீஷ் பத்திரிகையில் பிரசுரிக்கபபடும். சென்ற டெர்பி பந்தயத்தில்குறிப்பிட்ட தொகைக்கு நான்கு மடங்கிற்கு மேல் சேர்ந்து விட்டது. டிக்கட் 1க்கு விலை ரூ. 7—8—0. 8—10—31க்குள் டிக்கட் பெற்றுகொள்ளவேண்டும்.

குறிப்பு:— மியூட் சுவல் கிளப் சிசர் விட்ச் குதிரைப்பந்தய லாட்டரி டிக்கட்டு 1க்கு ரூ. 4—8—0 வீதம் கிடைக்கும்.

டிக்கட் கிடைக்குமிடம்:— **S. K. வரதராஜலு, ஏஜண்ட் திருச்சங்கோடு S. I.**

குடி அரசு புத்தகாலயம்.

கைவல்யம் அல்லது கலெக்கியானம். இது கைவல்யசாமியார் கட்டுரைத்தொகுதி.	...	0—8—0
மனு நீதி மருமம்	...	0—2—0
இராமனிங்க சுவாமி பாடல் திரட்டு.	...	0—2—0
சுயமரியாதைத் தாலாட்டு.	...	0—2—0
சோதிடப் புரட்டு.	...	0—2—0
திரு. வி. ராமசாமியின் சீர்திருத்தமணாகாட்டு / சொற்பொழிவு (2-பதிப்பு)	...	0—2—0
சுயமரியாதைப் பாடல்	...	0—2—0
தர்ம பரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.	...	0—3—0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை	...	0—4—0
ஞானசூரியன்	...	0—4—0
இராமாயணத்தின் ஆராய்ச்சி பாலகாண்டம்		0—4—0
ஷை 2-ம் பாகம் அயோத்தியாகாண்டம்	...	0—8—0
மேயோ கூற்று மெய்யா பொய்யா (2-பதிப்பு)		0—3—0
அகத்தியர் ஆராய்ச்சி	...	0—2—0
கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?	...	0—2—0
* குறள்	...	0—8—0
* இயற்கைமதம்	...	0—8—0
* சிதம்பர ரகசியம்	...	0—8—0
* சுதந்திரப் போர் அல்லது உப்பள முற்றுகை.		0—4—0
* சுயமரியாதைத்தத்துவகீதங்கள்	...	0—4—0
* பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை—[சித்ரப்படங்களுடன் 100 பக்கங்களுக்கு மேல் கொண்டது]	...	0—6—0
* மாதர் சுதந்திரம்.	...	0—10—0
* ஆராய்ச்சி அணிகலம்		0—12—0
* சென்னை லோகல் போர்டு ஆக்ட்	...	2—0—0

* மோட்டார்கார் இயந்திரசாஸ்திரமும் அதன் அனுபோகப் பயிர்ச்சியும் 50படங்களுடன் 200 பக்கங்களடங்கிய பெரிய புத்தகம் விலை ரூ. 2—0—0. ஆர்டருடன் 4 அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

* இந்தப்புள்ளி உள்ளபுத்தகங்கள் விற்பனைக்காக நமக்கு அனுப்பப்பட்டவைகள்.

புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது, ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

ஏனெனில் புதிய உத்திரவுப்படி வி. பி. கள் 3 நாள்களில் வாப்பீஸ் செய்யப்படுவதால் அநேக வி. பி. கள் வாப்பீசாகிவிடுகின்றன. ஆதலால்தான் ஆர்டருடன் பகுதியாவது முன்பணம் அனுப்பி ஆர்டர் செய்யவேண்டும் என்று விரும்புகிறோம்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல் வருஷத்திலிருந்து சென்ற வருஷம் வரை 5 வருஷகாலம் வெளியான மலர்களைத் தனித்தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0

ரிவோல்ட்டு ஒரு வருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

ஆர்டருடன் 1 ரூபாய் முன்பணமனுப்பவேண்டும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,

ஈரோடு

'சண்டமாருதம்'

சுயமரியாதைத்தமிழ் தினப்பதிப்பு.

ஆசிரியர்:- சொ. முருகப்பா.

நிறைந்த செய்தி! குறைந்த சந்தா!
ஆணித்தரமான அபிப்பிராயம்! அச்சமற்ற கண்டனம்!!

இன்றே சந்தாதாராகுங்கள்.

சந்தா விபரம்.

உள் நாடு.

வருடம் ஒன்றுக்கு	...	ரூ. 13—8—0
மாதம் ஒன்றுக்கு	...	ரூ. 1—2—0
தனிப்பிரதி	... ...	ரூ. 0—0—6

வெளி நாடு.

வருடம் ஒன்றுக்கு	...	ரூ. 18—0—0
ஆறுமாதம்	...	ரூ. 10—0—0

எல்லா ஊர்களுக்கும் ஏஜண்டுகள் தேவை

மானேஜர்
'சண்டமாருதம்'
திருச்சிராப்பள்ளி.

கெந்தகமே—இந்தியுகம்.

டாக்டர் T. K. வேங்கிடாஜலம் அவர்களால் அனுபவித்து கைகண்ட கெந்தகரசாயனம்.

(மாத்திரைரூபமாய, வெள்ளிக்கவசம்பூண்டது)

கெந்தியின் அருவருப்பான வாசனையையும், காரமான காரலின் துர்குணத்தையும், மற்ற சேரும் சரக்குகளிலுள்ள குற்றங்களையும் நீக்கி, அனுபவமுறைப்படி தயாரித்தது. ஆண், பெண், பாலியர், விருத்தர்களுக்கும் மேன்மையுற்றது.

கர்ப்ப-வித்து மெல்லிய ஸ்தானங்களில் உஷ்ணம் தங்கி ரணமாகி, (இரத்தம் முறிந்த சீழ்) வெளிபாகும் 217 விதவெட்டை வியாதிகள், 21 விதரோந்திகள், கண்டமாலை, சூலை, அரையாப்பு, மர்மஸ்தான கொருக்கு, இரணம், புத்துவகைகள், தொண்டைத்தாரு, அண்டப்புத்து, பெனத்திரம், சூதகவாய்வு, உதிரவாய்வு, கடியம், குன்மம், 16-ம் ஜன்னி, 13-ம் பச்சிலை, வாய்வு பிடிப்புகள், பல்புத்து, பல் நிறந்திரும், பல சிற்றின்ப சேர்க்கையாலோ, அதிகவிசனத்தினாலோ, அகால போஜனத்தினாலோ அன்னதோஷமாகி, மலச்சிக்கல் அல்லது போக்கு உண்டாய் ஜெனிக்கும் வியாதிகளையும், பிரசவ காலங்களில் கட்டிய இடுப்புகட்டு தளர்ந்தினாலோ, தளர்ச்செய்துக கொண்டதினாலோ, சுகதம் சரிவர, வெளியாகாமல், இடுப்பு, ஜப்பை, சந்துக்களிலும், ஊடிருவி, வாய்வு சம்பந்தப்பட்டவுடன் குளிய நிமிர முடியாமல், இருப்பதர்க்கு சத்து கட்டி என்பதற்கும் தடைபின இரத்த சரம்பு வழியாக சென்று முழங்கால், மூட்டி முதல் பாதம் வரை உபாதையுடன் வீக்கமும் கண்டு நடமாட சௌகரியம் கொடுக்காத இளம் பின்னை வாதகளையும் சொர்ப்பன உணர்ச்சி இல்லாத, தூரித ஸ்கலித, முதலிய வியாதிகளையும் 21 தினத்தில் பூர்ணமாய் கண்டித்து, நாத என்னும் நரம்புகளுக்கு சுத்த இரத்தத்தைஊட்டி முருக்கேற்றும் வல்லமையுடைய தோழன். உன்னி குளிர (கர்ப்ப இரணங்களை ஆற்றக் கூடிய) கோஷாயி கெந்தக ரசாயனத்தை உபயோகியுங்கள்.

3 வாரம் (21 நாள்) உபயோகிக்கும் கெந்தக ரசாயனம் ரூபாய் 6—0—0 உபயோகிக்கும் விதம் மருந்துடன்.

பார்சல் தபால் செலவு வேறு. மணி ஆர்டருடன் ரூ. 6—12—0 அனுப்பிவைக்கவும்.

டாக்டர். B. A. எதிராஜ்,

(கால்நாலைபரி)

கோஷாயி வைத்தியசாலை, தென்னூர், திருச்சி.

குடி அரசு வெளிநாட்டு ஏஜண்டுகள்

சிங்கப்பூர்.

Mhd. Dulfakir & Co.,
34, North Bridge Rd.

India Novel depot
73, Serangoon Road

கோலாலமபூர்.

The Selanger Stamp Co.,
Market Street

S. S. Abdulkadir,
South Indian Boookstore,
122, Pitty street, penang

Sorojini Vilas Coffee Club,
85: Paul Street,
Seramban N. S

The Central stores
41, Jalan Ibrahim,
Johore Bharu

C. Kandiah,
85, Sultan street, Klang.

S. G. Sami Agency,
3, Jalan roya,
Sungei Pattani
Kedah, F. M S

சிங்கப்பூரில் குடி அரசு பதிப்பகப்புஸ்தகங்கள் கிடைக்குமிடம்.

"மூன்னேற்றம்" ஆபீஸ்,
152, சிலிகி ரோட், சிங்கப்பூர்

சுயமரியாதை இயக்கப் பத்திரிகைகள்.

—:0:—

'குமரன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 5—0—0
வெளிநாடு வருடசந்தா 6—0—0

மாதப்பதிப்பு.

உள்நாடு வருடசந்தா 0—12—0
வெளிநாடுவருடசந்தா 1—0—0

ஆசிரியர்: சோ. முருகப்பா.

விலாசம்:—

மானேஜர், "குமரன்" காரைக்குடி
ராமநாதபுரம் ஜில்லா

'மூன்னேற்றம்'

வாரப்பதிப்பு

சிங்கப்பூரிலிருந்து வெளிவருவது

உள்நாடு சந்தா $. 3—0—0
இந்தியாவுக்கு ரூ. 5—0—0

ஆசிரியர்: கோ. சாரங்கபாணி

விலாசம்:—

மானேஜர், "மூன்னேற்றம்"
152 சிலிகிரோட், சிங்கப்பூர்

'புதுவைமுரசு'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

மானேஜர், "புதுவைமுரசு"
4 லல்லிதொலாந்தால் வீதி
புதுச்சேரி.

"நாடார் குலமித்திரன்"

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 4—0—0
வெளிநாடு ,, 5—0—0

ஆசிரியர்: சு. அ. முத்துநாடார்

விலாசம்:— மானேஜர்,
"நாடார்குல மித்திரன்"
அருப்புக்கோட்டை
ராமநாதபுரம் ஜில்லா.

'தமிழன்'

வாரப்பதிப்பு

உள்நாடு வருடசந்தா 3—0—0
வெளிநாடு ,, 4—0—0

ஆசிரியர்: ஜி. அப்பாதுரையார்

விலாசம்:—

மானேஜர் "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை P.O.
கோலார் தங்கவயல் (S. I.)

பஞ்சமா பாதகங்கள்

எவை?

ஏன் நிகழ்கின்றன?

அவற்றை நிறுத்தக் சமய, சமூக, அரசாங்கச் சட்டங்கள் ஆதரவளிக்கின்றனவா?

இதைப்பற்றி நீங்கள் எப்போதாவது யோசித்தீர்களா? இல்லையானால் இன்றே எழுதுங்கள். 52 பக்கங்கொண்ட புஸ்தகம் 0—2—6 அஞ்சு ஸ்டாம்புக்கு அனுப்பப்படும். விலாசம்:—

கோவை அ. அய்யாமுத்து
புஞ்சைப்புளியம்பட்டி,
(கோயமுத்தூர் ஜில்லா)

குடி அரசு கிடைக்குமிடம்.

திருப்பூர்.

ஆர். கருப்புசாமி,
பல்லடம் ரோடு.

சாத்தூர்.

எம். ஏ. முத்துசாமி பிள்ளை,
சுப்பிரமணியசாமி கோயில் வீதி.

கொளும்பு.

S. M. மீராமொய்தீன்,
80—பார்க் வீதி.

போர்ட் கொளும்பு

N. S. கந்தசாமி,
திராவிடன் ஏஜண்ட் முகிரி.

அநேக பரிசுகளும், தங்க மெடல்களும், ஏராளமான நற்சாட்சிகளும் பேற்ம உலகமெங்கும் புகழ்பெற்ம விளங்குவதோடு 25—8—23-ல் சென்னையிலும், 14—4—27-ல் மதுரையிலும் நடந்த வைத்திய மகாநாடுகளில் இவர் மருந்துகள் முதல்தர தேவ ஔஷதங்களென தங்க மெடல்களும், வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்.

பழநி, சி. எம். சாமி.

குருதாம்பர பஸ்பம்

இது சகல வியாதியையும் வேரற நீக்கும் சக்தியுடையது. முக்கியமாய் சூலை, கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம் சொரிகுஷ்டம், பொரிகுஷ்டம், விரிகுஷ்டம், எரிகுஷ்டம், சபாலகுஷ்டம், குறைநோய், சில்லட்டைக்கடி, கடிவிஷங்கள் 8-ம், நீராம்பல் பெருவயிறு, மகோதரம், நீர்க்கவுசை அண்டவாய்வு, ஆனைக்கால், உள்ளங்கை உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்றமுடைபவர்கள், ஆணிப்புண்கள். இராணி இன்னும் அநேக விதமானகொடிய கர்ம வியாதிகளும் கண்டிப்பாய்த் தீரும். 100 வேஷ பஸ்பம் அனுமானத்துடன் விலை ரூ. 50. 50-வேஷ ரூ. 25. 25-வேஷ ரூ. 12-8-0. எழைகளுக்குப் பாதிவிலை. பிரயுக்களுக்கு ரேட் வேறு.

இழந்த பலத்தை திரும்பப் பெறவேண்டுமா? மூளைக்கொதிப்பும், பலஹீனமும் நீங்க வேண்டுமா? எமது **மன்மத குளிகையை** உபயோகியுங்கள் திடகாத்திரர்களாய், வீர புருஷர்களாய், நல்ல ஆரோக்கியமும் ஆயுள் விர்த்தியு மடைந்து உலக வாழ்க்கையில் இன்புற்று வாழ்வீர்கள்.

தாது புஷ்டிக்கு நிகரற்றது. ஒரே குளிகையில் பரீட்சிக்கலாம். இழந்த ஆண்மையும் பலமும் திரும்பி வரும். நல்ல ஜீரணம், சுத்தவிர்த்தி, இந்திரியக்கட்டு, போகசக்தி, தாது புஷ்டி, இவற்றைத் தரவல்லது. எவ்வித பலஹீனம், தாது நஷ்டம், துரித ஸ்கலிதம், இடுப்புவலி உஷ்ணரோகங்கள் நீங்கும். ஒரு முறை பரீக்ஷித்தவர்களுக்கே உண்மை விளங்கும் 60 குளிகை ரூ. 5, 30 குளிகை ரூ. 3, மாதிரிக்கு கு. 20 ரூ. 2.

குரு அப்ரேக் சேந்தூரம்—நீரழிவுக்குக் கைகண்டது புட்டி 1-க்கு ரூ. 15.

பிரமேக நிவாரணி:—பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வேட்டை, நீர் எரிச்சல், குத்துதல் நிர்க்கும் புட்டி 1-க்கு ரூ. 2.

குறிப்பு:— பினங்கு முதலிய அன்னிய தேசவாசிகள் அட்வான்ஸ் ரூ. 5 உடன் ஆர்டரும் வி. பி. யில்லாத தேசவாசிகள் ரூ. 2 தபால் செலவும், மருந்துக் கிரயமும் சேர்த்து முன் பணத்துடன் ஆர்டரும் அனுப்பவேண்டும்.

ஏராளமான நற்சாட்சிகளையும், மற்ற அவிழ்தங்களையும் கியாட்லாக்கில் பார்க்கலாம்.

வைத்திய ஆசிரியர் சி. மஹலயப்பசாமி, நித்தியானந்த வைத்தியசாலை, பழநி S. I.

உண்மை விளக்கம் பதிப்பகத்தல் அச்சிடப்பட்டதோமதி நாகம்மாளால வெளியிடபபட்டது.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை